# மாகாண
# தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டம்
# வடமத்திய மாகாணம்



**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு**

பெருந்தெருக்கள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

03 ஆம் மாடி, "நிபுணதா பியச"

354 / 2, எல்விட்டிகல மாவத்தை

கொழும்பு - 05, இலங்கை.

தொலைபேசி: 94-(0)115849291

தொலைநகல்: 94(0)11-2555007

மின்னஞ்சல்: info@tvec.gov.lk, இணையம்: www.tvec.gov.lk

**மாகாண**

**தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டம்**

**வடமத்திய மாகாணம்**

**2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 வரை**

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு**

**திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு**

03 ஆம் மாடி, "நிபுணதா பியச",

354/2, எல்விட்டிகல மாவத்தை

கொழும்பு 05

**உள்ளடக்கம்**

**பக்கம்**

**அத்தியாயம் 01: அறிமுகம்**

1.1. பின்னணி

1.2. நியாயப்படுத்தல்

1.3. குறிக்கோள்கள்

1.4. செயற்பாடுகள்

1.5. பொருட்கள் மற்றும் முறைகள்

1.6. அறிக்கை தொடர்பான கண்ணோட்டம்

**அத்தியாயம் 2: வடமத்திய மாகாணத்தின் சமூக - பொருளாதார சூழல்**

2.1 பின்னணி

2.2 மாகாணத்தின் நிர்வாக கட்டமைப்பு

2.3 உயிர் பௌதிக சூழல்

2.4 வடமத்திய மாகாணத்தின் மக்கள் தொகை விபரம்

2.5 வடத்திய மாகாணத்தின் கல்வி துறை

2.6 தொழிலாளர் எண்ணிக்கை தொடர்பான எதிர்வுகூறல்

2.7 சாரம்சம்

**அத்தியாயம் 03: வாழ்வாதார தொழில்களிற்கான பயிற்சி தேவைகள்**

3.1. பின்னணி

3.2. மாகாணத்திலுள்ள வாழ்வாதார தொழில்கள்

3.3. வாழ்வாதார தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

3.4. வாழ்வாதார தொழிலாளர்கள் பெற்றுக்கொண்டுள்ள பயிற்சிகள்

3.5. சராம்சம் மற்றும் பரிந்துரைகள்

**அத்தியாயம் 04: தற்போதைய மற்றும் எதிர்வுகூறப்படுகின்ற கைத்தொழிற்துறைசார் மனிதவள தேவைப்பாடுகள்**

4.1. கைத்தொழிற்துறையின் போக்கு தொடர்பான மேலோட்டம்

4.2. தற்போது நிறுவகங்களினால் வழங்கப்படுகின்ற பயிற்சிகள் தொடர்பாக தொழில்வழங்குநர்களின் கருத்துக்கள்

4.3. கைத்தொழிற்துறைசார் தொழில்வாய்ப்புகள் தொடர்பான தகவல்கள்

4.4. தொழில்வழங்குநர்களினால் தெரிவிக்கப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையான தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள்

4.5. தொழில்வழங்குநர்களின் கருத்துக்கள் அடிப்படையிலான

எதிர்வுகூறல்களிற்கு மாறாக பொருளாதார/ கைத்தொழிற்துறையின் வளர்ச்சியின் அடிப்படையிலான எதிர்வுகூறல்கள்
4.6. சாரம்சம்

**அத்தியாயம் 05: தற்போதைய பயிற்சி விபரங்கள் - மாகாண தொழிலாளர் சந்தைக்கு திறனுடைய தொழிலாளர்களை வழங்கல்**

5.1. TVET நிறுவக வலையமைப்பு
5.2. மாகாணத்தில் தற்போது நடாத்தப்பட்டுவரும் **TVET** பாடநெறிகள்
5.3. மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தற்போதைய மற்றும் எதிர்வுகூறப்படுகின்ற பயிற்சி விளைவுகள்
5.4. கற்பித்தல், பயிற்சியளித்தல் மற்றும் கணிப்பீட்டு வளங்கள்
5.5. நிறுவகங்களின் ஊக்குவிப்பு மூலோபாயங்கள்
5.6. மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சி வழங்கல் மற்றும் திறனுடைய தொழிலாளர்கள் தொடர்பான தேவைகள் என்பவற்றுக்கிடையிலான பொருத்தப்பாடின்மை பற்றிய பகுப்பாய்வு

**அத்தியாயம் 06: பரிந்துரைகள் மற்றும் செயற்திட்டம்**

6.1. தொழிலாளர் பற்றிய தரவுகள் தொடர்பான பரிந்துரைகள்
6.2. வாழ்வாதார தொழிலாளர்களுக்கான திறன்கள்சார் பயிற்சிகள் தொடர்பான பரிந்துரைகள்
6.3. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் மற்றும் பொருத்தப்பாடு ஆகியவற்றினை மேம்படுத்துதல் தொடர்பான பரிந்துரைகள்
6.4. பயிற்சி நிறுவகங்களிற்கான மாணவர் உள்ளீர்ப்பினை அதிகரித்தல் மற்றும் மாகாணத்தில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியினை அபிவிருத்தி செய்தல் என்பன தொடர்பான பரிந்துரைகள்
6.5. வடமத்திய மாகாணத்திற்கான 2015 - 2020 வரைக்குமான செயற்திட்டம்
6.6. வரையறைகள்

## அட்டவணைகள் தொடர்பான பட்டியல்

பக்கம்


அட்டவணை 2.1: அனுராதபுர மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கைகள்

அட்டவணை 2.2: பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கைகள்

அட்டவணை 2.3: அனுராதபுர மாவட்டதிலுள்ள சனத்தொகை

அட்டவணை 2.4: அனுராதபுர மாவட்டதிலுள்ள இன அடிப்படையிலான சனத்தொகை

அட்டவணை 2.5: அனுராதபுர மாவட்டதிலுள்ள எழுத்தறிவு மற்றும்
பால் ஆகியவற்றின் அடிப்படையிலான சதவீத சனத்தொகை பரம்பல்
(10 வருடங்கள் மற்றும் அதனிலும் கூடிய)

அட்டவணை 2.6: பொலன்னறுவை மாவட்ட சனத்தொகை

அட்டவணை 2.7: பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள வயது அடிப்படையிலான சனத்தொகை

அட்டவணை 2.8: District பொலன்னறுவை மாவட்டதிலுள்ள இன அடிப்படையிலான சனத்தொகை

அட்டவணை 2.9 :பொலன்னறுவை மாவட்டதிலுள்ள எழுத்தறிவு மற்றும்
பால் ஆகியவற்றின் அடிப்படையிலான சதவீத சனத்தொகை பரம்பல்
(10 வருடங்கள் மற்றும் அதனிலும் கூடிய)

அட்டவணை 2.10: வகைகள் அடிப்படையில் மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை

அட்டவணை 2.11 - அனுராதபுர மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை

அட்டவணை 2.12 - பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை

அட்டவணை 2.13: வடமத்திய மாகாணத்திலுள்ள க.பொ.த (உ/ த) பிரிவில் தொழில்நுட்ப பிரிவினை கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை

அட்டவணை 2.14: 2015 ஆம் ஆண்டு க.பொ.த (உ/ த) பரீட்சையில் தொழில்நுட்ப பிரிவின் பெறுபேறுகள்

அட்டவணை 2.15: 2012 ஆம் ஆண்டில் க.பொ.த (சா/ த) பரீட்சையின் பெறுபேறுகள்

அட்டவணை 2.16: 2012 ஆம் ஆண்டில் க.பொ.த (உ/ த) பரீட்சையின் பெறுபேறுகள்

அட்டவணை 2.17: க.பொ.த (சா/ த) இன் பின்னர் தொழிலாளர் வர்க்கத்தினுள் உள்நுழைதல் தொடர்பாக ஐந்து வருடங்களுக்கான எதிர்வுகூறல்

அட்டவணை 2.18: க.பொ.த (உ/ த) இன் பின்னர் தொழிலாளர் வர்க்கத்தினுள் உள்நுழைதல் தொடர்பாக ஐந்து வருடங்களுக்கான எதிர்வுகூறல்

அட்டவணை 2.19: தொழிலாளர் வர்க்கத்தினுள் உள்நுழைபவர்களின் எண்ணிக்கை தொடர்பாக ஐந்து வருடங்களுக்கான எதிர்வுகூறல்

அட்டவணை 3.1: வடமத்திய மாகாணத்திலுள்ள ஒவ்வொரு உப பிரிவுகளிலும் உள்ள வாழ்வாதார தொழில் வகைகள்

அட்டவணை 3.2: அனுராதபுர மாவட்டத்திலுள்ள வாழ்வாதார தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்

அட்டவணை 3.3: பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள வாழ்வாதார தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்

அட்டவணை 3.4: அனுராதபுர மாவட்டத்திலுள்ள வாழ்வாதார தொழிலாளர்கள் ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ள பயிற்சிகள்

அட்டவணை 3.5: பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள வாழ்வாதார தொழிலாளர்கள் ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ள பயிற்சிகள்

அட்டவணை 3.6: கைத்தொழில் வகைகளின் அடிப்படையில் இலங்கையிலுள்ள வாழ்வாதார தொழிலாளர்களிற்கு திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட பயிற்சிகள்

அட்டவணை 3.7: பயிற்சி வழங்குநர்களின் அடிப்படையில் இலங்கையிலுள்ள வாழ்வாதார தொழிலாளர்களிற்கு திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட பயிற்சிகள்

அட்டவணை 3.8: வடமத்திய மாகாணத்திலுள்ள இரு மாவட்டங்களிலும் உள்ள நபர்களிற்கு தேவைப்படுகின்ற பயிற்சிகள்

அட்டவணை 4.1: 2014 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாகாணங்களின் பங்கு

அட்டவணை 4.2: 2014 ஆம் ஆண்டில் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைகளின் பங்கு

அட்டவணை 4.3: 2011 - 2012 இல் வடமத்திய மாகாண விவசாய துறையில் கைத்தொழிற்துறை மூலமான மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி (மில்லியன்களில்)

அட்டவணை 4.4: மாகாண ரீதியிலான கைத்தொழிற்துறை நிறுவக பரம்பல் (2012)

அட்டவணை 4.5: 2011 - 2012 இல் வடமத்திய மாகாண கைத்தொழிற்துறையில் கைத்தொழிற்துறை மூலமான மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி (மில்லியன்களில்)

அட்டவணை 4.6. 2011 - 2012 இல் வடமத்திய மாகாண சேவை துறையில் கைத்தொழிற்துறை மூலமான மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி (மில்லியன்களில்)

அட்டவணை 4.7: 2013 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்காக வெளியேறிய நபர்களின் எண்ணிக்கை

அட்டவணை 4.8: மாதிரிகள் பற்றிய விபரங்கள்

அட்டவணை 4.9: கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொடர்பாக தொழில்வழங்குநர்களின் கருத்துக்கள்

அட்டவணை 4.10: கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொடர்பாக தொழில்வழங்குநர்களின் கருத்துக்கள்
அட்டவணை 4.11: அனுராதபுர மாவட்டத்தில் உற்பத்தி துறை தொடர்பாக தற்போது நிலவுகின்ற மற்றும் விரும்பப்படுகின்ற தொழில்வாய்ப்பு விபரங்கள்
அட்டவணை 4.12: பொலன்னறுவை மாவட்டத்தில் உற்பத்தி துறை தொடர்பாக தற்போது நிலவுகின்ற மற்றும் விரும்பப்படுகின்ற தொழில்வாய்ப்பு விபரங்கள்
அட்டவணை 4.13: அனுராதபுர மாவட்டத்தில் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா துறை தொடர்பாக தற்போது நிலவுகின்ற மற்றும் விரும்பப்படுகின்ற தொழில்வாய்ப்பு விபரங்கள்
அட்டவணை 4.14: பொலன்னறுவை மாவட்டத்தில் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா துறை தொடர்பாக தற்போது நிலவுகின்ற மற்றும் விரும்பப்படுகின்ற தொழில்வாய்ப்பு விபரங்கள்
அட்டவணை 4.15: அனுராதபுர மாவட்டத்தில் சேவைகள் துறை தொடர்பாக தற்போது நிலவுகின்ற மற்றும் விரும்பப்படுகின்ற தொழில்வாய்ப்பு விபரங்கள்
அட்டவணை 4.16: பொலன்னறுவை மாவட்டத்தில் சேவைகள் துறை தொடர்பாக தற்போது நிலவுகின்ற மற்றும் விரும்பப்படுகின்ற தொழில்வாய்ப்பு விபரங்கள்
அட்டவணை 4.17: அனுராதபுர மாவட்டத்தில் எதிர்வுகூறப்படுகின்ற மொத்த மனிதவள கேள்விகள்
அட்டவணை 4.18: பொலன்னறுவை மாவட்டத்தில் எதிர்வுகூறப்படுகின்ற மொத்த மனிதவள கேள்விகள்
அட்டவணை 4.19: வடமத்திய மாகாணத்தில் எதிர்வுகூறப்படுகின்ற மொத்த மனிதவள கேள்விகள்
அட்டவணை 5.1: அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள TVET நிறுவகங்கள் தொடர்பான பட்டியல்
அட்டவணை 5.2: பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள TVET நிறுவகங்கள் தொடர்பான பட்டியல்
அட்டவணை 5.3: அனுராதபுர மாவட்டதில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் TVET பாடநெறிகள்
அட்டவணை 5.4: பொலன்னறுவை மாவட்டதில் மேற்கொள்ளப்பட்டுவரும் TVET பாடநெறிகள் தொடர்பான பட்டியல்
அட்டவணை 5.5: அனுராதபுர மாவட்டத்தில் தற்போது நிலவுகின்ற மற்றும் எதிர்வுகூறப்படுகின்ற மொத்த பயிற்சி விளைவுகள்
அட்டவணை 5.6: பொலன்னறுவை மாவட்டத்தில் தற்போது நிலவுகின்ற மற்றும் எதிர்வுகூறப்படுகின்ற மொத்த பயிற்சி விளைவுகள்
அட்டவணை 5.7: வடமத்திய மாகாணத்தில் தற்போது நிலவுகின்ற மற்றும் எதிர்வுகூறப்படுகின்ற மொத்த பயிற்சி விளைவுகள்

அட்டவணை 5.8. 2015 ஆம் ஆண்டில் தொழில்நுட்பவியல் கல்லூரியினால் பல்வேறுபட்ட விசேட பயிற்சி பாடநெறிகளின் பொருட்டு பயிற்சி வழங்கல்
அட்டவணை 5.9: பயிற்சியின் தரம் மற்றும் பொருத்தப்பாடு
அட்டவணை 5.10: விளம்பரப்படுத்தும் ஊடகங்கள்
அட்டவணை 5.11: VET நிறுவகங்களின் ஊக்குவிப்பு மூலோபாயங்கள்
அட்டவணை 5.12: அனுராதபுர மாவட்டத்தில் காணப்படும் கேள்வி மற்றும் வழங்கல் இடையிலான பொருத்தப்பாடின்மை
அட்டவணை 5.13: பொலன்னறுவை மாவட்டத்தில் காணப்படும் கேள்வி மற்றும் வழங்கல் இடையிலான பொருத்தப்பாடின்மை
அட்டவணை 5.14: வடமத்திய மாகாணத்தில் காணப்படும் கேள்வி மற்றும் வழங்கல் இடையிலான பொருத்தப்பாடின்மை
அட்டவணை 5.15: வடமத்திய மாகாணத்தில் காணப்படும் பொருத்தப்பாடின்மை, 2016 - 2020
அட்டவணை 6.1: ஓர் செயற்திட்டம்

## வரைபடங்கள் தொடர்பான பட்டியல்

பக்கம்

வரைபடம் 2.1: மத்திய அரசின் நிர்வாக கட்டமைப்பு
வரைபடம் 2.2: மாகாண சபையின் நிர்வாக ஒழுங்கமைப்பு

## சுருக்கங்கள்

| | | |
|---|---|---|
| BLTI | = | பிஷப் லியோ தொழில்நுட்ப நிறுவகம் |
| CAA | = | கணனி பிரயோக உதவியாளர் |
| COT | = | தொழில்நுட்பவியல் கல்லூரி |
| DOA | = | விவசாய திணைக்களம் |
| DS | = | பிரதேச செயலகம் |
| DTC | = | மாவட்ட பயிற்சி நிலையம் |
| DTET | = | தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் |
| DVTC | = | மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் |
| FDI | = | வெளிநாட்டு நேரடி முதலீடு |
| FIOHDF | = | எதிர்காலம் எமது கைகளில் அபிவிருத்தி நிதியம் |
| GCE (O/L) | = | கல்வி பொது தராதர பத்திர (சாதாரண தரம்) |
| GCE (A/L) | = | கல்வி பொது தராதர பத்திர (உயர் தரம்) |
| GDP | = | மொத்த தேசிய உற்பத்தி |
| GND | = | கிராம அலுவலர் பிரிவுகள் |
| HR | = | மனித வளங்கள் |
| ICT | = | தகவல் மற்றும் தொடர்பாடல தொழில்நுட்பம் |
| MC | = | மாநகர சபை |
| NAITA | = | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை |
| NC | = | தேசிய சான்றிதழ் |
| NCP | = | வடமத்திய மாகாணம் |
| NGO | = | அரச சார்பற்ற நிறுவகங்கள் |
| NVQF | = | தேசிய தொழிற் தகைமை சட்டகம் |
| NYSC | = | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் |
| OIC | = | பொறுப்பதிகாரி |
| PS | = | பிரதேச சபை |
| SATI | = | புனித அந்தோனியார் தொழில்நுட்ப நிறுவகம் |
| SDA | = | திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்கள் |
| SLITHM | = | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் |
| SLTDA | = | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை |
| SMEs | = | சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் |
| SOSV | = | SOS சிறுவர் கிராமங்களிலுள்ள தொழில்நுட்ப கல்லூரிகள் |
| TC | = | தொழில்நுட்ப கல்லூரி |
| TV | = | தொலைக்காட்சி |
| TVEC | = | மூன்றாம் நிலைக்கல்வி,தொழிற்கல்வி ஆணைக்குழு |

| | | |
|---|---|---|
| TVET | = | தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி |
| UC | = | நகரசபை |
| VET | = | தொழிற்கல்வி மற்றும் பயிற்சி |
| VTA | = | தொழிற்பயிற்சி அதிகாரசபை |
| VTC | = | தொழிற் பயிற்சி நிலையம் |
| WDC | = | பெண்கள் அபிவிருத்தி நிலையம் |

## பிரதான சொற்கூறுகளின் வரைவிலக்கணங்கள்

| | |
|---|---|
| தொழில்நுட்ப கல்வி:- | வேலைவாய்ப்புகளின் பொருட்டு மாணவர்களிற்கு வழங்கப்படும் கல்வி மற்றும் தொழில்சார் தயார்படுத்தல்கள் பிரயோக விஞ்ஞானம் மற்றும் நவீன தொழில்நுட்பவியல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டுள்ளன. இது உடல் உழைப்பு திறன்சார் நிபுணத்துவத்தினை பெற்றுக்கொள்வதிலும் பார்க்க விஞ்ஞான மற்றும் கணித அடிப்படை கோட்பாடுகளினை விளங்கிக்கொள்ளல் மற்றும் செய்முறை பிரயோகம் ஆகியவற்றினை வலியுறுத்துகின்றது |
| தொழிற்கல்வி:- | உடல் உழைப்பு திறன்களின் அடிப்படையில் ஓர் குறிப்பிட்ட தொழிற்துறையில் பிரயோக அனுபவத்தினை வழங்குகின்ற கல்வி மற்றும் பயிற்சி தொழிற்கல்வி ஆகும். |
| பயிலுநர்:- | சில உடல் உழைப்பு திறன்களின் நிபுணத்துவம் |
| திறன் மிக்க தொழிலாளர்:- | அதியுயர் வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றுடன் கூடியதாக ஓர் குறிப்பிட்ட செயலினை ஆற்றுவதற்கான விசேட திறன்கள், பயிற்சி, அறிவு மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆற்றல் என்பவற்றினை கொண்டுள்ள தொழிலாளர் திறன் மிக்க தொழிலாளர் ஆவார். |
| பகுதி-திறன் மிக்க தொழிலாளர்:- | சிறிதளவு வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றுடன் கூடியதாக ஓர் குறிப்பிட்ட செயலினை ஆற்றுவதற்கான சிறிதளவு திறன்கள், பயிற்சி, அறிவு மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆற்றல் என்பவற்றினை கொண்டுள்ள தொழிலாளர் பகுதி-திறன் மிக்க தொழிலாளர் ஆவார். |

வாழ்வாதாரம்:- ஓர் வாழ்வாதாரமானது வாழ்வதற்கு அவசியமான ஆற்றல்கள், சொத்துகள் (களஞ்சியங்கள், வளங்கள், உரிமை கோரல்கள் மற்றும் அணுகுதல்) மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது: ஓர் வாழ்வாதாரமானது நீடித்து நிலைக்கக்கூடியது அது அழுத்தங்கள் மற்றும் அதிர்ச்சிகள் ஆகியவற்றினை சமாளித்து அதிலிருந்து மீளுகின்றது, அதன் ஆற்றல்கள் மற்றும் சொத்துகளை பேணுகின்றது அல்லது மேம்படுத்துகின்றது, மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு நீடித்து நிலைக்கக்கூடிய வாழ்வாதார சந்தர்ப்பங்களை வழங்குகின்றது; மற்றும் அது உள்ளூர் மற்றும் உலகலாவிய மட்டங்கள் மற்றும் குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் ஏனைய வாழ்வாதாரங்களின் தேறிய இலாபங்களிற்கு பங்களிப்பு செய்கின்றது.

கூட்டு வளர்ச்சி வீதம் :- ஓர் பெறுமதியின் வளர்ச்சி வீதத்தினை தீர்மானிக்கின்ற அனைத்து சாத்தியமான காரணிகளையும் உள்ளடக்கக்கூடியதாக குறித்த காலப்பகுதிக்கான அப் பெறுமதியின் வருடாந்த வளர்ச்சி வீதம் கூட்டு வளர்ச்சி வீதமாகும்.

தொழிலாளர்கள்:- ஓர் குறித்த நேரத்தில் வேலையில் ஈடுபடக்கூடிய உண்மையான நபர்களின் எண்ணிக்கையாகும். இது வேலைவாய்ப்பிலுள்ள மற்றும் வேலைவாய்ப்பற்ற நபர்களை உள்ளடக்குகின்றது.

## நிறைவேற்று சராம்சம்

VET திட்டத்தின் தயாரிப்பினை பல்வேறு தளங்களில் நியாயப்படுத்தலாம். முதலாவதாக, முறையான பயிற்சிகள் தேவைப்படுகின்ற தொழிற்துறை நிறுவகங்களில் பிழையான மற்றும் முறைசாரா பயிற்சிகளை பின்பற்றியுள்ள நபர்கள் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டு வருகின்றனர். இரண்டாவதாக, பயிற்சி வழங்கலானது பெரும்பாலும் வழங்கலை அடிப்படையாக கொண்டுள்ளதுடன் அவை கேள்விகளை அடிப்படையாக கொண்டிருக்கவில்லை. மூன்றாவதாக, அனேகமான இளைஞர்கள் தனியார் துறையினரின் தேவைகளை மிகவும் குறைந்தளவிலும் பாரம்பரியமாக அரச துறைசார் தொழில்வாய்ப்புகளை கூடுதலாக நோக்கியதுமான முறைமையிற்கு முகங்கொடுக்கின்றார்கள். நான்காவதாக, அனேகமான நிறுவகங்கள் பிரதேச மற்றும் தேசிய தேவைகளின் பொருட்டு கற்பித்தல் மற்றும் பயிற்றுவித்தல் என்பவற்றினை மேற்கொள்வதில்லை. ஐந்தாவதாக, பாரம்பரியமாக முறைசாரா பயிற்சிகளை பெற்ற பயிலுநர்களே நாட்டிலுள்ள பிரதான தொழிற்துறை நிறுவகங்களில் தொழில்களில் ஈடுபட்டுவருவதுடன் மாறாக அரச துறை நிறுவகங்களினாலும் மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவகங்களினாலும் வழங்கப்படுகின்ற TVET ஆனது புறக்கணிக்கப்பு மற்றும் பொருத்தமற்ற தன்மை என்பவற்றினால் பாதிக்கப்பட்டு வருகின்றது என தோன்றுகின்றது. ஆறாவதாக, முறைசாரா பிரிவினரின் பயிற்சிகளை விடுத்து தொழில் தேடுநர்களிற்கு அடையாளத்தினை வழங்கும் முகமாக தேசிய தொழிற் தகைமை சட்டகத்தினை (NVQF) அமுலாக்குதல் மற்றும் TVEC இனது திறன்களிற்கான சான்றளிப்பு முறைமைகளை நடைமுறைப்படுத்துதல் என்பவற்றுக்கு தற்போதைய நிலையில் தராதர அங்கீகாரமானது தேவைப்படுகின்றது. இறுதியாக, கல்வி மற்றும் பயிற்சி நிறுவகங்கள் கல்வி மற்றும் பயிற்சி வழங்கல்களின் அனைத்து மட்டங்களிலும் தனியார் துறையினருடன் மிகக் குறைந்த தொடர்பினை பேணிவருவது போல தோன்றுகின்றது.

TVET திட்டத்தின் நோக்கங்களாவன: மாகாணத்திலுள்ள தொழிலாளர்களின் போக்கினை மதிப்பீடு செய்தல், மற்றும் அடுத்த ஐந்து வருடங்களிற்கான எதிர்வுகூறல்களை மேற்கொள்ளல்; அடுத்த ஐந்து வருட காலப்பகுதிக்கான கைத்தொழிற் துறையினரிற்கான திறனுடைய மற்றும் பகுதியான திறனுடைய தொழிலாளர்களிற்கான தேவைகளை கணிப்பிடுதல்; நியாயமான பரிந்துரைகளை மேற்கொள்ளும் பொருட்டு தரவுகளை சேகரித்தல் மற்றும் பெறுபேறுகள் மற்றும் முடிவுகளிற்கு வருதல் என்பவற்றிற்கான ஓர் முறையான செயன்முறையானது அமுல்படுத்தப்பட்டது. முதலாவதாக, அடிப்படையான தரவுகளை சேகரிக்கும் பொருட்டு TVEC மற்றும் வடமத்திய மாகாணசபை ஆகியவற்றுடன் இணைந்து பங்காளிகளுடனான ஆலோசனை செலமர்கள் அனுராதபுரத்தில் இடம்பெற்றன. இரண்டாவதாக, தொழிலாளர் சந்தை இயல்புகள் உள்ளடங்கலாக மாகாணத்தின்

சமூக பொருளாதார சூழல் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் பொருட்டு துணையான தரவுகளின் பல்வேறுபட்ட மூலங்கள் பயன்படுத்தப்பட்டன. மூன்றாவதாக, அடுத்த ஐந்து வருடங்களிற்கு பிரதான கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களிற்கான தொழிலாளர்களின் தேவைப்பாடுகள் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் பொருட்டு பிரதேச செயலகங்கள், மாகாணத்திலுள்ள ஏனைய அரச முகவர்கள், வர்த்தக சம்மேளனங்கள் மற்றும் கைத்தொழிற்துறை நிறுவகங்கள் ஆகியவற்றிலிருந்து அனைத்து கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களையும் பிரதிபலிக்கக்கூடியதாக பதிவு செய்யப்பட்ட மற்றும் பொருத்தமான அனைத்து கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களும் ஓர் விரிவான கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மூலமான தரவு சேகரிப்புக்கு உட்படுத்தப்பட்டன. நான்காவதாக, மாகாணத்திலுள்ள கல்வி மற்றும் பயிற்சி வழங்குநர்களிடமிருந்து தற்போது மேற்கொள்ளப்படுகின்ற பாடநெறிகள் மற்றும் அவை கற்பிக்கப்படும் தரம் ஆகியன தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்கு கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மூலமான தரவு சேகரிப்பானது மேற்கொள்ளப்பட்டது. ஐந்தாவதாக, பயிலுநர்களின் திருப்தி தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்கு மாகாணத்திலுள்ள கல்வி மற்றும் பயிற்சி நிறுவகங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர் மாதிரியிடம் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து தரவு சேகரிப்பானது மேற்கொள்ளப்பட்டது. ஆறாவதாக, TVET நிகழ்ச்சித்திட்டங்கள்/ பாடநெறிகள் பற்றிய பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் தொடர்பான தரம் சார்ந்த தரவுகளை சேகரிப்பதற்கு தெரிவுசெய்யப்பட்ட குறித்த எண்ணிக்கையான அரச அலுவலர்கள், வர்த்தக சம்மேளனங்கள் மற்றும் கைதொழிற்துறைசார் நிறுவகங்கள் என்பவற்றின் உறுப்பினர்கள், கல்வி மற்றும் பயிற்சி வழங்குநர்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் இலக்கு குழு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஏழாவதாக, வாழ்வாதார தொழிலாளர்களிற்கான சாத்தியமான பயிற்சி தேவைகள் தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்காக மாகாணத்தில் வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுடன் இலக்கு குழு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எட்டாவதாக, கருத்துக்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் மாகாணத்திலுள்ள கைத்தொழிற்துறையினரின் துறைசார் முன்மொழிவுகளை செல்லுபடியாக்குதல் என்பவற்றின் பொருட்டு அனுராதபுரத்தில் செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக, முன்மொழியப்பட்ட வரைவு VET திட்டம் தொடர்பான கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு TVEC மற்றும் வடமத்திய மாகணசபை ஆகியவற்றுடன் இணைந்து செல்லுபடியாக்குதல் செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பங்குபற்றிய பங்காளிகளினால் திட்டத்திற்கான ஒப்புதலானது அளிக்கப்பட்டுள்ளது.

இக் கற்கையானது வாழ்வாதார துறை மற்றும் TVET துறை ஆகியவற்றின் பயிற்சி தேவைகளை அடையாளங்கண்டுள்ளது. சில விடயங்களில் மிகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வரும் அதேவேளை ஏனைய சில விடயங்கள் பற்றிய பயிற்சி

வழங்கல்களில் பற்றாக்குறையான நிலைமையானது காணப்படுவது கேள்விகள் தொடர்பான தரவு சேகரிப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாறிவரும் கைத்தொழிற்துறை மற்றும் பொருளாதார சூழல் ஆகியவற்றின் விளைவாக உருவாகிவரும் புதிய தொழில்களிற்கான தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தேவைப்படுகின்றன. இவ்வாறான புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புபட்ட உற்பத்தி செயன்முறை பற்றிய பல்வேறுபட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தேவையாக காணப்படுகின்றன. மாகாணத்திலுள்ள பயிற்சி வழங்கல்களுடன் தொடர்புடைய விசேட பிரச்சினைகளை முகங்கொடுப்பதற்கு விசேட பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன.

இக் கற்கையானது பல முக்கிய பொதுவான கற்கை முடிவுகளை வெளிக்கொணர்ந்துள்ளது. முதலாவதாக, பல்வேறு அரச திட்டங்களினூடாக ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ள வாழ்வாதார பயிற்சித்திட்டங்கள், குறித்த தொழில்கள் தொடர்பான “விழிப்புணர்வு மேம்படுத்தல்” அல்லது “அறிவு” நோக்கியதாக பெரிதும் பக்கச்சார்புடையதாகவுள்ளது. குறித்த தொழில் தொடர்பான “விசேட திறன்கள்” காணப்படவில்லை என்ற எண்ணப்பாடனது வாழ்வாதார தொழிலாளர்களிடையில் நிலவுகின்றது. இரண்டாவதாக, மாகாணத்திலுள்ள கைத்தொழிற்துறையில் முறைசாரா பொருளாதார செயற்பாடுகள் மற்றும் திறனற்ற தொழிலாளர்கள் அதிகளவில் செல்வாக்கு செலுத்துகின்றது. மூன்றாவதாக, அனேகமான கைத்தொழிற்துறைசார் நிறுவகங்கள் நிரந்தரமான தொழில்வாய்ப்புகளிற்கு பிரதியீடாக TVET நிறுவகங்களின் பயிலுநர்களை நம்பியிருக்கின்றன என தோன்றுகின்றது. இது கைத்தொழிற்துறைசார் நிறுவகங்கள் நிரந்தர ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதை தடுக்கின்றது. நான்காவதாக, பெரும்பாலான தொழில்களிற்கு தொழிற் தரப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையானது திறனுடைய தொழிலாளர்களுக்கான கேள்விகளை பாதித்துள்ளது. ஓர் குறித்த தொழில் தொடர்பாக, அதிகூடிய திறன்மிக்க நபர்களை குறைவான திறன்மிக்க நபர்களிடமிருந்து பிரித்தறிவதற்கான முறைமையானது காணப்படவில்லை. ஐந்தாவதாக, மாகாணத்திலுள்ள முறைசார் பொருளாதார செயற்பாடுகளின் அளவானது மொத்த பொருளாதார செயற்பாடுகளில் ஏறத்தாழ 20 சதவீதமாகும். அத்துடன் நாட்கூலி பெறும் தொழிலாளர்கள் உள்ள முறைசார் துறைகள் மிகவும் பலவீனமாக உள்ளன. இறுதியாக, க.பொ.த (உ/த) தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கு தேவையான போதிய எண்ணிக்கையான பாடநெறிகள் TVET நிறுவகங்களினால் மேற்கொள்ளப்படவில்லை என்பது பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்முக கலந்துரையாடல்களின் போது தெரியவந்துள்ளது.

# அத்தியாயம் 01

# அறிமுகம்

## 1.1. பின்னணி

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) ஆனது மனிதவள மற்றும் பயிற்சி தேவைகளை அடையாளங்காணுதல் அடையாளங்காணப்பட்ட அபிவிருத்திசார் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு அவசியமான சாத்தியப்பாடுள்ள மூலோபாய திட்டங்களை அபிவிருத்தி செய்தல் ஆகியவை தொடர்பில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலிற்கு அமைவாக நாட்டின் ஒவ்வொரு மாகாணத்தின் பொருட்டும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை (VET) அபிவிருத்தி செய்வதற்கான இலட்சிய திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. இவ் அறிக்கையானது கௌரவ முதலமைச்சர் அவர்களின் கட்டளைப்படி வடமத்திய மாகாணசபையுடன் (NCPC) இணைந்து TVEC ஆனது மேற்கொண்ட திட்டத்தின் விளைவே ஆகும். இவ் அறிக்கையானது ஐந்து வருடங்களிற்கு வடமத்திய மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை தயாரிக்கும் பொதுவான மற்றும் விசேட நோக்கங்களினை ஈடுசெய்யவதற்கான வழிகாட்டல்களிற்கு இசைவான TVEC இன் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

## 1.2. காரண விளக்கம்

இலங்கையை அடுத்த ஆசியவின் ஆச்சரியமாக உருவாக்கும் செயல்முறைக்கு உதவுவதற்காக இலங்கையில் திறன் மிக்க தொழிலாளர்களை உருவாக்குவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அரசு உயர் கல்வி முறைமை மற்றும் TVET ஆகியவற்றின் ஊடாக அறிவு மற்றும் திறன்கள் சார்ந்த சமூகத்தை உருவாக்குவதற்கான தெளிவான திட்டத்துடனும் மற்றும் முதலீட்டுடனும் கூடியதாக ஓர் நீண்ட கால மூலோபாயத்தை முன்வைத்துள்ளது. இந்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கையை எளிதாக்குவதற்கு எதிர்கால திறன்கள் தொடர்பான தேவைப்பாடுகள் மற்றும் பயிற்சி வழங்கல்கள் ஆகியவற்றினை அடையாளம் காணபதற்கு அவசியமான தெளிவான திட்டங்கள் தேவையாக உள்ளன.

எவ்வாறெனினும், இலங்கையில் தொழிற்சந்தை தகவல் மற்றும் தொழிலாளர் தரவுகள் ஆகியவற்றின் மூலம் ஆதாரமாக காட்டப்படுகின்ற நிரப்பப்படாத வேலைவாய்ப்புகள் மற்றும் நிரந்தர வேலைவாய்ப்பின்மை என்பன கணிசமான எண்ணிக்கையில் காணப்படுகின்றன. ஓர் VET திட்டத்தினை தயாரித்தல் பல காரணங்களால் நியாயப்படுத்தப்படலாம். முதலாவதாக, முறையான பயிற்சிகள் தேவைப்படுகின்ற தொழிற்துறை நிறுவகங்களில் பிழையான மற்றும் முறைசாரா

பயிற்சிகளை பின்பற்றியுள்ள நபர்கள் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டு வருகின்றனர். இரண்டாவதாக, பயிற்சி வழங்கலானது பெரும்பாலும் வழங்கலை அடிப்படையாக கொண்டுள்ளதுடன் அவை கேள்விகளை அடிப்படையாக கொண்டிருக்கவில்லை. பெரிய அளவிலான பணிநிலை வெற்றிடங்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அதிகளவிலான வேலைவாய்ப்பின்மையானது காணப்படுவதாவது நாட்டில் திறன்களிடையில் பொருத்தப்பாடுகள் காணப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துகின்றது. நாட்டில் தற்போது நிலவும் திறன்களின் பொருத்தப்பாடற்ற தன்மையானது தரம் குறைந்த கல்வி மற்றும் கல்வி அமைப்புகள் மற்றும் தொழில்வழங்குநர்களிடையில் தொடர்புகள் காணப்படாமை ஆகிய அடிப்படை பிரச்சினைகள் இருப்பதை சுட்டிக்காட்டுகின்றன.

மூன்றாவதாக, அனேகமான இளைஞர்கள் தனியார் துறையினரின் தேவைகளை மிகவும் குறைந்தளவிலும் பாரம்பரியமாக அரச துறைசார் தொழில்வாய்ப்புகளை கூடுதலாக நோக்கியதுமான முறைமையிற்கு முகங்கொடுக்கின்றார்கள். பெரும்பாலான நிறுவகங்கள் பிராந்திய மற்றும் தேசிய தேவைகளின் நிமித்தம் மக்களுக்கு கல்வி மற்றும் பயிற்சியினை அளிப்பதில்லை. தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) ஆனது இளைஞர்களுக்கு கூடுதலான பிரயோக திறன்கள் மற்றும் தொழிலாளர் சந்தையில் சிறந்த வாய்ப்புகள் என்பவற்றினை வழங்குவதற்கான சாத்தியத்தினை கொண்டுள்ளது. ஆயினும் அவை முறையாக அங்கீகரிக்கப்பட்டு எதிர்நோக்கப்படல் வேண்டும். ஐந்தாவதாக, பாரம்பரியமாக முறைசாரா பயிற்சிகளை பெற்ற பயிலுநர்களே நாட்டிலுள்ள பிரதான தொழிற்துறை நிறுவகங்களில் தொழில்களில் ஈடுபட்டுவருவதுடன் மாறாக அரச துறை நிறுவகங்களினாலும் மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவகங்களினாலும் வழங்கப்படுகின்ற TVET ஆனது புறக்கணிக்கப்பு மற்றும் பொருத்தமற்ற தன்மை என்பவற்றினால் பாதிக்கப்பட்டு வருகின்றது என தோன்றுகின்றது. இதன் விளைவாக தரம் குறைந்த வெளியீடு, வள வீண்விரயம், வினைத்திறனற்ற தன்மை, குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் தொழில்துறையில் மந்தமான வளர்ச்சி ஆகியன ஏற்படுகின்றன.

ஆறாவதாக, முறைசாரா பிரிவினரின் பயிற்சிகளை விடுத்து தொழில் தேடுநர்களிற்கு அடையாளத்தினை வழங்கும் முகமாக தேசிய தொழிற் தகைமை சட்டகத்தினை (NVQF) அமுலாக்குதல் மற்றும் TVEC இனது திறன்களிற்கான சான்றளிப்பு முறைமைகளை நடைமுறைப்படுத்துதல் என்பவற்றுக்கு தற்போதைய நிலையில் தராதர அங்கீகாரமானது தேவைப்படுகின்றது. ஏழாவதாக, கல்வி மற்றும் பயிற்சி நிறுவகங்கள் கல்வி மற்றும் பயிற்சி வழங்கல்களின் அனைத்து மட்டங்களிலும் தனியார் துறையினருடன் மிகக் குறைந்த தொடர்பினை பேணிவருவது போல தோன்றுகின்றது. இறுதியாக, பகுதி திறன்மிக்க மற்றும் திறன்மிக்க மனிதவளத்திற்கான உயர்ந்த மற்றும் அதிகரித்து வரும் உலகளாவிய தேவைகளிற்கு

ஏற்றவாறு தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்வியினை அபிவிருத்தி செய்வதன் மூலம் குறுகிய மற்றும் நடுத்தர காலப்பகுதியில் நாட்டில் நிலவும் வேலைவாய்ப்பின்மை தொடர்பான பிரச்சினையினை தீர்ப்பதற்கு ஏதுவாக இலங்கையானது சில உலகலாவிய தொழில்களை தட்டிக்கொள்ளலாம் என இலங்கையின் பாராளுமன்றத்திற்கு அண்மை காலங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட உரைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளன. க.பொ.த (உ/த) இனை தொடர்வதற்கான தகுதிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் மற்றும் க.பொ.த (உ/த) இன் பின்னர் பல்கலைக்கழக அனுமதிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் ஆகியோருக்கு அடிப்படையில் பயனடையக்கூடிய விதத்தில் தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்வியினை அபிவருத்தி செய்யவேண்டியதன் முக்கியத்துவத்தினை 2013 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட உரைகள் தீவிரமாக வலியுறுத்தியுள்ளன. இவ் விடயத்தினை முன்னேற்றம் செய்வதற்காக நிதி ஒதுக்கீடுகளுடன் கூடியதாக ஓர் இலட்சிய திட்டத்தினை அரசாங்கம் முன்வைத்துள்ளது.

இதன் விளைவாக, தொழிற்துறையிற்கான திறன்மிக்க மற்றும் பகுதி திறன்மிக்க மனிதவள கோரிக்கைகள் மற்றும் தொழிற் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்/ பாடநெறிகளின் தரம் மற்றும் பொருத்தப்பாடு என்பன சரியான முறையில் அடையாளங்காணப்படல் வேண்டும். தேவைகளிற்கேற்ப தொழிற்துறையிற்கு திறன்மிக்க மற்றும் பகுதி திறன்மிக்க மனிதவள வழங்கல்களை மேற்கொள்வதில் வெற்றிகரமாக திகழ்வதற்கு ஏதுவாக மாகாணத்தில் உள்ள TVET முறைமை நிறுவகங்களிற்கு அவை விரும்புகின்ற முடிவுகள் பற்றிய ஓர் தெளிவான பார்வையானது தேவைப்படுவதுடன் எதிர்கால வேலைவாய்ப்புக்கள் தொடர்பான நம்பிக்கை மிக்க துறைகளில் கவனம் செலுத்துதல் வேண்டும். கைத்தொழிற்துறையின் மாறிவரும் மற்றும் நிலையற்ற எதிர்கால தொழில்வாய்ப்புகளிற்கு முகங்கொடுக்கும் வகையில் தற்போது காணப்படும் பாடநெறிகளை தொடர்ச்சியாக மேம்படுத்துதல் மற்றும் புதிய பாடநெறிகளை அறிமுகம் செய்தல் என்பன தேவையாகவுள்ளன. TVET திட்டமானது முக்கிய தொழிற் துறைகளின் மாறிவரும் மற்றும் நிலையற்ற மனிதவள கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக வடமத்திய மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ பாடநெறிகளின் வழங்கல்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு TVEC மற்றும் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்களுக்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.3. நோக்கங்கள்

i. மாகாணத்தில் நிலவும் தொழிலாளர்களின் போக்குகளை மதிப்பீடு செய்வதல் மற்றும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான எதிர்வுகூறலை மேற்கொள்ளல்,

ii. அடுத்த ஐந்து ஆண்டுகளிற்கு வடமத்திய மாகாணத்திலுள்ள கைத்தொழிற்துறையிற்கான திறன்மிக்க மற்றும் பகுதி திறன்மிக்க தொழிலாளர்களுக்கான தேவைகளை மதிப்பீடு செய்தல்,

iii. அடுத்த ஐந்து ஆண்டுகளிற்கு நிறுவகங்களினால் மேற்கொள்ளப்படும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழங்கல்களை மதிப்பீடு செய்தல்,

iv. மாகாணத்தில் உள்ள நிறுவகங்களினால் வழங்கப்படும் பல்வேறு பாடநெறிகளின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்தல்,

v. TVET நிகழ்ச்சித்திட்டங்களை எளிதாக்குதல் மற்றும் தூண்டுதல் என்பவற்றின் பொருட்டு மாகாணத்திலுள்ள நிறுவக ஏற்பாடுகள் மற்றும் ஊக்குவிப்பு கட்டமைப்புகள் ஆகியவற்றினை ஆய்வு செய்வதல்,

vi. மாகாணத்திலுள்ள தொழிற்கல்வி மற்றும் பயிற்சி பாடநெறிகளிற்கான வழங்கல்கள் மற்றும் கோரிக்கைகளுக்கு இடையில் காணப்படும் பொருத்தமற்ற தன்மையினை ஆராய்தல்,

vii. தொழிற்துறையினரின் கோரிக்கைகளை ஈடுசெய்வதற்காக உற்பத்தி திறன் மற்றும் வினைத்திறன் மிக்க தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கும் பொருட்டு வடமத்திய மாகாணத்திற்கான ஓர் செயற்திட்டத்தினை முன்மொழிதல்.

### 1.4. செயற்பாடுகள்

i. மாவட்ட அடிப்படையில் மாகாணத்தில் அமைந்துள்ள பிரதான கைத்தொழிற்துறைகள் மற்றும் அவற்றின் பிரச்சினைகள் மற்றும் மாகாண VET திட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான முழுமையான தகவல்கள் ஆகியவற்றினை அடையாளம் காணும் பொருட்டு TVEC உடன் இணைந்து, இரண்டு மாவட்டங்களில் இரண்டு மாவட்ட திட்டமிடல் செயலமர்வுகள் நடத்தப்பட்டன

ii. மாவட்டங்களின் சமூக - பொருளாதார பகுப்பாய்வானது திட்டமிடல் செயலமர்வுகளில் சேகரிக்கப்பட்ட துணையான தரவுகள் மற்றும் தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் பொருளாதார போக்குகளும் அடையாளம் காணப்பட்டன.

iii. மாகாணத்தில் பாடசாலை முறைமையின் வெளியீடுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அடுத்த 05 வருடங்களுக்கான முன்னறிவிப்புக்களுடன் தொழிலாளர் சந்தையிற்கான புதிய நுழைவுகள் மதிப்பிடப்பட்டுள்ளன.

iv. அடுத்த 05 ஆண்டுகளுக்கு திறன்களுக்கான கேள்விகள் மற்றும் திறன்மிக்க தொழிலாளர் வழங்கல்கள் (முக்கிய தொழிற்துறைகளில் முக்கிய தொழில்களுக்கான) ஆகியன தொடர்பான எதிர்வுகூறலுடன் மாவட்ட

அடிப்படையிலான துறைசார் அறிக்கைகளை தயாரிப்பதற்காக பிரதான கைத்தொழிற்துறைகள் ஆய்வு செய்யப்பட்டன.

v. சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகள் மற்றும் இலக்கு குழு கலந்துரையாடல்கள் ஆகியவற்றின் ஊடாக மாகாணத்தில் உள்ள வாழ்வாதார தொழில்கள் மற்றும் அவர்களுக்கான திறன்சார் தேவைப்பாடுகள் என்பன அடையாளம் காணப்பட்டன.

vi. துறைசார் அறிக்கைகளை செல்லுபடியாக்கம் செய்வதற்காகவும் மற்றும் கோரிக்கை பக்க பகுப்பாய்வினை மேற்கொள்வதற்காகவும் இலக்கு குழு விவாதங்கள் மற்றும் நிபுணத்துவ கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

vii. TVET முறைமையின் திறன்களின் வழங்கல் முக்கியமாக TVET இலுள்ள ஆற்றல்கள், தரம் மற்றும் ஏனைய இது தொடர்பான பிரச்சினைகள் மற்றும் ஊழியர்கள் அபிவிருத்தி தேவைகள் ஆகியன ஓர் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து கணக்கெடுப்பு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

viii. VET திட்டத்தை செல்லுபடியாக்கும் பொருட்டு செல்லுபடியாக்கல் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

### 1.5. பொருட்கள் மற்றும் முறைகள்

இக் கற்கையிற்கு பல்வேறு ஆதாரங்களில் இருந்து முதன்மையான தரவு சேகரிப்பு முறைகள் மற்றும் துணையான தரவு சேகரிப்பு முறைகள் ஆகியவற்றினை பின்பற்றுவதன் மூலம் தரவு சேகரிப்பினை மேற்கொள்ளவேண்டி இருந்தது. இக் கற்கைக்கான தரவு சேகரித்தல் மற்றும் ஆய்வு செய்தல் என்பவற்றுக்கு பின்வரும் வழிமுறைகளை பின்பற்றப்பட்டுள்ளன:

i. **சமூக - பொருளாதார மற்றும் ஏனைய துணையான தரவுகள்:** மாகாணத்தின் நிர்வாக கட்டமைப்பு; மாகாணத்தின் புவியியல் மற்றும் காலநிலை, மாகாணத்தில் மக்கள் தொகை; பொருளாதார கட்டமைப்பு, வேலைவாய்ப்பு மற்றும் வருமானம்; கல்வி முறைமை உட்பட மாகாணத்தின் எழுத்தறிவு, பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் மாகாணத்தில் மாணவர்களின் உள்ளீர்ப்பு, மாணவர் ஆசிரியர் விகிதம், மாணவர்களின் செயல்திறன், பல்கலைக்கழக அனுமதி, இடைவிலகல், மாகாணத்தில் தொழில் பயிற்சி வழங்குநர்களுக்கு தகுதியுள்ள வாடிக்கையாளர்கள், ஏனையவை என்பன தொடர்பான தரவுகள் பெறப்பட்டன. திட்ட குழுவானது வட மத்திய மாகாண சபை மற்றும் அதன் அமைச்சுகள், மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், மத்திய வங்கி ஆதாரங்கள், கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, பிரதான

கைத்தொழிற்துறையில் தற்போது நிலவும் வேலைவாய்ப்பு பற்றிய விபரங்கள் மற்றும் பரீட்சை திணைக்களம் ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை பயன்படுத்தியுள்ளது.

ii. **பயிற்சி வழங்கல் தரவுகள்:** TVET நிறுவக வலையமைப்பு, மாகாணத்தில் உள்ள தொழிலாளர் சந்தைக்கு திறன்மிக்க தொழிலாளர்களின் சாத்தியமான வழங்கல், மாவட்டத்தில் தற்போது காணப்படும் பாடநெறி கலவை, TVET வழங்குநர்களின் வருடாந்த பயிற்சி வெளியீடுகள், மாகாணத்தில் உள்ள கணிப்பீட்டாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாகாணத்தில் NVQ சட்டகத்தினை நடைமுறைப்படுத்தும் அளவு, சிறப்பு குழுக்களுக்கான (ஆதரவற்ற, மாற்றுத்திறன், பாதிக்கப்பட்ட, ஏனையவை) பயிற்சி அளித்தல் ஆகியன தொடர்பான தரவுகள் மாகாணத்தில் இயங்கும் அரச மற்றும் தனியார் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களில் இருந்து சேகரிக்கப்பட்டன.

iii. **முக்கிய பொருளாதார துறைகளில் திறன்மிக்க மனிதவள தேவைகள்:** பிரதான கைத்தொழிற்துறைகளில் தற்போது காணப்படும் வேலைவாய்ப்புகள், தற்போதைய தொழிலாளர்கள், பிரதான கைத்தொழிற்துறைகளில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் உருவாகிவரும் தொழில்கள் அல்லது பயிற்சி விடயங்கள் ஆகிய விபரங்களை மாகாணத்திலுள்ள பிரதான கைத்தொழிற்துறைகளை சார்ந்த நடுத்தர மற்றும் நீண்டகால அனுபவம் வாய்ந்தவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக பெறப்படும் துணையான தரவுகளை அதிகரிப்பதற்காக, அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள கைத்தொழிற்துறை நிறுவகங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்கெடுப்பாளர்கள் ஆய்விற்கு பயன்படுத்தப்பட்டனர்.

iv. **பிரதான தகவல்தொடர்பு கலந்துரையாடல்கள் மற்றும் விடய ஆய்வுகள்:** TVET நிறுவகங்கள் மற்றும் கைத்தொழிற்துறைசார் பிரதிநிதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட எண்ணிக்கையான பதிலளிப்பவர்களுக்கான பிரதான தகவல் தொடர்பு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. திறன்மிக்க தொழிலாளர்களுக்கான கேள்விகள், முன்னணி கைத்தொழிற்துறை நிறுவகங்கள் மற்றும் TVET நிறுவகங்களின் பயிற்சி மற்றும் வசதிகளின் மீதான அவர்களின் கருத்துக்கள் ஆகியன தொடர்பான பின்னூட்டத்தினை

பெற்றுக்கொள்வதற்காக திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் இரு மாவட்டங்களையும் சேர்நத 40 திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்களின் ஒரு மாதிரியுடன் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது.

v. **வாழ்வாதார தொழில்கள்:** வாழ்வாதார தொழில்சார் பயிற்சி தேவைகள் தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்காக, பல்வேறு வகையான தொழில்களை உள்ளடக்கிய இரண்டு மாவட்டங்களையும் சேர்ந்த 60 பதில் வழங்குநர்களை உள்ளடக்கிய ஓர் மாதிரிக்கு கட்டமைக்கப்படாத வினாக்கொத்து மூலம் கணக்கெடுப்பானது மேற்கொள்ளப்பட்டது.

vi. **தரவு பகுப்பாய்வு:** இக் கற்கையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி வழங்கல்கள் மற்றும் அப் பயிற்சிக்கான கோரிக்கைகள் ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளியினை கண்டறிவதற்கு நாம் எதிர்பார்த்து, தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக இடைவெளி பகுப்பாய்வு நுட்பத்தை மேற்கொண்டோம். புள்ளிவிபரவியல் முறைகள் மற்றும் பண்புரீதியான பகுப்பாய்வு நுட்பங்கள் இப் பகுப்பாய்விற்காக பயன்படுத்தப்பட்டன. ஒரு புள்ளிவிபரவியல் முன்கணிப்பு மாதிரியினை பயன்படுத்தி முன்கணிப்பானது மேற்கொள்ளப்பட்டது. இது தற்போது காணப்படும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கட்டமைப்பு, உள்ளடக்கம் மற்றும் விநியோக முறைகளை மாற்றியமைத்தல், புதிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை மற்றும் நிறுவக கட்டமைப்பில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்கள் மற்றும் தர நிர்ணய சட்டகத்திற்கு தேவையான சீர்திருத்தங்கள் ஆகியவற்றினூடாக இடைவெளிகளை நிரப்புவதற்கு அவசியமான கொள்கை தலையீடுகளை அடையாளம் காணுவதற்கு வழிவகுத்தது. தொழிலாளர் சந்தை விரிவாக்கம் மற்றும் கைத்தொழிற்துறைகளில் நிலவும் திறன்மிக்க தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள் ஆகியவற்றினை எதிர்வுகூறுவதற்கு பொருளாதார விதி முறைகள் பயன்படுத்தப்பட்டன.

### 1.6. அறிக்கையின் சுருக்கம்

மீதமுள்ள பிரிவுகள் ஐந்து அத்தியாயங்களாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. ஐந்து ஆண்டுகால முன்னறிவிப்புக்களுடன் முக்கிய தொழிற்துறைகளின் சாத்தியமான கோரிக்கைகளின் அடிப்படையில் கல்வி மற்றும் பயிற்சி தேவைகளை மையமாகக் கொண்டு மாகாணத்தின் சமூக-பொருளாதார சூழலைப் பற்றி இவ் அறிக்கையின் இரண்டாம் அத்தியாயம் விவரிக்கின்றது. துணையான தரவுகள் பகுப்பாய்வுக்காக பயன்படுத்தப்பட்டன. மூன்றாம் அத்தியாயமானது வடமத்திய மாகாணத்தில்

நடைமுறையிலுள்ள வாழ்வாதார தொழில்களின் பயிற்சி தேவைகளை விவரிக்கின்றது. இவ் அறிக்கையின் நான்காம் அத்தியாயமானது பயிற்சி தேவைகள் மற்றும் வேலைவாய்ப்பு எதிர்பார்ப்புகள் என்பவற்றினை மையமாக கொண்டு ஒவ்வொரு கைத்தொழிற்துறைகளினதும் தற்போதைய மற்றும் எதிர்கால திறன்மிக்க தொழிலாளர் தேவைகளை பகுப்பாய்வு செய்கின்றது. ஐந்தாம் அத்தியாயமானது மாகாணத்தில் காணப்படும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி பாடநெறிகள், பல்வேறுபட்ட பாடநெறிகளின் தரங்கள் மற்றும் பொருத்தப்பாடுகள் தொடர்பான விடயங்கள், பாடநெறிகள் கற்பிக்கப்படும் தராதரங்கள், பாடநெறிகளை ஊக்குவிப்பு செய்வதற்கு வழங்கப்படும் வழிகாட்டல்கள் மற்றும் ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் ஆகியனவற்றினை பகுப்பாய்வு செய்கின்றது. தொழிற்கல்வி மற்றும் பயிற்சி பாடநெறிகளின் வழங்கல்கள் மற்றும் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கிடையில் தற்போது நிலவுகின்ற பொருத்தப்பாடற்ற தன்மையானது இவ் அத்தியாயத்தில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இறுதி அத்தியாயமானது வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறன் மிக்க கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கு அவசியமான பெரும் மற்றும் நுண் மட்ட மாற்றங்கள் மற்றும் தலையீடுகள் உள்ளடங்கலாக வடமத்திய மாகாணத்தின் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தேவைகளை எதிர்கொள்வதற்கு ஏற்றவாறு முன்மொழியப்பட்ட VET திட்டத்தினை வழங்குகின்றது.

# அத்தியாயம் 2

## வடமத்திய மாகாணத்தின் சமூக பொருளாதார சூழல்

### 2.1 பின்னணி

இலங்கையில் வட மத்திய மாகாணமானது அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களை கொண்டுள்ளது. இம் மாகாணமானது முக்கியமாக விவசாயம் ஆதிக்கம் செலுத்தும் ஓர் பகுதியாவதோடு இங்கு நெல்லானது முக்கிய பயிர் ஆக விளங்குகின்றது. மேலும், சிறு மற்றும் நடுத்தர அளவிலான பண்ணை அல்லாத பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலா ஆகியன இப்பகுதியில் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன. இது மிக அதிக சராசரி வெப்பநிலையுடன் கூடிய நாட்டின் உலர் வலயத்தின் ஓர் பகுதியாக காணப்படுகின்றது. இந்த மாகாணத்தில் முக்கியமாக விவசாய சமூகங்கள் பெரும்பானமையாக காணப்படுகின்றன. மாகாணத்தில் உள்ள கைத்தொழிற்துறையில் பெரும்பாலும் முறைசாரா பொருளாதார நடவடிக்கைகளும் திறனற்ற தொழிலாளர்களும் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

### 2.2 மாகாணத்தின் நிர்வாக கட்டமைப்பு

இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில் பிரித்தானியர்களிடமிருந்து பாராளுமன்ற ஜனநாயக முறைமையை பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதி முழுவதும் நிர்வாக கட்டமைப்பில் திருத்தங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் நீதி மற்றும் நிர்வாக கட்டமைப்புக்கள் பாராளுமன்ற ஜனநாயகத்தின் அம்சங்களை ஒருங்கிணைக்கும் ஒரு குடியரசு அரசியலமைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது. குடியரசின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியானவர் மக்களால் தெரிந்தெடுக்கப்படுவதுடன் அவருடைய பதவிக்காலம் 06 ஆறு வருடங்ளாகும். அக்காலப்பகுதியின் பின்னர் மீள் தெரிவிற்கான தேர்தலிற்கு வழிவகுக்கின்றது. பாராளுமன்றம் ஆனது மக்களால் தெரிவு செய்யப்பட்ட 196 உறுப்பினர்களையும் தேசியப்பட்டியலின் மூலமாக நியமனம் செய்யப்பட்ட 29 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி ஆனவர் பிரதம மந்திரி மற்றும் அமைச்சரவை உறுப்பினர்களை நியமனம் செய்வதுடன் அமைச்சரவையின் தலைவராகவும் செயற்படுவார்.(வரைபடம் 2.1). மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச சார் நிறுவகங்கள் என்பன கைத்தொழிற்துறை அபிவித்திக்கு பொறுப்பாக செயற்படுவதுடன் நாட்டின் அனைத்து மாகாணங்களினதும் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக்கல்வி தொடர்பான திட்டமிடல் மற்றும் நிர்வகித்தல் ஆகிய செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றன.

அரசியலமைப்பு யாப்பானது மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளுக்கு தனித்துவமான செயற்பாடுகளை பரிந்துரைத்துள்ளது. மத்திய அரசானது அனைத்து விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான தேசிய கொள்கைகளை வகுத்தல் மற்றும் மாகாண சபைகளிற்கென பரிந்துரை செய்யப்பட்டுள்ள விடயப்பரப்புக்களில் மீதான சட்டத்தை அங்கீகரித்தல் என்பவற்றிற்கான அதிகாரங்களை கொண்டுள்ளது. மத்திய அரசின் கட்டாயமான பணிகள் பின்வருமாறு: தேசிய கொள்கை உருவாக்கம், உள்ளக-அரசு இடமாற்றங்களை வடிவமைத்தல், மத்திய-மாகாண உறவுகளை நிறுவுதல் மற்றும் நிர்வகித்தல், அரசாங்கத்தில் ஊழியர்களிற்கான வெற்றிடங்கள் மற்றும் ஊழியர்கள், மற்றும் "உள் விவகாரங்கள்" தொடர்பான நிர்வாகம்.

**வரைபடம் 2.1: மத்திய அரசாங்கத்தின் நிர்வாக கட்டமைப்பு**



**வரைபடம் 2.2: மாகாண சபைகளின் நிர்வாக ஒழுங்கமைப்பு**




இலங்கை நிர்வாக அடிப்படையில் ஒன்பது மாகாணங்களாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மாகாணங்கள் பொதுக்கல்வியினை திட்டமிட்டு நிர்வகிக்கும் அதேநேரம் உயர் கல்வி, தொழில் மற்றும் தொழில்நுட்பக்கல்வி ஆகியன நேரடியாக மத்திய அரசாங்கத்தின் பார்வையின் கீழ் உள்ளன. மாகாண சபைகள் பொதுக்கல்வியினை வழங்குவதில் ஈடுபட்டு இருப்பினும், மாகாணங்களில் மனித வள அபிவிருத்தியின் பொருட்டு தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்விக்கான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலில் அரச கட்டமைப்பின் பிரதானமான அலகுகளாகவும் காணப்படுகின்றன.

மாகாணங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு மாகாணங்களிலும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட மாகாண சபையானது அதிகாரப் பகிர்வு அலகாக தொழிற்படுகின்றது. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு ஆளுநர் மாகாணத்திற்கு தலைவராக காணப்படும் அதேநேரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து நியமிக்கப்பட்ட முதலமைச்சர் மாகாண சபைக்கு தலைவராக காணப்படுகின்றார். மாகாண சபைகள் மாகாண கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய அனைத்து அபிவிருத்தி முயற்சிகள் தொடர்பாக திட்டமிடல் மற்றும் அவற்றினை நடைமுறைப்படுத்தல் என்பவற்றிற்கு பொறுப்பாக

காணப்படுகின்றன. மாகாண சபைகளின் தோற்றத்தின் பின்னர் நாட்டின் நிர்வாகம் பரவலாக்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாகாண அரசுகளிற்கிடையிலான பொறுப்புக்கள் சட்டம், முகாமைத்துவம், நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கமைப்பு என்ற அடிப்படையில் வரையறை செய்யப்பட்டுள்ளன. அவை மாகாணங்களிற்கான பொறுப்பு பகிர்வுகளிற்கான எதிர்பார்ப்புகள் மற்றும் எல்லைகளையும் மத்திய அரசிடம் எஞ்சியுள்ள பொறுப்புக்களையும் வரையறை செய்துள்ளன.

**அட்டவணை 2.1: அனுராதர மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை**

| பிரிவு | சதுர கிலோ மீற்றர்கள் | கிராம சேவையாளர் பிரிவுகள் | கிராமங்கள் |
|---|---|---|---|
| பதவியா | 231 | 15 | 39 |
| கெப்பற்றிகொல்லாவ | 560 | 26 | 90 |
| மஹவிலாச்சி | 635 | 17 | 112 |
| மதவாச்சி | 507 | 37 | 112 |
| நுவரகம் பலாத்த மத்தி | 378 | 40 | 165 |
| ரம்பாவ | 255 | 38 | 142 |
| கஹட்டகஸ்திகிலிய | 331 | 40 | 127 |
| ஹொரவப்பொத்தான | 855 | 38 | 100 |
| கலன்பின்டுனுவேவ | 277 | 41 | 157 |
| மிகிந்தலை | 253 | 25 | 149 |
| நுவரகம் பலாத்த கிழக்கு | 106 | 29 | 72 |
| நச்சாடுவ | 82 | 19 | 52 |
| நொச்சியாகம | 869 | 36 | 111 |
| ராஜன்கநாய | 89 | 21 | 34 |
| தம்புத்தேகம | 112 | 26 | 62 |
| தலாவ | 247 | 39 | 121 |
| திரப்பனே | 308 | 41 | 105 |
| கெக்கிராவ | 349 | 53 | 143 |
| புலுகஸ்வேவ | 197 | 16 | 39 |
| இப்பலோகம | 134 | 32 | 116 |
| கல்னேவ | 145 | 30 | 85 |
| பலகல்ல | 258 | 35 | 98 |
| **மொத்தம்** | **7179** | **694** | **2231** |

*மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

வடமத்திய மாகாணமானது அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை என இரண்டு நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அனுராதபுர மாவட்டத்தில் 22 பிரதேச செயலக பிரிவுகளும் 694 கிராம சேவையாளர் பிரிவுகளும், 2231 கிராமங்களும் உள்ளன. பொலன்னறுவை மாவட்டத்தில் 7 பிரதேச செயலாளர் பிரிவுகளும், 295 கிராம சேவையாளர் பிரிவுகளும், 657 கிராமங்களும் காணப்படுகின்றன (அட்டவணை 2.1 மற்றும் அட்டவணை 2.2 ஐப் பார்க்கவும்).

**அட்டவணை 2.2: பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகள் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை**

| பிரிவு | சதுர கிலோ. | கிராம சேவையாளர் பிரிவுகள் | கிராமங்கள் |
|---|---|---|---|
| தமன்கடுவை | 445 | 55 | 125 |
| திம்புலாகல | 578.9 | 56 | 97 |
| ஹிங்குரான்கொட | 696 | 53 | 141 |
| மெதிரிகிரிய | 537 | 45 | 111 |
| வெலிகந்த | 548 | 30 | 46 |
| எலஹர | 349 | 28 | 88 |
| லங்காபுர | 184 | 28 | 49 |
| **மொத்தம்** | **3337.9** | **295** | **657** |

*மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

### 2.3 உயிர் பௌதிக சூழல்

பல்வேறு வரலாற்று நூல்களிற்கிணங்க கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் அனுராதபுரம் இலங்கையின் தலைநகரமாக மாறியதாக கருதப்படுகின்றது. இலங்கையின் வரலாற்றில் கி.மு. 4 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி அனுராதபுர யுகம் என அழைக்கப்படுகின்றது. இலங்கையில் பௌத்த மதமானது தேவநம்பிய திஸ்ஸ மன்னனின் காலப்பகுதியில் அதாவது கி.மு. 250- 210 காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. அக்காலப்பகுதிக்குரிய பெரும்பாலான மிகப்பெரிய நீர்த் தேக்கங்கள் தற்போதும் காணப்படுவதுடன் அவற்றுள் சில உலகிலேயே மிகப்பழமையானவையாகவும் காணப்படுகின்றன. அனுராதபுரத்தின புதிய நகரம் (40 000 சனத்தொகையினை கொண்டுள்ளது) வட இலங்கையின் பிரதானமான சந்தியாக காணப்படுவதுடன் புகையிரதப் பாதைக்கு அண்மையிலும் அமைந்துள்ளது. இலங்கையின் தொல்பொருள் ஆய்வு மையத்தின் தலைமையகம் அனுராதபுரத்தில் உள்ளது. இன்று, புராதனமான புனித நகரமாகிய அனுராதபுரம், அதன்

அரண்மனைகள், மடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் ஆகியவை காரணமாக பல பௌத்த பக்தர்கள் மற்றும் பார்வையாளர்களின் கவனத்தினை ஈர்த்துள்ளதுடன் பிரதானமான சுற்றுலா மையமாகவும் காணப்படுகின்றது.

அனுராதபுரம் மாவட்டத்தில் வெப்பநிலையானது ஆண்டு முழுவதும் 20 டிகிரி செல்சியஸ் முதல் 30 டிகிரி செல்சியஸ் வரை காணப்படுகின்றது. ஒர வருடத்தில் அதிகூடிய வெப்பமான காலப் பகுதியாக ஏப்ரல் மாதம் காணப்படுவதுடன் அதன் சராசரி வெப்பநிலையானது 29 ° C ஆகவும் உள்ளது, ஆனால் இவ் வெப்பநிலையானது அதிகபட்சமாக 34 ° C வரை அதிகரிக்கக் கூடும். மறுபுறத்தில், ஆண்டின் மிகக் குளிரான காலம் ஜனவரி மாதம் காணப்படுவதுடன் அதன் சராசரி வெப்பநிலையானது 25 ° C ஆகவும் உள்ளது, ஆனால் இவ் வெப்பநிலையானது ஆகக்குறைந்த வெப்பநிலையாக 20 ° C டிகிரி செல்சியஸ் வரை குறையலாம். சாதகமான காலநிலை, பண்டைய நீர்நிலையை அண்டிய நாகரிகம் மற்றும் பல்வேறு மரபு ரீதியான பிரதேசங்கள் என்பவற்றின் காரணமாக இலங்கையின் ஒரு முக்கிய சுற்றுலா தலமாக அனுராதபுரம் திகழ்கிறது.

அனுராதபுரத்தில் அக்டோபர் முதல் ஏப்ரல் வரை மழை வீழ்ச்சிக்கு உரிய காலப்பகுதியாகவும், மே முதல் செப்டம்பர் வரை உலர் காலப்பகுதியாகவும் காணப்படுகின்றது. இது நாட்டின் அரிசி மற்றும் காய்கறி உற்பத்தியில் மிகப்பெரிய பங்களிப்பினை வழங்குகிறது. முன்னைய காலத்தினை போலன்றி தற்போது மக்கள் ஈடுபடுகின்ற பல்வேறு தொழில்கள் காணப்படுவதுடன் அவை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பல வழிகளில் பங்களிப்பு செய்கின்றது.

பொலன்னறுவை மாவட்டமானது 3,403 சதுர கிலோ மீற்றர் பரப்பளவினை கொண்டுள்ளது. இது இலங்கையின் வட கிழக்கு பிரதேசத்தினை அண்டிய உலர் வலயத்தில் அமைந்துள்ளது. பொலன்னறுவை மாவட்டத்தில் பல்வேறு நாகரீகங்கள் காணப்பட்டமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன, குறிப்பாக 12 மற்றும் 13 ஆம் நூற்றாண்டுகளில் சிங்கள அரசர்களால் கைப்பற்றப்பட்ட சோழ சாசனம் பல நாகரிகங்கள் காணப்பட்டமைக்கு சாட்சியாக உள்ளது. 12 ம் நூற்றாண்டில், 1 ஆம் பராக்கிரமபாகுவினால் உருவாக்கப்பட்ட இந்த மிகப்பெரிய தலைநகரமானது வரலாற்று சிறப்பு மிக்க ஒரு வியத்தகு படைப்பாக விளங்குகின்றது. ஆரடகேயில் உள்ள விஜயபாகுவின் கீழ் வைக்கப்பட்டுள்ள புத்தரின் தந்த தாதுகள் இலங்கை தேசத்திலுள்ள சிங்கள அரசின் அடித்தளமாக கருதப்படுகின்றன.

பொலன்னறுவை மாவட்டமானது வட மத்திய மாகாணத்தின் இரண்டாவது பெரிய நகரமாகும். இது நாட்டின் தூய்மையான மற்றும் அழகான நகரங்களில் ஒன்றாக அறியப்படுகிறது. பசுமையான சுற்றுச்சூழல், அற்புதமான பண்டைய கட்டுமானங்கள்,

பராகிரம சமுத்திரம் மற்றும் விருந்தோம்பும் பண்பினை கொண்ட மக்கள் ஆகிய காரணிகள் எப்போதும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்த்து வருகின்றன. வரலாற்று ரீதியாக பொலன்னறுவை மாவட்டமானது வருடத்தின் பெரும்பாலான பகுதியில் வெப்பமண்டல காலநிலையினை கொண்டிருக்கும் அதேநேரம் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் குளிர்ச்சியான காலநிலையினையும் கொண்டுள்ளது. சமீபத்திய ஆண்டுகளில், மழை மற்றும் மழைவீழ்ச்சி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது.

### 2.4 வடமத்திய மாகாணத்தின் சனத்தொகைப் பரம்பல்

இலங்கையின் மிகப்பெரிய மாகாணங்களில் வடமத்திய மாகாணமும் ஒன்றாகும், எனினும் இது அடர்த்தி குறைந்த மக்கள் தொகையினை கொண்டுள்ளது. அநுராதபுரம் மாவட்டத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான மொத்த மக்கள் தொகையானது 2, 38, 772 குடும்பங்களை சேர்ந்த (அட்டவணை 2.3 இனை பார்க்க) 2, 375, 772 நபர்களாக காணப்படுகின்றது. இக்குடித்தொகையில் பெரும்பகுதி சிங்களவர்களாக காணப்படுகின்ற அதேநேரம் தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனங்களும் காணப்படுகின்றன (அட்டவணை 2.4). இம்மாவட்டத்தின் சராசரி கல்வியறிவு விகிதம் 90% (அட்டவணை 2.5) ஆகும்.

**அட்டவணை 2.3 – அனுராதபுர மாவட்டத்தின் சனத்தொகை**

| பிரிவின் பெயர் | கணிக்கப்பட்டது | |
|---|---|---|
| | குடும்பங்களின் எண்ணிக்கை | குடித்தொகை |
| பதவியா | 6 418 | 25317 |
| கெப்பற்றிகொல்லாவ | 4954 | 21741 |
| மஹவிலாச்சி | 6173 | 22258 |
| மதவாச்சி | 13494 | 48451 |
| நுவரகம் பலாத்த மத்தி | 16557 | 57837 |
| ரம்பேவ | 11727 | 38509 |
| கஹட்டகஸ்திகிலிய | 11346 | 42939 |
| ஹொரவப்பொத்தான | 9932 | 35376 |
| கலன்பின்டுனுவேவ | 13951 | 52558 |
| மிகிந்தலை | 8860 | 32494 |
| நுவரகம் பலாத்த கிழக்கு | 15273 | 67388 |
| நச்சாடுவ | 7165 | 25464 |
| நொச்சியாகம | 14471 | 49802 |
| ராஜன்கநாய | 9436 | 36544 |

| பிரிவின் பெயர் | கணிக்கப்பட்டது | |
| --- | --- | --- |
| | குடும்பங்களின் எண்ணிக்கை | குடித்தொகை |
| தம்புட்டகம | 14147 | 49586 |
| தலாவ | 16094 | 57870 |
| திரப்பனை | 8088 | 25948 |
| கெக்கிராவ | 15503 | 60324 |
| பலுகஸ்வேவ | 4323 | 16059 |
| இப்பலோகம | 10660 | 35994 |
| கல்னேவ | 10304 | 36260 |
| பலகல்ல | 9906 | 37142 |
| **மொத்தம்** | **238772** | **700257** |

*மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**அட்டவணை 2.4 – அனுராதபுர மாவட்டத்தின் இனரீதியான சனத்தொகைப் பரம்பல்**

| சிங்களம் | தமிழ் | இந்திய தமிழ் | இஸ்லாம் | மலே | பறங்கியர் | ஏனைய | மொத்தம் |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 676073 | 5073 | 443 | 61989 | 279 | 179 | 1657 | **745693** |

*மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**அட்டவணை 2.5 - அனுராதபுர மாவட்டத்தின் சனத்தொகையின் கல்வியறிவு மற்றும் பால் அடிப்படையிலான சதவீத பரம்பல்**

| எழுத்தறிவு | மொத்தம் (%) | பால் | |
| --- | --- | --- | --- |
| | | ஆண் | பெண் |
| எழுத்தறிவு | 90.5% | 92% | 88.8% |
| எழுத்தறிவின்மை | 9.5% | 8% | 11.2% |
| **மொத்தம்** | 100% | 100% | 100% |

*மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**அட்டவணை 2.6 – பொலன்னறுவை மாவட்டத்தின் சனத்தொகை**

| பிரதேச செயலாளர் பிரிவு | குடும்பங்களின் எண்ணிக்கை | சனத்தொகை |
| --- | --- | --- |
| தமன்கடுவை | 19244 | 85631 |
| திம்புலாகல | 20265 | 89039 |
| ஹிங்குரான்கொட | 17138 | 69176 |
| மேதிரிகிரிய | 16386 | 73129 |

| | | |
|---|---|---|
| வெலிகந்த | 9794 | 35976 |
| எலஹெர | 11536 | 44805 |
| லங்காபுர | 8540 | 39915 |
| **மொத்தம்** | **102903** | **437671** |

*மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**அட்டவணை 2.7 - பொலன்னறுவை மாவட்டத்தின் வயது அடிப்படையிலான சனத்தொகைப் பரம்பல்**

| பிரதேச செயலாளர் பிரிவு | 20 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள் | 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் | மொத்த சனத்தொகை |
|---|---|---|---|
| தமன்கடுவை | 27463 | 47275 | 74739 |
| திம்புலாகல | 32349 | 45365 | 77713 |
| ஹிங்குரான்கொட | 21110 | 39268 | 60377 |
| மேதிரிகிரிய | 24625 | 39202 | 63827 |
| வெலிகந்த | 13434 | 17967 | 31400 |
| எலஹெர | 14899 | 24207 | 39106 |
| லங்காபுர | 13747 | 21092 | 34838 |
| **மொத்தம்** | **147624** | **234375** | **382000** |

*மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**அட்டவணை 2.8 – பொலன்னறுவை மாவட்டத்தின் இனரீதியான சனத்தொகைப் பரம்பல்**

| சிங்களம் | தமிழ் | இந்திய தமிழ் | இஸ்லாம் | மலே | பறங்கியர் | ஏனைய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 393532 | 8606 | - | 34460 | 28 | 34 | 11 | **437671** |

*மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**அட்டவணை 2.9 - பொலன்னறுவை மாவட்டத்தின் சனத்தொகையின் கல்வியறிவு மற்றும் பால் அடிப்படையிலான சதவீத பரம்பல்**

| எழுத்தறிவு | மொத்தம் (%) | பால் | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| எழுத்தறிவு | 90.0 | 91.2 | 88.7 |
| எழுத்தறிவின்மை | 10.0 | 8.8 | 11.3 |
| **மொத்தம்** | 100 | 100 | 100 |

*மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

வடமத்திய மாகாணமானது தற்போது ஒப்பீட்டளவில் கல்வி பெற்ற மக்கள்தொகையினையே கொண்டுள்ளது. பாடசாலைக்கு செல்லும் சராசரி வருடங்கள்

ஒப்பீட்டளவில் அதிகரித்து காணப்படுகின்றது. நன்கு திட்டமிடப்பட்ட நீர்ப்பாசன நடவடிக்கைகளின் ஊடான விவசாய நடவடிக்கைகள் மற்றும் அரசினால் மேற்கொள்ளப்பட்ட விவசாய குடியேற்றம் என்பனவற்றின் விளைவாக மாகாணங்களில் குடியிருப்புப் பகுதிகள் செறிந்து காணப்படுகின்றன. நகரங்களும் பிரதான பிரதேச செயலக பிரிவுகளிலேயே அமைந்துள்ளன. இந்நிலைமையானது வடமத்திய மாகாணத்தில் தொழிற் பயிற்சி மையங்களை நிறுவுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான ஒரு தனித்துவமான புவியியல் மற்றும் சமூக அடிப்படையிலான தளத்தை உருவாக்கியுள்ளது.

### 2.5 வடமத்திய மாகாணத்தின் கல்விததுறை

வடமத்திய மாகாணமானது நீர்ப்பாசனத்தினை அடிப்படையாகக் கொண்ட விவசாய மாவட்டமாக காணப்படுவதுடன் ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலான வறுமை மற்றும் நாடு முழுவதிலும் இருந்து குடியேறியவர்களால் உருவாக்கப்பட்ட பல்வகைமையான மக்கள் குடியேற்றங்களினால் விளைந்த பரவலான மக்கள்தொகை என்பன காரணமாக கல்வியில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு ஒப்பீட்டளவில் சிறந்த சூழலை வழங்கியுள்ளது. இருப்பினும், பௌதீக மற்றும் மனித வளங்கள் உள்ளிட்ட கல்வி வசதிகளின் பரம்பல் சீரானதாக்க் காணப்படவில்லை. இந்த மாகாணமானது கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்களிற்கு தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் இல்லாத நிலைமையினை பெரும்பாலும் எதிர்நோக்கியுள்ளது. இதன் காரணமாக க.பொ.த. (உ / த) இல் விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடநெறிகளை பின்பற்றும் மாணவர்களிற்கு தேவையான வசதிகளில் தொடர்ந்தும் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

**அட்டவணை 2.10: பாடசாலைகளின் வகைகளின் அடிப்படையில் இம் மாகாணத்தில் காணப்படும் பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை**

| பாடசாலைகளின் வகைகள் | | பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| | | **798** |
| தேசிய மட்டம் | தேசிய பாடசாலைகள் | 10 |
| மாகாண மட்டம் | 1 AB வகை பாட சாலைகள் | 25 |
| | 1C வகை பாட சாலைகள் | 158 |
| | 2 ஆம் வகை பாட சாலைகள் | 265 |
| | 3 ஆம் வகை பாட சாலைகள் | 340 |

மூலம்: மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம்

வடமத்திய மாகாணத்தில் 798 பாடசாலைகள் காணப்படுகின்றன, இவற்றில் 10 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகவும் ஏனையவை மாகாண பாடசாலைகள் ஆகவும் காணப்படுகின்றன. அனுராதபுர மாவட்டத்தில் 778 பாடசாலைகள் காணப்படுவதுடன் பொலன்னறுவை மாவட்டத்தின் 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 232 பாடசாலைகளும் காணப்படுகின்றன. பெரும்பாலான பாடசாலைகள் வகை 2 மற்றும் 3 இற்குரியவையாக காணப்படுவதுடன் க.பொ.த. (உ/த) இல் விஞ்ஞானம் மற்றும் கணித பாடப்பரப்புக்களை கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. (அட்டவணைகள் 2.10, 2.11, 2.12 ஐ பார்க்க).

**அட்டவணை 2.11 - அனுராதபுர மாவட்டத்தில் காணப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை**

| வகை | பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1AB | 34 |
| 1C | 158 |
| 2 | 332 |
| 3 | 254 |
| **மொத்தம்** | **778** |

மூலம் : மாகாண கல்வி திணைக்களம், வடமத்திய மாகாணம்

**அட்டவணை 2.12 - பொலன்னறுவை மாவட்டத்தில் காணப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை**

| வகை | தேசிய பாடசாலைகள் | தரம் 1 A&B | தரம் 1 C | தரம் 2 | தரம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| தமன்கடுவை | 1 | 2 | 10 | 11 | 6 | 30 |
| திம்புலாகல | 0 | 2 | 13 | 14 | 27 | 56 |
| ஹிங்குரான்கொட | 2 | 2 | 2 | 20 | 6 | 32 |
| மெதிரிகிரிய | 1 | 0 | 7 | 12 | 12 | 32 |
| வெலிகந்த | 0 | 0 | 4 | 8 | 25 | 37 |
| எலகர | 0 | 1 | 3 | 14 | 10 | 28 |
| லங்காபுர | 0 | 1 | 7 | 7 | 2 | 17 |
| **மொத்தம்** | **4** | **8** | **46** | **86** | **88** | **232** |

மூலம்: மாகாண கல்வி திணைக்களம், வடமத்திய மாகாணம்

**அட்டவணை 2.13: வடமத்திய மாகாணத்தில் க.பொ.த. (உ/த) இல் தொழில்நுட்ப பிரிவினை கொண்டுள்ள பாடசாலைகள்**

| பாடசாலையின் பெயர் | அமைவிடம் | மாவட்டம் |
|---|---|---|
| மைத்திரிபால சேனநாயக்க ம.ம.வி | மதவாச்சி | அனுராதபுரம் |
| கெப்பற்றிகொல்லாவ ம.ம.வி. | கெப்பற்றிகொல்லாவ | அனுராதபுரம் |
| றுவான்வலி ம.ம.வி. | ஹொரவபொத்தான | அனுராதபுரம் |
| வலிசிங்க ஹரிஸ்சந்திர ம.வி. | அனுராதபுரம் | அனுராதபுரம் |
| வித்தியாதர்ஷ மகா வித்தியாலயம் | நொச்சியாகம | அனுராதபுரம் |
| தபுத்தேகம ம.ம.வி. | தம்புத்தேகம | அனுராதபுரம் |
| தலாவ மகா வித்தியாலயம் | தலாவ | அனுராதபுரம் |
| கல்நேவ ம.ம.வி. | கல்நேவ | அனுராதபுரம் |
| கந்திரியாகம மகிந்த ம.வி. | இப்பலோகம | அனுராதபுரம் |
| மிகிந்தலை ம.வி. | மிகிந்தலை | அனுராதபுரம் |
| ஸ்ரீ ரேவதா நவோதய பாடசாலை | மடத்துகம | அனுராதபுரம் |
| கல்கிரியாகம மத்திய கல்லூரி | கல்கிரியாகம | அனுராதபுரம் |
| லீலாரத்ன விஜேசிங்க ம.வி. | ஹன்ஸயபலுவ | அனுராதபுரம் |
| எப்பாவல சிறி சித்தார்த்த ம.வி. | எப்பாவல | அனுராதபுரம் |
| மின்னேரியா தேசிய பாடசாலை | ஹிங்குரான்கொட | பொலன்னறுவை |
| ஆனந்தபாலிகா தேசிய பாடசாலை | ஹிங்குரான்கொட | பொலன்னறுவை |
| மேதிரிகிரிய தேசிய பாடசாலை | மேதிரிகிரிய | பொலன்னறுவை |
| றோயல் மத்திய கல்லூரி | பொலன்னறுவை | பொலன்னறுவை |
| பலுகஸ்தமன ம.வி. | பலுகஸ்தமன | பொலன்னறுவை |
| விலாயயா ம.ம.வி. | ஆரலகன்வில | பொலன்னறுவை |
| பக்கமுன மகாசேன ம.ம.வி. | பக்கமுன | பொலன்னறுவை |
| வெலிகந்த ம.வி. | வெலிகந்த | பொலன்னறுவை |

மூலம் : கல்வி அமைச்சு

அட்டவணை 2.13 ஆனது வடமத்திய மாகாணத்தில் க.பொ.த. (உ/த) இல் தொழில்நுட்ப பிரிவினை கொண்டுள்ள அனைத்து பாடசாலைகளின் விபரங்ளையும் வழங்கியுள்ளது.

அனுராதபுர மாவட்டத்தில் 14 பாடசாலைகள் க.பொ.த. (உ/த) இல் தொழில்நுட்ப பிரிவிற்கான பாடநெறிகளினை கொண்டுள்ளன. இப்பாடசாலைகள் அதிகளவான மாணவர்களிற்கு தொழில்நுட்ப பிரிவிற்கான பாடநெறிகளை வழங்கும் நோக்கில் மாவட்டங்கள் முழுவதிலும் பரவலாக காணப்படுகின்றன. பொலன்னறுவை மாவட்டத்தில் 08 பாடசாலைகள் க.பொ.த. (உ/த) இல் தொழில்நுட்ப பிரிவிற்கான பாடநெறிகளினை கொண்டுள்ளன. இவை பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள 03 தேர்தல் பிரிவுகளிலும் பரவலாக அமைந்துள்ளன. இருப்பினும், பாடசாலைகளில் தகுதிவாய்ந்த ஆசிரியர்களின் பற்றாக்குறை இந்த பாடநெறியினை பின்பற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்கொள்ளும் ஒரு முக்கிய தடையாக காணப்படுகின்றது.

**அட்டவணை 2.14: 2015 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சையில் தொழில்நுட்ப பிரிவின் பெறுபேறுகள்**

| மாவட்டம் | தோற்றியவர்களின் எண்ணிக்கை | இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளிலும் தொழில்நுட்ப பிரிவில் தோற்றிய மொத்த மாணவர்களின் சதவீதம் | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| அம்பாறை | 354 | 2.78 | 154 | 43.50 |
| **அனுராதபுரம்** | **900** | **7.08** | **447** | 49.67 |
| பதுளை | 655 | 5.15 | 374 | 57.10 |
| மட்டக்களப்பு | 345 | 2.71 | 150 | 43.48 |
| கொழும்பு | 1219 | 9.60 | 709 | 58.16 |
| காலி | 658 | 5.18 | 327 | 49.70 |
| கம்பஹா | 871 | 6.85 | 481 | 55.22 |
| ஹம்பாந்தோட்டை | 539 | 4.24 | 286 | 53.06 |
| யாழ்ப்பாணம் | 538 | 4.23 | 327 | 60.78 |
| களுத்துறை | 491 | 3.86 | 287 | 58.45 |
| கண்டி | 682 | 5.37 | 342 | 50.15 |
| கேகாலை | 671 | 5.28 | 329 | 49.03 |
| கிளிநொச்சி | 84 | 0.66 | 38 | 45.24 |

| மாவட்டம் | தோற்றியவர்களின் எண்ணிக்கை | இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளிலும் தொழில்நுட்ப பிரிவில் தோற்றிய மொத்த மாணவர்களின் சதவீதம் | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| குருணாகல் | 1071 | 8.43 | 585 | 54.62 |
| மன்னார் | 67 | 0.52 | 44 | 65.67 |
| மாத்தளை | 373 | 2.93 | 231 | 61.93 |
| மாத்தறை | 727 | 5.72 | 431 | 59.28 |
| மொனராகலை | 269 | 2.11 | 153 | 56.88 |
| முல்லைத்தீவு | 60 | 0.47 | 33 | 55.00 |
| நுவரெலியா | 394 | 3.10 | 166 | 42.13 |
| **பொலன்னறுவை** | **340** | **2.67** | **172** | **50.59** |
| புத்தளம் | 385 | 3.03 | 177 | 45.97 |
| இரத்தினபுரி | 701 | 5.52 | 476 | 67.90 |
| திருகோணமலை | 178 | 1.40 | 73 | 41.01 |
| வவுனியா | 125 | 0.98 | 53 | 42.40 |
| | 12697 | | 6845 | 43.50 |

மூலம்: பரீட்சைகள் திணைக்களம், கல்வி அமைச்சு

2015 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. (உ/த) பரீட்சையில் தொழில்நுட்ப பிரிவின் கீழ் அனுராதபுர மாவட்டத்தில் 900 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியுள்ள அதேநேரம் பொலன்னறுவை மாவட்டத்தில் 340 மாணவ, மாணவியர் தோற்றியுள்ளனர். அனுராதபுர மாவட்டத்தில் பரீட்சைக்கு தோற்றிய 900 மாணவர்களில் 447 பேர் சித்தியடைந்துள்ளதுடன் பொலன்னறுவை மாவட்டத்தில் 340 மாணவர்களில் 172 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இது இரண்டு மாவட்டங்களிலும் TVET நிறுவகங்களில் கற்கைகளை மேற்கொள்வதற்கு பெருமளவான மாணவர்கள் காணப்படுகின்றமையினை காட்டுகின்றது.

எவ்வாறாயினும், இலங்கையில் 2015 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் தொழில்நுட்ப பிரிவின் கீழ் பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களான 12,697 13 பேரில் 6,845 மாணவர்களே (43.50%) தேர்ச்சி பெற்றுள்ளனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது (http://www.moe.gov.lk) 2015/2016 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக உள்வாங்கலின் போது தொழில்நுட்ப பிரிவின் கீழ் 13 அரச பல்கலைக்கழகங்களில் 28 பாடநெறிகளை பின்பற்றுவதற்கு தொழில்நுட்ப பிரிவின் ஏறத்தாழ 2250 மாணவர்களை உள்வாங்குவதற்கு எதிர்பார்த'துள்ளது. அத்துடன் அரசாங்கம் எஞ்சிய சித்தியடைந்த மாணவர்ளுக்கு சேவைகளை வழங்கும் பொருட்டு 25 பல்கலைக்கழக கல்லூரிகளை நிறுவுவதற்கு எதிர்பார்த்துள்ளது. இது நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. ஆயினும் க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய 10, 447 மாணவர்களில் சித்தியடைந்த 4595 மாணவர்கள் அரச பல்கலைக்கழகங்களிற்கான அனுமதியினை பெற்றுக்கொள்ள மாட்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்கலைக்கழக முறைமையினுள் உள்வாங்கப்படும் மாணவர்களின் விபரங்கள் இதுவரை அறிவிக்கப்படாமையின் காரணமாக அண்ணளவாக இம்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெரும்பாலான TVET நிறுவனங்கள் க.பொ.த. உயர் தரத்தில் தொழில்நுட்ப பிரிவில் பயின்ற மாணவர்களிற்கான பாடநெறிகளை வழங்குவதற்கு இன்னும் தயாராகாத நிலைமையினை காணக்கூடியதாக உள்ளது. 25 பல்கலைக்கழக கல்லூரிகளை நிறுவுவதற்கான தாமதமான நடவடிக்கைகள் மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை தீவிரமாக பாதிக்கும். TVET நிறுவனங்களுக்கு உதவுகின்ற திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்களிடையில், போதிய எண்ணிக்கையிலான பாடநெறிகள் காணப்படவில்லை என்ற கருத்து நிலவுகின்றது. மேலதிகமாக, நிதி சிக்கல்களின் காரணமாக பெரும்பாலான மாணவர்களால் கிடைக்கக்கூடிய பாடநெறிகளை பின்பற்றமுடியாதுள்ளது, ஏனெனில் அவை மாவட்டங்களின் பிரதானமான மையங்களில் மட்டுமே கிடைக்கின்றன.

### க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ. த. (உ/த) இன் பின்னர் தொழிலாளர் சந்தையினுள் நுழைதல்

வட மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் கிடைக்கின்ற தகவல்கள் அண்மைக் காலங்களில் தொழிலாளர் சக்தியின் நிலையான வளர்ச்சியைக் காட்டுகின்றன. அட்டவணைகள் 2.13 மற்றும் 2.14 ஆகியவை 2012 ஆம் ஆண்டில் க.பொ.த. (சா / த) மற்றும் க.பொ.த. (உ/த) ஆகியவற்றிற்கு தோற்றிய மற்றும் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகளை வழங்கியுள்ளன. 2014 ஆம் ஆண்டிற்கான தரவுகள் தற்போது இல்லாமையின் காரணமாக, தீர்மானங்களை

மேற்கொள்வதற்கு 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான தரவுகளின் சராசரி பயன்படுத்தப்பட்டுள்ளது. க.பொ.த. (சா / த) இன் பின்னர் மொத்தமாக 6136 நபர்கள் தொழிலாளர் சந்தையினுள் நுழைந்துள்ளதுடன், க.பொ.த. (உ/த) இன் பின்னர் 3205 பேர் நுழைந்துள்ளனர். கடந்த சில வருடங்களில் க.பொ.த. (சா / த) மற்றும் க.பொ.த. (உ/த) இன் பின்னர் தொழிலாளர் சந்தையில் நுழைந்துள்ளவர்களின் எண்ணிக்கையானது சிறிய சரிவினை பதிவு செய்திருப்பனை காணக்கூடியதாக உள்ளது. கடந்த சில ஆண்டுகளில் நாட்டின் சனத்தொகை மற்றும் தொழிலாளர்களின் நிலையான வளர்ச்சி வீதம் காரணமாக க.பொ.த. (சா / த) மற்றும் க.பொ.த. (உ/த) இன் பின்னரான தொழிலாளர் சக்தியின் வளர்ச்சி மிகவும் உறுதியானதாகவும் 1 % இலும் குறைவாகவும் காணப்படுகின்றது.

**அட்டவணை 2.15: 2012 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. (சா / த) பரீட்சையின் பெறுபேறுகள்**

| | பரீட்சைக்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கை | பாடங்கள் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | கபொ.த. (உ/த) இல் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை | தொழிலாளர் சந்தையினுள் நுழைந்துள்ளவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அனுராதபுரம் | 11502 | 7931 | 7361 | 4141 |
| பொலன்னறுவை | 5035 | 3282 | 3040 | 1995 |
| வடமத்திய மாகாணம் | 16537 | 11213 | 10401 | 6136 |

மூலம்: கல்வி திணைக்களம், வடமத்திய மாகாணம்

**அட்டவணை 2.16: 2012 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. (உ / த) பரீட்சையின் பெறுபேறுகள்**

| | பரீட்சைக்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கை | பாடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக் | பல்கலைக்கழகத்திற்கு தகிதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | தொழிலாளர் சந்தையினுள் நுழைந்துள்ளவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|

| | | கை | | |
|---|---|---|---|---|
| அனுராதபுரம் | 5345 | 3271 | 3258 | 2087 |
| பொலன்னறுவை | 2205 | 1087 | 1087 | 1118 |
| வடமத்திய மாகாணம் | 7550 | 4358 | 4345 | 3205 |

மூலம்: கல்வி திணைக்களம், வடமத்திய மாகாணம்

### 2.6 தொழிலாளர்களிற்கான எதிர்வு கூறல்கள்

வடமத்திய மாகாணத்தின் சனத்தொகை வளர்ச்சி விகிதம் 1% ஆக காணப்பட்ட அதேநேரம், க.பொ.த. (சா / த) இல் சித்தியடைந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பல்கலைக்கழகங்களிற்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை என்பனவற்றின் அதிகரிப்பின் காரணமாக கடந்த சில வருடங்களில் க.பொ.த. (சா / த) மற்றும் க.பொ.த. (உ/த) இன் பின்னர் தொழிலாளர் சந்தையில் நுழைந்துள்ளவர்களின் எண்ணிக்கையானது சிறிய சரிவினை பதிவு செய்திருப்பனை காணக்கூடியதாக உள்ளது. தொழிலாளர் சந்தையின் வளர்ச்சி வீதத்தில் ஒரு சாத்தியமான மட்டத்தினை பேணும் பொருட்டு, தொழிலாளர் சந்தை தொடர்பான எதிர்வுகூறல்களிற்காக அதன் வளர்ச்சியை 0.5 % ஆன சராசரி ஆண்டு வளர்ச்சி வீதமாக எடுகோள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிலாளர் படையின் அடிப்படை மட்டமாக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான தரவுகள் கிடைக்கப்பெறாமையின் காரணமாக 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை தொழிலாளர் சந்தையினுள் நுழைந்தவர்களின் எண்ணிக்கை கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த எதிர்வுகூறல்களில் ஏதாவது விலகல்கள் காணப்படுமாயின் அது அடுத்த ஐந்து வருடங்களில் தொழிலாளர் வளர்ச்சி வீதத்தில் ஏற்படக்கூடிய வீழ்ச்சியின் காரணமாக இருக்கும்.

இந்த எதிர்வு கூறல்களின் போது புள்ளிவிவர / பொருளாதார அளவீட்டு குறியிடல் முறை பின்பற்றப்பட்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களின் காரணமாக வேறு எந்த சிக்கலான பொருளாதார அளவீட்டு முறைகளையும் பின்பற்ற முடியாதுள்ளது. பயன்படுத்தப்பட்ட அளவீட்டு முறை தொடர்பானய அடிப்படை தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன:

| அணுகுமுறை | தேவையான வளங்கள் | நன்மைகள் | இடர்பாடுகள் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| குறியீட்டு பொருளாதார அணுகுமுறை | அடிப்படை புள்ளிவிபரவியல் அறிவு மற்றும் நேர ஒழுங்கிலான தகவல்களை பெற்றுக்கொள்ளல் | எளிமையானதும் தகவல்களை புதுப்பித்தல் மற்றும் இலகுவில் பகுப்பாய்வினை மேற்கொள்ளப்படக்கூடியதுமாக காணப்படுகின்றது. | இப்பகுப்பாய்வானது தற்போது காணப்படுகின்ற நேர ஒழுங்கிலான தகவல்களின் தரத்திலேயே பெருமளவில் தங்கியுள்ளது. |

தொடர்புபட்ட சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

1. 2015 ஆம் ஆண்டில் தொழிலாளர் படையினுள் நுழைந்தவர்களின் எண்ணிக்கை (NEFL) :

$$NEFL^{i}_{2015} = \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+1}\}$$

2. 2016 ஆம் ஆண்டில் தொழிலாளர் படையினுள் நுழைந்தவர்களின் எண்ணிக்கை :

$$NEFL^{i}_{2016} = \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+2}\} - \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+1}\} + \{NEFL_{2010-2012}\}$$

3. 2017 ஆம் ஆண்டில் தொழிலாளர் படையினுள் நுழைபவர்களின் எண்ணிக்கை

$$NEFL^{i}_{2017} = \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+3}\} - \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+2}\} + \{NEFL_{2010-2012}\}$$

4. 2018 ஆம் ஆண்டில் தொழிலாளர் படையினுள் நுழைபவர்களின் எண்ணிக்கை

$$NEFL^{i}_{2018} = \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+4}\} - \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+3}\} + \{NEFL_{2010-2012}\}$$

5. 2019 ஆம் ஆண்டில் தொழிலாளர் படையினுள் நுழைபவர்களின் எண்ணிக்கை

$$NEFL^{i}_{2019} = \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+5}\} - \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+4}\} + \{NEFL_{2010-2012}\}$$

6. 2020 ஆம் ஆண்டில் தொழிலாளர் படையினுள் நுழைபவர்களின் எண்ணிக்கை

$$NEFL^{i}_{2020} = \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+6}\} - \{NEFL_{2010-2012}(1+g_{LF})^{t+5}\} + \{NEFL_{2010-2012}\}$$

இங்கு:

NEFL = தொழிலாளர் படையினுள் நுழைபவர்களின் எண்ணிக்கை

$g_{FL}$= தொழிலாளர் படையின் வளர்ச்சி வீதம்

$NEFL_{2010-2012}$ = வடமத்திய மாகாணத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆணடு வரை தொழிலாளர் படையினுள் நுழைந்தவர்களின் எண்ணிக்கையின் சராசரி

t = 0 - 6, வருடங்களின் எண்ணிக்கை

எதிர்வு கூறலின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள்:

a. மாகாணத்தின் தொழிலாளர் வளர்ச்சி விகிதம் 2015 ல் இருந்து 2020 வரை

தொடர்ந்தும் மாறாமல் இருக்கும்

b. உழைப்பு சக்தியானது ஒரு அதிவேக வளர்ச்சியை காட்டுகின்றது
c. அடுத்த ஐந்து ஆண்டுகளில் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் தொடர்ந்தும் தற்போதைய விகிதத்தில் மாறாமல் உள்ளது.
d. க.பொ.த. (சா/ த) அல்லது க.பொ.த. (உ/த) தோல்வியடைந்த அனைவரும் தொழிலாளர் சந்தையில் நுழையக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகின்றது, அதன் காரணமாக அவர்கள் TVEC நிறுவகத்தால் வழங்கப்படுகின்ற பல்வேறு பாடநெறிகளை எதிர்பார்ப்பவர்களாக காணப்படுவார்கள்.

மேலேயுள்ள சமன்பாடுகளை பயன்படுத்தி, வடமத்திய மாகாணத்தில் க.பொ.த. (சா/ த) மற்றும் க.பொ.த. (உ/ த) பின்னர் தொழிலாளர் சந்தைக்கு நுழையக்கூடியவர்களின் எண்ணிக்கையானது தனித்தனியாக கணிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.17: அட்டவணை 2.17: க.பொ.த (சா/ த) இன் பின்னர் தொழிலாளர் வர்க்கத்தினுள் உள்நுழைதல் தொடர்பாக ஐந்து வருடங்களுக்கான எதிர்வுகூறல்**

| மாவட்டம்/ மாகாணம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|
| அனுராதபுர மாவட்டம் | 4348 | 4565 | 4793 | 5033 | 5285 | 5549 |
| பொலன்னறுவை மாவட்டம் | 2194 | 2304 | 2419 | 2540 | 2667 | 2800 |
| **மாகாணம்** | 6542 | 6869 | 7212 | 7573 | 7952 | 8349 |

**அட்டவணை 2.18: அட்டவணை 2.18: க.பொ.த (உ/ த) இன் பின்னர் தொழிலாளர் வர்க்கத்தினுள் உள்நுழைதல் தொடர்பாக ஐந்து வருடங்களுக்கான எதிர்வுகூறல்**

| மாவட்டம்/ மாகாணம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|
| அனுராதபுர மாவட்டம் | 2191 | 2300 | 2415 | 2536 | 2663 | 2796 |
| பொலன்னறுவை மாவட்டம் | 1173 | 1232 | 1294 | 1358 | 1426 | 1498 |
| **மாகாணம்** | 3364 | 3532 | 3709 | 3894 | 4089 | 4294 |

**அட்டவணை** 2.19: **தொழிலாளர் வர்க்கத்தினுள் உள்நுழைபவர்களின் மொத்த எண்ணிக்கை தொடர்பாக ஐந்து வருடங்களுக்கான எதிர்வுகூறல்**

| விபரம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க.பொ.த (சா/ த) இன் பின்னர் | 6748 | 7085 | 7440 | 7812 | 8202 | 8612 |
| க.பொ.த (உ/ த) இன் பின்னர் | 3365 | 3533 | 3710 | 3895 | 4090 | 4295 |
| மொத்தம் | 10113 | 10619 | 11150 | 11707 | 12293 | 12907 |

2.18 முதல் 2.19 வரையான அட்டவணைகள் இரண்டு மாவட்டங்கள் மற்றும் அவற்றின் மாகாணத்திற்கான கணிப்பிடப்பட்ட தரவுகளை அளிக்கின்றன. 2015 ஆம் ஆண்டு முதல் 2020 வரையான காலப்பகுதியில் ஒரு வருடத்திற்கு சராசரியாக 11500 நபர்கள் க.பொ.த. (சா/ த) மற்றும் க.பொ.த. (உ/த) இன் பின்னர் தொழிலாளர் சந்தையில் நுழைவார்கள். இந்த எண்ணிக்கையானது, அடுத்த ஐந்து வருட காலப்பகுதியில் தேவைப்படக்கூடிய எதிர்கால பயிற்சி வழங்கல்கள் மற்றும் தொழிலாளர் கேள்வி மற்றும் வழங்கல்களிற்கிடையிலான பொருத்தப்பாடின்மை என்பன தொடர்பான சரியான பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

க.பொ.த. (சா/ த) மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சையின் பின்னர் தொழிலாளர் சந்தையில் நுழையும் நபர்களால் ஏற்படுத்தப்படுகின்ற TVET பாடநெறிகளிற்கான சாத்தியமான கேள்விகள் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் கருத்திற் கொள்ளப்பட வேண்டி உள்ளது. முதலாவதாக, தற்போதை wபுள்ளிவிபரங்களின்படி, க.பொ.த. (உ/த) இன் பின்னர் பல்கலைக்கழகத்திற்கு நுழைவதற்கு தகுதி பெற தவறிய ஒரு பெரிய சதவீதத்தினர், வெளிவாரி பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் நோக்கில் ஏறத்தாழ அனைத்து அரச பல்கலைக்கழகங்களிலும் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டில் 50,000 க்கும் அதிகமான மாணவர்கள் வெளிவாரி பட்டப்படிப்பிற்கான பதிவுகளை அரச பல்கலைக்கழகங்களில் மேற்கொண்டுள்ள அதேநேரம் இவர்களில் ¾ பங்கினர் கலைத்துறை சார்ந்த பட்டங்களிற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இதில் உறுதியான வரவேற்பினை கொண்ட தவிர்க்க முடியாத ஒரு வியாபாரம் தோற்றம் பெற்றுள்ளது. பல்கலைக்கழக மட்டங்கள் தமக்கு கிடைக்க்க்கூடிய பொருளாதார நன்மையினை கருத்திற் கொண்டு பெருமளவிலான வெளிவாரி மாணவர்களை உள்ளீர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன. அண்மைக்காலத்தில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பல்கலைக்கழகங்களிற்கும் வெளிவாரி பட்டப்படிப்புகளை நடாத்தும் தனியார் கல்வி நிறுவகங்களிற்குமிடையிலான தொடர்புகளை ஊக்குவித்து வருகின்றது. அலுவலகம் சார்ந்த அரச துறை வேலைகளை பெ ற்றுக்கொள்வதற்கான உறுதியான எதிர்பார்ப்புகள் இந்த கேள்விக்கான அடிப்படை காரணமாக காணப்படுகின்றது. விரும்பத்தகாத வகையில் மிக அதிக எண்ணிக்கையான வெளிவாரிப்பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்கள்

காணப்படுவதன் காரணமாக TVET நிறுவகங்கள் தமதுபாடநெறிகளிற்கு தேவையான மாணவர்களை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றன. அரசாங்கம் இந்நாட்டில் தொழிற்கல்வியினை அபிவிருத்தி செய்ய விரும்புமாயின் வெளிவாரிப் பட்டப்படிப்புகளிற்காக பதிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான ஒரு உறுதியான வரையறையினை உருவாக்க வேண்டியது கட்டாயமாகும். இதற்கு ஒரு அமைச்சுகளிற்கிடையிலான உயர் மட்ட இணக்கப்பாடு மற்றும் கூட்டுறவுடன் கூடிய ஒரு முறையான ஒழுங்கு படுத்தல் வேலைத்திட்டம் அவசியமாகும். .

இரண்டாவதாக, பல்வேறு தனியார் பல்கலைக் கழகங்கள் மற்றும் தனியார் உயர்கல்வி வழங்குபவர்களுடைய அதிவேகமான அதிகரிப்பானது TVET நிறுவனங்களின் பயிற்சிகளிற்கான கேள்விகளை பாதித்துள்ளன. TVET நிறுவனங்களின் தலைமைத்துவம், எதிர்காலத்தில் அலுவலகம் சார்ந்த வேலைகளை பெற்றுக் கொள்ளுவதற்கான பயிற்சிகளை பெற விரும்புவதாக பயிற்சி பெறும் தொழிலாளர்கள் எதிர்பார்ப்பதன் காரணமாக தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வி சார்ந்த பாடநெறிகளிற்கு போதுமான எண்ணிக்கையிலான மாணவர்களை பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றது. க.பொ.த. (சா/த) இல் சித்தியடைய தவறியவர்கள் கூட  இளங்கலைப் படிப்பிற்குள் நுழைவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றமையானது இவ்வாறானதொரு சம்மற்ற நிலைமையினை தோற்றுவித்துள்ளது.

மூன்றாவதாக, க.பொ.த. (உ/த) இல் அல்லது க.பொ.த. (சா/த) இல் தோல்வியடைந்த பெரும்பாலான மாணவர்கள் அவர்கள் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடியின் காரணமாக தொழிலாளர் சந்தையில் நுழைந்து, திறமையற்ற தொழிலாளர்களாக வேலை தேடுவதை விரும்புகின்றனர். அதேநேரம் பெரும்பாலான கைத்தொழிற்துறை சார்ந்த தொழில் வழங்குநர்கள் குறைந்த ஊதியத்தினை வழங்கும் பொருட்டு திறனற்ற தொழிலாளர்களை உள்ளீர்ப்பதில் ஆர்வம் காட்டுவதன் காரணமாக பெரும்பாலான கைத்தொழிற்துறைகளில் திறன் அற்ற தொழிலாளர்கள் இலகுவில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்கின்றனர்.

நான்காவதாக, முச்சக்கர வாகன முறைமையானது TVET நிறுவகங்களின் பயிற்சிகளிற்கான கேள்வியினை பாரதூரமாக பாதித்துள்ளதாக பயிற்சி வழங்குநர்கள் கருதுகின்றனர். க.பொ.த. (உ/த) இல் அல்லது க.பொ.த. (சா/த) இல் தோல்வியடைந்த பெரும்பாலான ஆண் மாணவர்கள், இலகுவான நிதி வசதி காரணமாக வாடகை வாகன சேவையில் உடனடியாக தொழிலினை பெற்றுக்கொள்ளக்கூடியமையின் காரணமாக முச்சக்கர வாகனங்களை கொள்வனவு செய்வதனை பெருமளவில் விரும்புகின்றனர். முச்சக்கர வாகனங்கள்  தொடர்பான அதிவிரைவான வளர்ச்சி

இதற்கு சாட்சியாக உள்ளது. முச்சக்கர வாகன ஒட்டுநர்களிற்கான வயது வரம்பினை கட்டுப்படுத்துவது TVET நிறுவகங்களின் பயிற்சிகளிற்கான கேள்விகளை அதிகரிக்கும் என பயிற்சி வழங்குநர்களால் நம்பப்படுகின்றது.

ஐந்தாவது, பெரும்பாலான ஆண் மாணவர்கள் இங்கு பயிற்சியினை பெற்று வேலையற்றவர்களாக இருப்பதனை விட வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை (தென் கொரியா, மத்திய கிழக்கு) தேடிக்கொள்வதற்கு முன்னுரிமை அளிப்பதன் காரணமாக TVET பயிற்சிப் பாடநெறிகளிற்கான கேள்விகள் குறைவாக காணப்படுகின்றது என்பதனை, அரச அலுவலர்கள் மற்றும் பயிற்சி வழங்குநர்களுடனான எமது ஆய்வுகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்கான பல்வேறு வகையான மானியங்கள் மற்றும் ஊக்குவிப்புத் திட்டங்கள் என்பன இந்த விருப்பில் கணிசமாக செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

ஆறாவது, தொழிற்கல்வி தொடர்பான சமூக அணுகு முறைகள் சாதகமாக காணப்படவில்லை. பெரும்பாலான பெண் தொழிலாளர்கள் இன்னமும் TVET நிறுவகங்களில் பயிற்சி பெற்ற பின்னரும் துறை தொடர்பான அல்லது ஆலை தொடர்பான வேலைகளை விட அலுவலகம் சார்ந்த வேலைகளையே விரும்புகின்றனர். மேலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தொழிற் கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சிக்கு மாறாக மேலதிக கல்வித் திட்டங்களைத் பெற்றுக்கொள்வதன் பொருட்டு உந்துகின்றனர்.

இறுதியாக, முழுநேர அடிப்படையிலான TVET பயிற்சியின் பொருட்டு பெரும்பாலான மாணவர்களுக்கு பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கு பணம் வழங்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அதேநேரம் பணம் தொடர்பான உறுதியான அடிப்படையினை கொண்டுள்ள மாணவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் கற்கைகளை தொடர்வதுடன் பணப்பற்றாக்குறை உள்ள மாணவர்கள் வெளிவாரிப் பட்டப்படிப்புகளிற்கான வகுப்புகள் வார இறுதி நாட்களில் நடைபெறுவதனாலும், கிழமை நாட்களில் வேலைக்கு செல்லக்கூடியதாக காணப்படுவதன் காரணமாகவும் திறனற்ற தொழிலாளர்களாக வேலைசெய்வதுடன் தமது உயர்கல்வியினையும் தொடர்கின்றனர்.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற பிளவுபட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்படாத உயர்கல்வி மற்றும் TVET முறைமையானது நாட்டின் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளை பாரதூரமாக பாதித்துள்ளது. அதிக எண்ணிக்கையிலான கலை பட்டதாரிகள் வேலைவாய்ப்பற்றவர்களாகவும் மற்றும் அரசாங்க கொள்கை வகுப்பாளர்களுக்கு ஓர் பாரிய சுமையாகவும் மாறியுள்ளமையானது பல்வேறு

திட்டங்களின் கீழ் உயர் கல்வியின் தீவிர ஏற்றத்தாழ்வுகளிலிருந்து உருவாகியுள்ளது. 2015 வரை, இலங்கையில் ஏறத்தாழ 50% ஆன பட்டதாரிகள் கலை பட்டதாரிகளாக காணப்பட்டனர்.

## 2.7 சாராம்சம்

இவ் அத்தியாயமானது வட மத்திய மாகாணத்தின் சமூக - பொருளாதார சூழ்நிலை மற்றும் தொழிலாளர்களின் சூழல்கள் ஆகியவற்றின் போக்குகள், வடிவங்கள் மற்றும் வளர்ச்சிகள் ஆகியவற்றை விளக்கியுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளிற்கு எதிர்வுகூறப்பட்ட தொழிலாளர் வளர்ச்சியானது இவ் அத்தியாயத்தின் மிக முக்கியமான சிறப்பம்சம் ஆகும். அடுத்த ஐந்தாண்டு காலப்பகுதியில் வட மத்திய மாகாணத்தில் தொழிலாளர் சந்தைகளினுள் நுழைபவர்களின் எண்ணிக்கையானது கிட்டத்தட்ட மாறாத நிலையில் காணப்படும். வடமத்திய மாகாணத்தின் பொருளாதாரமானது குறிப்பிட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கி, இவ் எண்ணிக்கையினர் தொழிலாளர் சந்தைகளினுள் நுழையக்கூடியதாக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட தொழிலாளர்களுக்கு திறன்மிக்க மற்றும் பகுதி திறன்மிக்க தொழில்களை வழங்குவதற்கு ஏதுவாக கைத்தொழில்துறையின் வளர்ச்சியும் மற்றும் அதனோடு இணைந்த சேவை துறையின் வளர்ச்சியும் தேவைப்படுகிறது.

## அத்தியாயம் 03
## வாழ்வாதார தொழில்களுக்கான பயிற்சி தேவைகள்

### 3.1. பின்னணி

சிறுவியாபார முயற்சிகள் பிராந்திய பொருளாதாரங்களின் ஓர் முக்கிய மற்றும் வளர்ந்துவரும் பகுதியினை உருவாக்குகின்றது. சிறுவியாபார முயற்சிகள் நடைபாதை வியாபாரிகள், தச்சர்கள், இயந்திர கடை இயக்குநர்கள் மற்றும் சிறுவியாபாரிகள் போன்ற பல்வேறு வகைகளை உள்ளடக்குகின்றது. அவர்கள் பல அளவுகளிலான வியாபாரங்களில் ஈடுபடுகின்றனர். இவ் வேறுபட்ட குழுவுக்கு அதன் வளர்ச்சி மற்றும் மேம்படுத்தல் என்பவற்றின் பொருட்டு பல்வேறு வகையான ஆதரவுகள் தேவைப்படுகிறன. அனேகமான ஆண்கள் மற்றும் பெண்கள் மற்றும் அவர்களது ஊழியர்கள் ஏழைகளாகவும் சேவைகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அணுகக்கூடியவர்களாகவும் உள்ளனர். ஆனால் அவர்கள் சாத்தியமான நிலையில் உள்ளனர். இலங்கையில் உள்ள வியாபாரங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை 5 அல்லது அதற்கும் குறைந்த எண்ணிக்கையான ஊழியர்களே ஈடுபடுவதுடன் அவர்கள் மொத்த வேலைவாய்ப்புகளில் அரைவாசிக்கும் கூடுதலாக உள்ளனர் (இலங்கை மத்திய வங்கி, பல்வேறு ஆண்டுகள்).

சிறு வியாபார முயற்சிகள் பிரதேச பொருளாதாரத்தின் மையமாக உள்ளன. சிறு வியாபார முயற்சிகளின் பொருளாதாரத்திற்கான பங்களிப்பானது வேறுபடுவதுடன் சமூகத்தின் குறைந்த வருமான மட்டத்திற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக தோன்றுகின்றது. சிறுவியாபார முயற்சிகள் பொருளாதார வளர்ச்சி, சமூக உறுதிப்பாடு மற்றும் சமநிலை என்பவற்றுக் குறிப்பிடத்தக்களவில் பங்களிக்கின்றது. இத் துறையானது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வறுமையிலிருந்து விடுவிகக்கூடிய மிக முக்கியமான வாகனங்களில் ஒன்றாகும். உத்தியோகபூர்வ துறை வேலைகளுக்காக போட்டியிடுவதற்கு அவசியமான திறன்கள் மற்றும் கல்வி என்பன மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுவதனால், இவ் ஆண்கள் மற்றும் பெண்கள் வியாபார உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களாக சிறுவியாபார முயற்சிகளில் பொருளாதார வாய்ப்புகளை பெற்றுக்கொள்கின்றனர். சிறுவியாபார முயற்சிகளில் பெண் ஊழியர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். இத் துறையானது பெண்கள் வழமையாக தங்களின் குடும்பங்களுக்கு வழங்கும் பராமரிப்பிற்கும் கூடுதலாக தங்களுடைய வீடுகளுக்கு வெளியில் வேலை செய்ய உதவுவதுடன் இது அவர்களின் வியாபார வாய்ப்புகளை கட்டுப்படுத்துகிறது.

சிறுவியாபார முயற்சிகளின் அபிவிருத்திக்குரிய சாத்திய தன்மையினை ஏற்படுத்தும் ஆற்றலானது இவ்வாறான தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களின் ஆற்றல்களில்

பெரிதும் தங்கியுள்ளது. வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டுவரும் நபர்கள் தங்களது வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றினை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் தங்களது வியாபாரங்களை அடுத்த நிலைக்கு மேம்படுத்துவதற்கான அடிப்படை திறன்களைக் கொண்டிருக்கவில்லை. எனவே வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டுவரும் நபர்களின் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு பயிற்சி அளிக்கவேண்டியது அரச நிறுவகங்களின் பங்குகளில் ஒன்றாகும். எனவே, இவ் அத்தியாயத்தில், வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களின் பயிற்சி தேவைகளை அறிந்துகொள்ள முயற்சி செய்யப்படுகின்றது. மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விடய ஆய்வுகளிலிருந்து பெறப்பட்டுள்ள தரவுகளிலிருந்து முடிவுகளிற்கு வருதல் மற்றும் இத் துறையிற்கு தேவையான கூடுதல் பயிற்சித் தேவைகள் தொடர்பான பரிந்துரைகளை வழங்குதல் என்பவற்றின் பொருட்டு இத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

**வாழ்வாதார தொழில்களிற்கான பயிற்சி தேவைகளை பகுப்பாய்வு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட முறைகள்:**

வடமத்திய மாகாணத்திலுள்ள அனைத்து வாழ்வாதார தொழில்கள் அல்லது சிறுவியாபார முயற்சிகளின் வடிவத்தில் மாதிரிகள் சேகரிப்பு சட்டகமானது காணப்படாமையினால் ஏதாவது எழுந்தமானமாக மாதிரிகள் சேகரித்தல் செயற்பாட்டினை பயன்படுத்துவது சாத்தியமற்றதாகும். எனவே எழுந்தமானமாக மாதிரிகளை சேகரித்தல் அல்லாத முறையான "வசதியான மாதிரி சேகரித்தல்" முறையானது விடயஆய்வுகளிற்கு பயன்படுத்தப்பட்டது. களத்திலிருந்து எழுந்தமானமாக மாதிரிகள் சேகரித்தல் முறையின் கீழ் அனுராதபுர மாவட்டத்தில் இருந்து 34 வாழ்வாதார தொழிலாளர்களும் பொலன்னறுவை மாவட்டத்தில் இருந்து 32 வாழ்வாதார தொழிலாளர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். வடமத்திய மாகாணத்தின் பெரும்பாலான பிரதேச செயலக பிரிவுகளிற்குட்பட்ட நபர்களை நேர்காண்பதற்காக கணக்கெடுப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டனர். விடய ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட விபரங்கள் எழுதப்பட்டன. விடய ஆய்வுகளில் “எழுந்தமானமாக கள மாதிரிகள் சேகரித்தல்” முறையினை பயன்படுத்தியதன் மூலம் போதுமான அளவு மாதிரிகள் எழுந்தமானமாக சேகரித்தலானது பேணப்பட்டுள்ளது.

விடய உள்ளடக்கங்கள் "உள்ளடக்க பகுப்பாய்வு" முறையை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. உள்ளடக்க பகுப்பாய்வு என்பது, பண்பு சார்ந்த தரவுகளிலிருந்து உள்ளடக்கங்களை கொண்ட பல்வேறு அம்சங்களை கணக்கிடுவதன் மூலம் உள்ளடக்கத்தின் எந்தவொரு வடிவத்தையும் சுருக்கும் ஓர் முறையாகும். இது ஓர் கேட்பவரின் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளடக்கத்தை ஒப்பிடுவதிலும் பார்க்க ஓர் கூடுதல் அளவீட்டினை செய்யக்கூடிய மதிப்பீட்டிற்கு வழிவகுக்கின்றது. உள்ளடக்க பகுப்பாய்வு, இதன் போது பெரும்பாலும் எழுதப்பட்ட

சொற்கள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது என்றாலும், இது பதில்களை மதிப்பீடு செய்வதன் மூலம் அளவிடக்கூடிய தரவுகளாக மாற்றுவதற்கு உதவும் ஒரு பண்பு ரீதியான முறையாகும். உள்ளடக்க பகுப்பாய்வின் முடிவுகளை இதன் காரணமாக எண்களாகவும் மற்றும் சதவீதங்களாகவும் மாற்றிக்கொள்ளமுடியும். உதாரணமாக, ஓர் உள்ளடக்க பகுப்பாய்வினை செய்து முடித்த பின்னர், விடய ஆய்வுகளின் போது பதிலளிப்பவர்களால் வழங்கப்பட்ட பதில்களிலிருந்து ஒருவரால் "60 சதவீதமான வாழ்வாதார தொழிலார்கள் ஓர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் தொடர்பான விசேட பயிற்சியினை விரும்புகின்றனர்" என்ற கூற்றினை உருவாக்க முடியும். இது போன்று அறிக்கையிடுவது சுலபமானதாகவும் மற்றும் எளிமையானதாகவும் தோன்றலாம் எனினும், கணக்கீடு இரண்டு நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றது: சுருக்கங்களில் இருந்து அனேகமான பண்பறி ரீதியான தன்மையினை அகற்றுதல் மற்றும் போக்குகளை கண்டறிவதை எளிதாக்குதல். பகுப்பாய்வு செய்யப்படும் உள்ளடக்கமானது எந்தவொரு வடிவத்திலும் ஆரம்பிக்கலாம் ஆனால் அது பகுப்பாய்வு செய்வதற்கு முன்னர் பெரும்பாலும் எழுதப்பட்ட சொற்களாக மாற்றப்படுகின்றது. மூலாதாரங்கள் அச்சிடப்பட்ட பிரசுரங்கள், ஒலிபரப்பு திட்டங்கள், ஏனைய பதிவுகள், இணையம் அல்லது நேரடி சூழ்நிலைகள் அல்லது தற்போதைய ஆய்வின் அடிப்படையிலான விடய ஆய்வு விபரங்கள் என்பனவாக காணப்படமுடியும். இந்த அனைத்து உள்ளடக்கங்களும் மக்கள் உருவாக்கிய ஒன்றாகும். ஒருவரால் வானிலை உள்ளடக்க பகுப்பாய்வினை செய்யமுடியாது - ஆனால் ஒருவர் வானிலை எதிர்வுகூறல் அறிக்கையினை எழுதுவாராயின், அவனால்/ அவளால் அதற்கான உள்ளடக்க பகுப்பாய்வினை செய்யமுடியும்.

### 3.2. மாகாணத்திலுள்ள வாழ்வாதார தொழில்கள்

வடமத்திய மாகாணத்தின் பிரதான வாழ்வாதாரமானது வேளாண்மையாகும் இதில் நெல் மற்றும் *சேனை* பயிர்ச்செய்கை என்பனவும் அடங்குகின்றது. வடமத்திய மாகாணத்தில் உள்ள மக்கள் தொகையில் 60 சதவீதத்திற்கும் அதிகமானோர் விவசாயம் அல்லது அதனுடன் தொடர்புடைய வாழ்வாதாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆயினும், முறையான மற்றும் முறைசாரா பண்ணை அல்லாத துறைசார் வாழ்வாதாரங்களை காணமுடியும். முறையான துறையில் சில பெரிய தொழிற்சாலைகள், சில்லறை மற்றும் மொத்த விற்பனை தொழிற்துறை, போக்குவரத்து மற்றும் பொது வசதிகள் என்பவை உள்ளடங்குகின்றன. பண்ணை அல்லாத முறைசார் துறையில் காணப்படும் வேலைவாய்ப்புகள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி இனை பெற்றுக்கொண்டுள்ள நபர்களால் பெரும்பாலும் அடையாளப்படுத்தப்படுகின்றது. இது தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விக்கான கைத்தொழிற்துறையின் தேவை பகுப்பாய்வில் குறிப்பிடப்படுகின்றது.

வடமத்திய மாகாணத்தில் உள்ள பண்ணை அல்லாத வாழ்வாதார தொழில்கள் பரந்தளவிலான மற்றும் பல்வகைப்பட்ட தன்மையினை கொண்டவை ஆகும். அவை தொழிற்துறை மற்றும் சேவை துறைசார் தொழில்களை உள்ளடக்கியுள்ள போதிலும் பெரும்பாலானவை சேவை துறையினை சார்ந்தவையாகும். வடமத்திய மாகாணத்தில் பின்வரும் வகையான தொழில்கள் வாழ்வாதார தொழில்களில் ஆதிக்கம் செலுத்துவதுடன் அவை குறித்தளவு எதிர்கால பயிற்சி தேவைகளை கொண்டிருக்கின்றன. வடமத்திய மாகாணத்தில் காணப்படும் பல்வேறு வகைப்பட்ட வாழ்வாதார தொழிலாளர்கள் தொடர்பான விபரங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இத் தொழில்கள் விவசாய சிறு வியாபாரங்களிலிருந்து சில்லறை வர்த்தகம் மற்றும் மனித உழைப்பு (அட்டவணை 3.1) என்பவற்றில் பிரதானமாக கவனம் செலுத்துகின்ற சேவைகள் வரை பரந்து காணப்படுகின்றன. இவ் வாழ்வாதார தொழில்களில் பெரும்பாலானவை குறைந்த தொழில் நுட்ப திறன்கள் மற்றும் பயிற்சிகளை கொண்ட சுய வேலைவாய்ப்புகளாகும். இத் தொழில்கள் விவசாயிகளின் உயிர்வாழும் உத்திகளாக உருவாகியுள்ளதுடன் இவை பாரம்பரிய இயல்பை கொண்டவை. வாழ்வாதார தொழில்கள் வளர்ந்துவரும் கைத்தொழிற்துறை மற்றும் சேவைத் துறைகளால் உருவாக்கப்பட்ட வாழ்விட சந்தைகளின் விளைவாக உருவாக்கப்பட்டுள்ளன. விவசாயம் தொடர்பான சேவைகள் சுய தொழில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு வழிவகுத்துள்ளன. எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்களவு கைத்தொழிற்துறைசார் அபிவிருத்தி செயன்முறைகளை ஏற்படுத்துவதற்கும் மற்றும் க.பொ.த. (சா/ த) அல்லது க.பொ.த. (உ/ த) பரீட்சையின் பின்னர் கல்வியறிவினை உடையவர்களாக தொழிலாளர் சந்தையினுள் நுழையும் தனிநபர்களுக்கு திறன்மிக்க மற்றும் பகுதி திறன்மிக்க தொழிலாளர்களாக உருவாக்குவதற்கான சாத்தியமான நிலைமையானது காணப்படுகின்றது.

**அட்டவணை 3.1: வடமத்திய மாகாணத்திலுள்ள ஒவ்வொரு உப துறைகளிலும் காணப்படும் வாழ்வாதார தொழில் வகைகள்**

| | உப துறை | தொழில் வகைகள் |
|---|---|---|
| 1 | விவசாயம் மற்றும் கோழி | கோழி பண்ணையாளர், மாடு மற்றும் எருமை வளர்ப்பவர், மரக்கறி விவசாயி, காளான் விவசாயி, தேனி வளர்ப்பவர் |
| 2 | உணவு மற்றும் குடிபானங்கள் | தேநீர் விற்பவர், பழ ரசங்கள் தயாரிப்பவர் மற்றும் விற்பனை செய்பவர், நீர் சுத்தமாக்குபவர் மற்றும் |

| | உப துறை | தொழில் வகைகள் |
|---|---|---|
| | | வழங்குபவர், இனிப்பு தயாரிப்பவர், தயிர் தயாரிப்பவர், உணவு பதனிடுபவர் |
| 3 | தேங்காயினை அடிப்படையாகக் கொண்டவை | தேங்காய் எண்ணை தயாரிப்பவர் மற்றும் விற்பனை செய்பவர், தேங்காய் சிரட்டையினை பயன்படுத்தி கைவினைப்பொருட்கள் செய்பவர், தென்னோலை சம்பந்தமான உற்பத்திகள், துடைப்பம் தயாரிப்பவர் மற்றும் விற்பவர் |
| 4 | கைவேலை | விவசாய கருவிகள் மற்றும் உபகரண தயாரிப்பாளர் மற்றும் பராமரிப்பாளர், வீட்டுப்பாவனை கருவிகள் மற்றும் உபகரண தயாரிப்பாளர், கைத்தறி உற்பத்தியாளர், மட்பாண்ட தயாரிப்பாளர், பிரம்பு தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்பவர் |
| 5 | ஆடை உற்பத்தி | கைத்தறி உற்பத்தியாளர் |
| 6 | சீமெந்து அடிப்படையிலான தொழில்கள் | செங்கல் தயாரிப்பவர், சீமெந்து கல் தொடர்பான உற்பத்திகள் |
| 7 | காலணி மற்றும் தோற் பொருட்கள் | காலணி தைப்பவர், காலணி தயாரிப்பவர், தோல்/ லெதர் அடிப்படையிலான பொருட்கள் (பைகள் போன்றவை) |
| 8 | மரத்தினை அடிப்படையாகக் கொண்டவை | தளபாட தயாரிப்பாளர், வீட்டு கூரை கட்டுபவர், யன்னல்கள் மற்றும் கதவுகள் தயாரிப்பவர், மரத்தினை அடிப்படையாகக் கொண்ட கலைப் பொருட்களை உற்பத்தி செய்பவர் |
| 9 | காகிதத்தினை அடிப்படையாகக் கொண்டவை | பயிற்சிப்புத்தக தயாரிப்பாளர், பை உற்பத்தியாளர், கணக்குப்புத்தகங்கள், சிட்டைப்புத்தகங்கள் என்பன தயாரிப்பவர் |
| 10 | சேவைகள் | மீன் விற்பவர், மொத்த விற்பனையாளர், திரிந்து விற்பவர், தோட்டக்காரர், பழங்கள் சேகரிப்பவர், மேசன் தொழில் செய்பவர், தச்சுத் தொழில் செய்பவர், கட்டுமான தொழிலாளர், கட்டுமான உதவியாளர், வீட்டு உதவியாளர், வரவேற்று தொழிலாளர், விளம்பரம் |
| 11 | நுண்ணளிவிலான விவசாய உற்பத்திகள் | மரக்கறி செய்பவர், பழ மரங்கள் வளர்ப்பவர் |

| | உப துறை | தொழில் வகைகள் |
|---|---|---|
| 12 | உள்நாட்டு மீன்பிடி | மீன் பிடிப்பவர், மீன் விற்பவர் |
| 13 | கால்நடை மற்றும் கோழிப்பண்ணை | வீட்டு முறைமைகள், உணவு வழங்கல் மற்றும் உணவு வழங்கும் நுட்பங்கள், நோய்கள் மற்றும் ஒட்டுண்ணிகளை தடை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல், தினசரி மற்றும் குறிப்பிட்ட நாளாந்த நடவடிக்கைகள் |
| 14 | தோட்டம் செய்தல் | பழத்தோட்டவியலாளர், பாதுகாப்பியலாளர், பூத்தோட்டவியலாளர், நாற்று மேடை பராமரிப்பியலாளர், பராமரிப்பவர் |
| 15 | ஏனையவை | அலங்கார மீன்கள் வளர்ப்பவர் |

ஆதாரம்: திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறும் தகவல்கள்

வடமத்திய மாகாணத்தில் வாழ்வாதார தொழில்கள் தொடர்பான கருத்துக்கள் மற்றும் பயிற்சி தேவைகளை பெற்றுக்கொள்வதற்காக நாம் அனுராதபுர மாவட்டத்தில் 34 பேரிடமும், பொலன்னறுவை மாவட்டத்தில் இருந்து 32 பேரிடமும் விடய ஆய்வகளை மேற்கொண்டோம். விடய ஆய்வுகளின் முடிவுகள் இனிவரும் பகுதிகளில் விவாதிக்கப்படுகின்றன. நாம் தற்போதைய பயிற்சி தேவைகள், பயிற்சி தேவைகள், பயிற்சி காலம், வாழ்வாதார தொழில்களுக்காக பயிற்சியளிக்கும் வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் என்பன தொடர்பாக எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் சவால்கள் போன்றவை உள்ளடங்கலாக சில விடயங்களை கருத்திற்கொண்டு விவாதிக்கின்றோம்.

### 3.3. வாழ்வாதார தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

வடமத்திய மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விடய ஆய்வுகளை பகுப்பாய்வு செய்து எம்மால் வாழ்வாதார தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் மற்றும் சவால்களை அடையாளம் காண முடிந்தள்ளது. அட்டவணை 3.2 மற்றும் 3.3 ஆகியவற்றில் வியாபார செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பதிலளிப்பவர்கள் தற்போது எதிர்நோக்கிவரும் வியாபாரம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக வழங்கிய தகவல்கள் சுருக்கமாக தரப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடப்படுவதற்கு இணங்க அனேகமான பிரச்சினைகள் பொருளாதார தன்மை வாய்ந்தவையாக காணப்படுகின்றன. ஆனால் வாழ்வாதார தொழிலாளர்களால் எழுப்பப்பட்ட சில பிரச்சினைகள் பயற்சி வழங்கலுடன் தொடர்புபட்டவையாக காணப்படுகின்றன. வடமத்திய மாகாணத்தின் இரண்டு மாவட்டங்களையும் சார்ந்த வாழ்வாதார தொழிலாளர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் பின்வருமாறு சுருக்கமாக தரப்படுகின்றன:

a. பொருத்தமான நவீன உபகரணங்களுக்கான பற்றாக்குறை
b. மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் நிலவும் இடர்பாடுகள்
c. நவீன தொழில்நுட்ப பயிற்சிகள் தொடர்பான பற்றாக்குறை
d. நிகழ்ச்சித்திட்ட நிகழ்ச்சி நிரல்கள் மிகவும் இறுக்கமாக காணப்படுவதாலும் மற்றும் அதிக நேரத்தினை எடுத்துக்கொள்வதாலும் தற்போதைய பயிற்சிகளை பெறவதில் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.
e. பெரும்பாலான தொழில்களுடன் தொடர்புடைய அறிவு காணப்படாமை
f. தொழில்முனைவோர் பற்றிய பயிற்சிகளிற்கான பற்றாக்குறை
g. முறையான விரிவாக்கல் சேவைகள் மற்றும் பொருத்தமான நிபுணத்துவ சேவைகள் இல்லாமை
h. நிதி மூலதனத்தின் பற்றாக்குறை மற்றும் வங்கிகளை அணுகுவதிலுள்ள சிக்கல்கள். உயர் வட்டி வீதங்கள் மற்றும் பிணையாளிகள் தேவைப்படுகின்றமையினால் கடன்களை பெற்றுக்கொள்ளமுடியாமை, மற்றும்
i. சந்தைகள் தொடர்பாக உரிய நேரத்திற்கான தகவல்கள் கிடைக்கப்பெறாமை

இப் பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்கு வடமத்திய மாகாணத்தில் வாழ்வாதார தொழில்கள் மற்றும் கைத்தொழிற்துறையினை அபிவிருத்தி செய்வதற்கான ஓர் எதிர்கால செயற்திட்டம் மற்றும் பயிற்சி வழங்கல்கள் ஆகியன தேவைப்படுகின்றன.

**அட்டவணை 3.2: அனுராதபுர மாவட்டத்தில் வாழ்வாதார தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**

| | பெயர் | தொழில்/ உற்பத்திகள் | எதிர்நோக்கும் பிரச்சினைகள் |
|---|---|---|---|
| 1 | ஹேமமாலி | சீமேந்து கற்களை தயாரித்தல் | நீர் பற்றாக்குறை, நவீன உபகரண பற்றாக்குறை |
| 2 | குணசேன | தளபாட தயாரிப்பு | தரமான மரங்கள் மற்றும் நவீன உபகரணங்களை பெற்றுக்கொள்ள முடியாமை |
| 3 | நிசன்சலா | பால் உற்பத்தி | விலங்குகளிற்கான உணவுகளை பெற்றுக்கொள்ளல், உயர் இனப்பெருக்க விலங்குகளை கொள்வனவு செய்வதில் சிரமம் |
| 4 | வருசுத் | காய்ச்சி இணைப்பவர் | நவீன உபகரணங்களை கொள்வனவு செய்வதில் சிரமம் காணப்படல் |
| 5 | மதுபாஷினி | பூத்தோட்டங்களை உற்பத்தி செய்தல் | மூலப் பொருட்களிற்கான பற்றாக்குறை |

| | பெயர் | தொழில்/ உற்பத்திகள் | எதிர்நோக்கும் பிரச்சினைகள் |
|---|---|---|---|
| 6 | குசுமலதா | தையல் | வியாபாரம் செய்யக்கூடி இடத்தினை பெற்றுக்கொள்ள முடியாமை |
| 7 | சோமபால | தையல் | நவீன உபகரணங்களை கொள்வனவு செய்வதில் சிரமம் |
| 8 | லசந்த | தாவர நாற்றுமேடை | நோய் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் சந்தைக்கு கொண்டுசெல்லல் |
| 9 | மல்லிகா | பால் உற்பத்தி | புற்கள் மற்றும் தீனிகளை பெற்றுக்கொள்ள முடியாமை |
| 10 | குமார | முடி வெட்டுபவர் | வியாபார அபிவிருத்தி |
| 11 | ஹந்தபான்கொட | சீமெந்து கல் உற்பத்தி | நீர் மற்றும் மணலினை பெற்றுக்கொள்ள முடியாமை, நவீன உபகரணங்களை கொள்வனவு செய்வதில் சிரமம் |
| 12 | ஆரியதாச | கோழிப்பண்ணை | பண்ணை மற்றும் உணவு வழங்கல் முறைகள் |
| 13 | குணரத்ன | செங்கல் உற்பத்தி | நீர் மற்றும் களி மண்ணினை பெற்றுக் கொள்ள முடியாமை |
| 14 | தனபால | பால் உற்பத்தி | உயர் விளைச்சலை கொண்ட விலங்குகள், விலங்கு வைத்திய வேவையினை உரிய நேரத்தில் பெற்றக் கொள்வதில் சிரமம் |
| 15 | குமார | பால் உற்பத்தி | விலங்குகளிற்கான உணவுகளை பெற்றுக்கொள்ளல், கன்றுகளை பெற்றுக்கொள்வதில் சிரமம் |
| 16 | மதுசங்க | தளபாட தயாரிப்பு | நவீன உபகரணங்களை கொள்வனவு செய்வதில் சிரமம் |
| 17 | ஷாலிக | அழகு நிலையம் | கடன் தொல்லைகள், வியாபாரத்திற்கு ஏற்ற இடத்தினை பெற்றுக் கொள்வதில் சிரமம், அரசாங்கத்தின் உதவி கிடைக்காமை |
| 18 | லாலந்தி | தையல் | கடன் தொல்லைகள், நவீன உபகரணங்களை பெற்றக் |

| | பெயர் | தொழில்/ உற்பத்திகள் | எதிர்நோக்கும் பிரச்சினைகள் |
|---|---|---|---|
| | | | கொள்வதில் சிரமம், மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதில் சிரமம் |
| 19 | பிரேமசிறி | தளபாடம் | நவீன உபகரணங்கள் காணப்படாமை, மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிரமம், போக்குவரத்து பிரச்சினைகள் |
| 20 | திலகரத்ன | செங்கல் உற்பத்தி | நீர் தட்டுப்பாடு, களிமண் தட்டுப்பாடு |
| 21 | சந்திரசிறி | கோழி வளர்ப்பு | விலங்குணவு பற்றாக்குறை, பெற்றுக்கொள்வதில் சிரமம் |
| 22 | அபேரத்ன | கண்ணாடி வெட்டுதல் | போக்குவரத்து மற்றும் பெற்றுக்கொள்வதில் சிரமம் |
| 23 | பத்மசிறி | அலங்கார மீன் வளர்ப்பு | மீன் வகைகளை பெற்றுக்கொள்வதில் சிரமம் |
| 24 | சோமசிறி | கோழி வளர்ப்பு | நவீன கூடுகளை பெற்றுக்கொள்ளமுடியாமை, விலங்குணவு விலைகளின் தளம்பல்கள் |
| 25 | சரத் | கோழி வளர்ப்பு | விலங்குணவு பற்றாக்குறை, பெற்றுக்கொள்வதில் சிரமம் |
| 26 | சிசிர | தளபாட உற்பத்தி | புதிய மற்றும் உபகரணங்கள் கிடைக்கப்பெறாமை |
| 27 | இந்திராணி | தாவர நாற்றுமேடை | பண்ணை வீடுகள் |
| 28 | முனசிங்க | இரும்பு வேலை | புதிய உபகரணங்கள், மூலப்பொருட்கள் |
| 29 | பிரியந்த | தளபாட உற்பத்தி | நவீன உபகரணங்கள், மூலப்பொருட்கள் மற்றும் போக்குவரத்து பிரச்சினை |
| 30 | ரத்நாயக்க | சீமேந்து கல் உற்பத்தி | மூலப்பொருட்கள், பெற்றுக்கொள்வதில் சிரமம் |
| 31 | கரோலிஸ் | தளபாட உற்பத்தி | நவீன உபகரணங்களை பெற்றுக்கொள்வதில் சிரமம், நவீன உபகரணங்கள் தொடர்பான |

| | பெயர் | தொழில்/ உற்பத்திகள் | எதிர்நோக்கும் பிரச்சினைகள் |
|---|---|---|---|
| | | | பயிற்சிகள் இடம்பெறாமை |
| 32 | குணரத்ன | மேசன் | ரைல்களை பதித்தல் தொடர்பான பயிற்சிகள் இடம்பெறாமை |
| 33 | செனிவிரத்ன | அழகுபடுத்தல் சலூன் | வியாபார ஸ்தாபனம் இன்மை, அதிகூடிய வாடகைகள், பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்கள், அரச உதவிகள் இல்லாமை |
| 34 | குணசேன | தளபாட உற்பத்தி | மரங்கள் கிடைக்கப்பெறாமை, நவீன உபகரணங்கள் |

**அட்டவணை 3.3: பொலன்னறுவை மாவட்டத்தில் வாழ்வாதார தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**

| | பெயர் | தொழில்/ உற்பத்திகள் | எதிர்நோக்கும் பிரச்சினைகள் |
|---|---|---|---|
| 1 | சில்வா | மீன் விற்பனை | பெற்றுக்கொள்வதில் சிரமம் |
| 2 | குமாரி | உடனடி உணவு தயாரிப்பு | சந்தை மற்றும் வியாபார ஸ்தானபனம் காணப்படாமை |
| 3 | ஜெயலத் | ஜோக்கட் மற்றும் ஐஸ் பக்கட் உற்பத்தி இயந்திரம் | சந்தைக்கு கொண்டுசெல்லல் பிரச்சினை, அரச உதவிகள் இன்மை |
| 4 | பிரியங்காரா | சில்லறை வியாபாரம் | இருப்பு கட்டுப்பாடு, வியாபார முகாமைத்துவம் |
| 5 | சந்திரகாந்தி | தையல் | மூலப் பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிரமம் |
| 6 | குணசேகர | தையல் | சந்தைப்படுத்துதல் பிரச்சினை |
| 7 | பிரியந்தி | பால் உற்பத்தி | வியாபார ஸ்தாபனம் காணப்படாமை |
| 8 | திலகரத்ன | விலங்கு வேளாண்மை | புற்கள் மற்றும் பணியாளர்கள் காணப்படாமை |
| 9 | ஹேரத் | பாரம்பரிய கோழி வளர்ப்பு | விலை தளம்பல்கள் |
| 10 | இந்திரலதா | தாவர நாற்றுமேடை | அரசியல் மயப்படுத்தப்பட்ட பயிற்சி நடவடிக்கைகள், போக்குவரத்து வசதிகள் இன்மை |
| 11 | பிரேமசிங்க | மீன் விற்பனை | நிதி பற்றாக்குறை, வியாபார |

| | பெயர் | தொழில்/ உற்பத்திகள் | எதிர்நோக்கும் பிரச்சினைகள் |
|---|---|---|---|
| | | | ஸ்தாபனம், தொழில்நுட்ப பயிற்சிகள் காணப்படாமை |
| 12 | ரூபசிங் | மரக்கறி தாவர நாற்றுமேடை | நெருக்கமான வியாபார ஸ்தாபனம், தொழில்நுட்ப அறிவு இன்மை |
| 13 | ஹேமலதா | குடிபான தயாரிப்பு மற்றும் விற்பனை | சுற்றுலா ஸ்தலங்கள் தொடர்பான பிரபல்யம் இன்மை |
| 14 | ரத்நாயக்க | நெல் மற்றும் தானியம் அரைக்கும் ஆலை | உபகரணம் மற்றும் நிதி பற்றாக்குறை |
| 15 | பண்டா | பொங்கிரீட்டிலான அலங்கார பொருட்களை தயாரித்தல் | மூலப் பொருட்கள், கடும் போட்டி |
| 16 | விக்கிரம | தாவர நாற்றுமேடை | சந்தைப்படுத்தல், அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ள அரச திட்டங்கள் |
| 17 | விஜேரத்ன | நடமாடும் மீன் வியாபாரம் | மோட்டார் சைக்கிளினை வாங்குவதில் சிரமம் |
| 18 | நிமல் | சோள விற்பனை | சோள பயிர்ச்செய்கை தொழில்நுட்பங்கள் |
| 19 | ஞானவதி | தடி உற்பத்தி | மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிரமம், சந்தைப்படுத்துதல் பிரச்சினை |
| 20 | ஆரியவதி | பாற்பண்ணை, கோழி | புற்கள் கிடைக்கப்பெறாமை |
| 21 | செனரத்ன | வீடுகள் திட்டமிடல் | மேலதிக பயிற்சிகள் இடம்பெறாமை |
| 22 | டிஷான் | அலங்கார மீன் விற்பனை | திறன்கள் இன்மை, அவசிய தொட்டிகள் காணப்படாமை மற்றும் உணவு |
| 23 | ரேணுகா | உணவு பதனிடுதல் | திறன்கள் மற்றும் அறிவு காணப்படாமை |
| 24 | பிரியந்த | கடல் மீன் விற்பனையாளர் | நிதி, கடன் பற்றாக்குறை மற்றும் உயர் வரிகள் |
| 25 | செனிவிரத்ன | குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் விநியோகம் | சந்தைக்கு கொண்டுசெல்லல் பிரச்சினை |
| 26 | அபேசிங்க | தயிர் உற்பத்தி | பாதுகாப்பு முறைகள், மழை |

| | பெயர் | தொழில்/ உற்பத்திகள் | எதிர்நோக்கும் பிரச்சினைகள் |
|---|---|---|---|
| | | | காலத்தில் முட்டிகளை பெற்றுக்கொள்ளமுடியாமை, சந்தைக்கு கொண்டுசெல்லல், இயந்திரங்கள் காணப்படாமை |
| 27 | ஜெயதிலக்க | சேதன வளமாக்கி தயாரித்தல் | சந்தைக்கு கொண்டுசெல்லல் பிரச்சினை, விளம்பரப்படுத்தல், அரச உதவிகள், சந்தைக்கு கொண்டுசெல்லல் |
| 28 | பந்துசேன | தயிர் உற்பத்தி | பாதுகாப்பு முறைகள், மழை காலத்தில் முட்டிகளை பெற்றுக்கொள்ளமுடியாமை, சந்தைக்கு கொண்டுசெல்லல், இயந்திரங்கள் காணப்படாமை |
| 29 | அருணசாந்த | உணவு பதனிடுதல் | நிதிப் பற்றாக்குறை, நீர் இன்மை, வியாபாரத்திற்கான இடம் காணப்படாமை |
| 30 | இன்டிக | உணவு பதனிடுதல் | நிதிப் பற்றாக்குறை, நீர் இன்மை, வியாபாரத்திற்கான இடம் காணப்படாமை |
| 31 | தர்மபந்து | பிரம்பு தொடர்பான உற்பத்திகள் | உறுதியான விலை காணப்படாமை, சந்தைக்கு கொணடுசெல்லல் பிரச்சினை மற்றும் நிதிப்பற்றாக்குறை |
| 32 | நுவன் | தையல் | நிதியினை பெற்றுக்கொள்ளல் |

### 3.4. வாழ்வாதார தொழிலாளர்கள் பெற்றுக்கொண்டுள்ள பயிற்சிகள்

அட்டவணைகள் 3.4 மற்றும் 3.5 ஆகியவை பல்வேறுபட்ட வாழ்வாதார தொழிலாளர்கள் பெற்றுக்கொண்டுள்ள பயிற்சிகளை எடுத்துக்காட்டுகின்றன. நாட்டிலுள்ள வாழ்வாதார தொழில்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் ஓர் தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. வாழ்வாதார தொழிலாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சிகள் தொடர்பாக பின்வரும் வெளிப்படையான உண்மைகளை அவதானிக்க முடியும்:

a. பெரும்பாலான வாழ்வாதார தொழிலாளர்கள் வேலையின் போதான பயிற்சியாக முறைசாரா பயிற்சிகளை பெற்றிருக்கின்றார்கள்.

b. பெரும்பாலான பயிற்சி திட்டங்கள் இயல்பில் மிகவும் குறுகிய காலத்திற்குரியவையாக காணப்படுகின்றன
c. பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சிகள் திறன்களை அளிப்பதிலும் பார்க்க விழிப்புணர்வு மற்றும் அறிவுசார் அம்சங்களை மட்டுமே கொண்டிருப்பதாக தோன்றுகிறது.
d. குறிப்பிட்ட தொழில்நுட்ப பயிற்சிகள் மேற்கொள்ளப்படாமை
e. TVEC நிறுவனங்களிலிருந்து குறுகிய கால பயிற்சிகளை பெற்றவர்கள் வாழ்வாதாரத் தொழில்களில் ஈடுபடுவதற்கு தேர்ந்தெடுத்துள்ளனர்.
f. பெரும்பாலான வாழ்வாதார தொழிலாளர்கள் நீடித்து நிலைக்கக்கூடிய எதிர்கால வியாபார வளர்ச்சியினை காட்டிலும் ஓர் உயிர்வாழ்வதற்கான வழியாகவே இவ்வாறான தொழில்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

**அட்டவணை 3.4: அனுராதபுர மாவட்டத்தில் உள்ள வாழ்வாதார தொழிலாளர்கள் ஏறகெனவே பெற்றுக்கொண்டுள்ள பயிற்சிகள்**

| பெயர் | பயிற்சி/ நிறுவகத்தின் தன்மை | காலம் |
|---|---|---|
| ஹேமமாலி | செயலமர்வு | 1 நாள் |
| குணசேன | தொழில்நுட்பக் கல்லூரி | 6 மாதங்கள் |
| குசுமலதா | தையல் | 6 மாதங்கள் |
| சோமபால | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை | 1 வருடம் |
| குமார | முடி திருத்துபவர் | 6 மாதங்கள் |
| ஹந்தபான்கொட | செயலமர்வு | 2 நாட்கள் |
| நிசன்சலா | தொழிற் பயிற்சி | 1 வருடம் |
| செனவிரத்ன | NVQ – மணப்பெண் அலங்காரம் மற்றும் கேக் தயாரிப்பு | 1 வருடம் |
| லலாந்தி | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை | ஒன்றரை வருடங்கள் |
| முனசிங்க | தொழிற் பயிற்சி | 6 மாதங்கள் |
| ஜயசேன | அழகுபடுத்துநர் | 5 மாதங்கள் |
| பிரியந்த | தொழில்நுட்பக் கல்லூரி | 10 மாதங்கள் |
| கரோலிஸ் | தொழிற் பயிற்சி | 6 மாதங்கள் |
| செனவிரத்ன | கேக் தயாரிப்பு, மணப்பெண் அலங்காரம், அழகு நிபுணர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 1 வருடம் |
| குணசேன | தொழில்நுட்ப கல்லூரி | 6 மாதங்கள் |

**அட்டவணை 3.5: பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள வாழ்வாதார தொழிலாளர்கள் ஏறகெனவே பெற்றுக்கொண்டுள்ள பயிற்சிகள்**

| பெயர் | பயிற்சி/ நிறுவகத்தின் தன்மை | காலம் |
|---|---|---|
| சில்வா | முறைசாரா பயிற்சி | - |
| குமாரி | முறைசாரா பயிற்சி | - |
| ஜயலத் | கெத்தொழிற்துறை பயிற்சி | 2 வருடங்கள் |
| பிரியங்கர | முறைசாரா பயிற்சி | - |
| சந்திரகாந்தி | தையல் தொடர்பான முறைசாரா பயிற்சி | - |
| குணசேகர | NVQ- மட்டம் 4 அழகுகலைஞர் | 6 மாதங்கள் |
| பிரியந்தி | முறைசாரா பயிற்சி | - |
| திலகரத்ன | பாற் சபையினால் வழங்கப்பட்ட பயிற்சி | 1 வருடம் |
| ஹேரத் | முறைசாரா பயிற்சி | - |
| ஹேரத் | முறைசாரா பயிற்சி | - |
| பிரேமசிங்க | உணவு பதனிடுதலில் முறைசாரா பயிற்சி | - |
| ரூபசிங்க | முறைசாரா பயிற்சி | - |
| ஹேமலதா | முறைசாரா பயிற்சி | - |
| ரத்னாயக்க | முறைசாரா பயிற்சி | - |
| திலகரத்ன பண்டா | தொழில்நுட்ப கல்லூரி | 3 மாதங்கள் |
| ஞானவதி | சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடான வாழ்வாதார பயிற்சி | 2 நாட்கள் |
| ஆரியவதி | முறைசாரா பயிற்சி | - |
| சேனாரத்ன | வரைபடக் கலைஞர், தேசிய தொழில்நுட்ப சான்றிதழ், ஓட்டோ கட் | 1 வருடம்<br>3 வருடம்<br>6 மாதங்கள் |
| அபயசிங்க | தொழில்நுட்ப கல்லூரி | - |
| ஜயத்திலக்க | இராணுவத்தில் விவசாய பயிற்சி | - |
| தர்மபாண்டு | பிரதேச செயலகத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆடை வடிவமைப்பு பயிற்சி | 3 மாதங்கள் |
| நுவான் | மனைவியினால் பயிற்றுவிக்கப்பட்ட தையல் கலை | - |

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்கள் அட்டவணை 3.6 இல் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் உணவு மற்றும் பானம், கைவினை, மின்னியல், இரசாயனங்களின் பயன்பாடு மற்றும் பரிகரிப்பு, சீமேந்து தொடர்பான பொருட்கள், மரம் சம்பந்தப்பட்ட பொருட்கள், தெங்கு சார்ந்த உற்பத்திகள், கித்துல் மற்றும் பனை உற்பத்திகள், ஜவுளி மற்றும் ஆடைகள், ஆடை தயாரிப்பு, காலணி மற்றும் தோற் பொருட்கள், காகிதம் சார்ந்த தயாரிப்புகள் மற்றும் பல்வேறு சேவைகள் ஆகியன உள்ளடங்கலாக ஏராளமான உப-துறைகள் சார்ந்த வாழ்வாதார தொழிலாளர்களை இலக்காக கொண்டு பெரும் எண்ணிக்கையான பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் மேலே பட்டியற்படுத்தப்பட்டுள்ள அனைத்து உப-துறைகளையும் உள்ளடக்கியதாக அனுராதபுர மாவட்டத்தில் மொத்தம் 595 பயிற்சித் திட்டங்களும் பொலன்னறுவை மாவட்டத்தில் 696 நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன (அட்டவணை 3.6).

**அட்டவணை 3.6: கைத்தொழில் வகைகளின் அடிப்படையில் இலங்கையிலுள்ள வாழ்வாதார தொழிலாளர்களிற்கு திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட பயிற்சிகள்**

## Divi-Neguma National Program on Cottage Industry

***Progress of District Technology Transfer and Training Programs (Sector wise)***

| # | District | Number of Beneficiaries Trained | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | F&B | Handi. | Elect. | Chem. | Cement | Wood | Coco. | K&P | T&A | Garm. | S&L | Paper | Serv. | Misce. |
| 1 | Colombo | 187 | 13 | 8 | 90 | 12 | - | 5 | - | 31 | 36 | 22 | 8 | 192 | - |
| 2 | Anuradhapura | 156 | 69 | 9 | 66 | 11 | 39 | - | 12 | 15 | 85 | 28 | 40 | 58 | 7 |
| 3 | Kegalle | 260 | 88 | 4 | 88 | 21 | 149 | 12 | - | 60 | 142 | 20 | 56 | 502 | - |
| 4 | Gampaha | 241 | 112 | 18 | 89 | 15 | 41 | - | - | 113 | 24 | 59 | 25 | 438 | 14 |
| 5 | Jaffna | 159 | 88 | - | 10 | 1 | 83 | 10 | 143 | 248 | 55 | - | - | 309 | 11 |
| 6 | Moneragala | 90 | 38 | 6 | 12 | 6 | 19 | - | - | 2 | 1 | 18 | 23 | 172 | 3 |
| 7 | Puttlam | 76 | 38 | 15 | 4 | 5 | 3 | - | 46 | 7 | 24 | 37 | 28 | 69 | - |
| 8 | Mannar | 211 | 25 | 9 | 8 | 16 | 99 | - | 50 | 179 | 73 | 1 | - | 358 | 20 |
| 9 | Kandy | 223 | 71 | 8 | 47 | 7 | 36 | - | - | 19 | 93 | 41 | 49 | 53 | 19 |
| 10 | Ratnapura | 324 | 45 | 15 | 26 | 9 | 38 | - | - | 6 | 233 | 29 | 63 | 84 | 2 |
| 11 | Hambanthota | 342 | 514 | 11 | 24 | 4 | 62 | - | 74 | 18 | 356 | 32 | 49 | 72 | 3 |
| 12 | Matale | 273 | 33 | 10 | 60 | 2 | 39 | 18 | - | 9 | 46 | - | 26 | 49 | 7 |
| 13 | Badulla | 320 | 24 | 1 | 96 | 14 | 72 | 36 | - | 15 | 64 | 3 | 61 | 136 | 1 |
| 14 | Killinochchi | 45 | 15 | - | - | 40 | - | - | 88 | 66 | - | - | 34 | 20 | - |
| 15 | Mullaithivu | 130 | 18 | - | 92 | 8 | 3 | - | 49 | 6 | - | 24 | 51 | 1 | - |
| 16 | Polonnaruwa | 116 | 26 | 19 | 85 | 9 | 85 | - | - | 12 | 218 | 2 | 2 | 96 | 6 |
| 17 | Batticaloa | 129 | 1 | - | 64 | - | 24 | 6 | 240 | - | 214 | - | - | 30 | - |
| 18 | Galle | 119 | 149 | - | 79 | 3 | 202 | 41 | - | 63 | 339 | - | 1 | 177 | 14 |
| 19 | Vavuniya | 10 | - | - | 5 | 16 | - | 3 | 63 | 7 | - | - | 1 | 102 | 2 |
| 20 | Trincomalee | 140 | - | - | 2 | 16 | - | - | 37 | 14 | - | - | - | - | 1 |
| 21 | Nuwara-Eliya | 26 | - | - | 126 | 9 | - | - | - | 8 | - | 1 | - | 101 | 8 |
| 22 | Kalutara | 245 | 10 | 6 | 71 | 12 | 38 | - | 1 | 18 | 4 | - | - | - | 13 |
| 23 | Kurunegala | 306 | - | 1 | 178 | 5 | - | - | - | 13 | - | 1 | - | - | 1 |
| 24 | Matara | 340 | - | - | 208 | - | 58 | 70 | - | 20 | - | - | - | - | - |
| | **Total** | **4468** | **1377** | **140** | **1530** | **241** | **1090** | **201** | **803** | **943** | **2007** | **318** | **517** | **3019** | **132** |
| | **Grand Total** | | | | | | | | | | | | | | **16786** |

**F&B** – Food and Beverages **Handi.**– Handicrafts **Elect.** – Electronics **Chem.** – Chemical based **Cement** – Cement based **Wood** – Wood based
**Coco.**- Coconut based **K&P** – Kithul and Palmyrah **T&A** – Textile and Apparel **Garm.** – Garments **S&L** – Shoe and Leather **Paper** – Paper based
**Serv.** – Services **Misce.** - Miscellaneous

அட்டவணை 3.7 இல் காட்டப்பட்டுள்ளவாறு வாழ்வாதார தொழிலாளர்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபை, விததா வள நிலையம், தேசிய நிறுவக மேம்பாட்டு முகவர், தேசிய கைவினை சபை, தேசிய வடிவமைப்பு மையம், சிறு தொழில் மேம்பாட்டு பிரிவு, கைத்தொழிற்துறை தொழில்நுட்பவியல் நிறுவனம், ஆர்தர் சி கிளார்க் மையம், ஆடை திணைக்களம், பனை அபிவிருத்தி சபை, இலங்கை ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தி நிறுவனம், தேசிய பொறியியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன பல்வேறு பயிற்சியளிக்கும் வேலைத்திட்டங்களில் ஈடுபட்டிருந்தன. TVEC ஆனது வாழ்வாதார தொழிலாளர்களுக்கு பயிற்சி திட்டங்களை வழங்க திட்டமிடுமாயின், அவர்கள் இந் நிறுவனங்களின் ஊடாக இதனை மேற்கொள்ளவேண்டும் ஏனெனில் இவற்றில் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்கள் காணப்படுவதோடு அவர்கள் விசேட பயிற்சி திட்டங்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதை நன்கு அறிந்துள்ளார்கள்.

**அட்டவணை 3.7: பயிற்சி வழங்குநர்களின் அடிப்படையில் இலங்கையிலுள்ள வாழ்வாதார தொழிலாளர்களிற்கு திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்**

**Divi-Neguma National Program on Cottage Industry**

***Progress of District Technology Transfer and Training Programs (Institution wise)***

| # | District | Number of Beneficiaries Trained | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | IDB | VIDATHA | NEDA | NCC | SEDD | NDC | ITI | NERD | PDB | SLITA | Textile | ACCC | CDA | Total |
| 1 | Colombo | 117 | 86 | 52 | 47 | 142 | 4 | 31 | 115 | - | - | 2 | 8 | - | 604 |
| 2 | Anuradhapura | 241 | 95 | 9 | 119 | 28 | 21 | 29 | 24 | 12 | - | 8 | 9 | - | 595 |
| 3 | Jaffna | 239 | 46 | 19 | 201 | 252 | 77 | 57 | 1 | 123 | 92 | - | - | 10 | 1117 |
| 4 | Kegalle | 652 | 217 | 125 | 111 | 157 | 15 | 26 | 22 | - | 61 | - | 4 | 12 | 1402 |
| 5 | Gampaha | 424 | 145 | 22 | 156 | 211 | 30 | 46 | 59 | - | 46 | 32 | 18 | - | 1189 |
| 6 | Moneragala | 136 | 54 | 5 | 55 | 87 | 12 | 22 | 12 | - | - | 1 | 6 | - | 390 |
| 7 | Puttlam | 149 | 15 | 16 | 45 | 29 | 01 | 14 | 15 | 46 | - | 7 | 15 | - | 352 |
| 8 | Mannar | 176 | 42 | 99 | 50 | 187 | 91 | 95 | 16 | 30 | 263 | - | - | - | 1049 |
| 9 | Kandy | 133 | 226 | 88 | 131 | 30 | 18 | 13 | 19 | - | - | 3 | 5 | - | 666 |
| 10 | Ratnapura | 316 | 147 | 183 | 73 | 74 | 38 | 10 | 13 | - | - | 5 | 15 | - | 874 |
| 11 | Polonnaruwa | - | 94 | 212 | 95 | 86 | 75 | 17 | 67 | - | - | 11 | 19 | - | 676 |
| 12 | Hambanthota | 185 | 196 | 357 | 494 | 72 | 57 | 117 | 19 | 35 | - | 18 | 11 | - | 1561 |
| 13 | Badulla | 369 | 77 | 101 | 53 | 91 | 70 | 15 | 16 | - | - | 15 | - | 36 | 843 |
| 14 | Matale | 100 | 137 | 115 | 80 | 44 | 35 | 18 | 14 | - | - | 4 | 7 | 18 | 572 |
| 15 | Killinochchi | 89 | - | - | 51 | - | - | - | 59 | 83 | - | 20 | - | - | 302 |
| 16 | Galle | - | 96 | 384 | 193 | 155 | 202 | 67 | 22 | - | 16 | 11 | - | 41 | 1187 |
| 17 | Mullaithivu | 177 | - | 75 | 24 | - | - | 37 | 15 | 48 | - | 6 | - | - | 382 |
| 18 | Vavuniya | - | 9 | - | 35 | 67 | - | 8 | 20 | 63 | - | 7 | - | - | 209 |
| 19 | Batticaloa | - | 136 | 214 | 40 | - | 23 | 42 | 7 | 240 | - | - | - | 6 | 708 |
| 20 | Nuwara-Eliya | - | 31 | 106 | - | 122 | - | - | 12 | - | - | 8 | - | - | 279 |
| 21 | Trincomalee | - | 27 | - | - | - | - | - | 132 | 37 | - | 14 | - | - | 210 |
| 22 | Kalutara | - | 238 | - | - | - | 38 | - | 15 | - | 117 | 10 | - | - | 418 |
| 23 | Kurunegala | - | 48 | 262 | - | 89 | - | 60 | 35 | - | - | 11 | - | - | 505 |
| 24 | Matara | - | 184 | 315 | - | 64 | 58 | - | 20 | - | - | 20 | - | 35 | 696 |
| | **Total** | **3503** | **2346** | **2759** | **2053** | **1987** | **865** | **724** | **749** | **717** | **595** | **213** | **117** | **158** | **16786** |

**IDB –** Industrial Development Board
**NEDA-** National Enterprise Development Authority
**NCC-** National Crafts Council
**NDC-** National Design Centre
**SEDD** -Small Enterprises Development Division
**ITI-** Industrial Technology Institute
**ACCC-** Arthur C. Clerk Centre
**Textile** – Textile Department
**PDB-** Palmyrah Development Board
**SLITA**-Sri Lanka Institute of Textile Apparel
**NERD-** National Engineering and Research Development Centre
**CDA** - Coconut Development Authority
**VIDATHA –** VIDATHA Research Centre

**அளிக்கப்பட்ட பயிற்சிகள்**

விடய ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ள ஒவ்வொரு தொழிற் பிரிவினரினதும் வாழ்வாதார தொழில்களிற்கு அவசியமான மேலதிக பயிற்சி தேவைகள் அட்டவணை 3.8 இல் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. விடய ஆய்வுகளின் போது நேர்காணப்பட்ட ஏறத்தாழ இரு மாவட்டங்களையும் சேர்ந்த அனைத்து வாழ்வாதார தொழிலாளர்களும் தமக்குரிய விடயங்களில் விசேட திறன் அடிப்படையிலான பயிற்சிகள் தேவைப்படுகின்றன என தெரிவிதுள்ளனர். இது பல்வேறுபட்ட அரச நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பயிற்சிகளை பெற்றுக்கொண்டுள்ள ஏறத்தாழ அனைத்து வாழ்வாதார தொழிலாளர்களும் விசேட திறன்கள் அடிப்படையிலான பயிற்சிகள் தேவைப்படுகின்றன என நம்புவதை தெரியப்படுத்துகின்றது.

**அட்டவணை 3.8: வடமத்திய மாகாணத்திலுள்ள இரு மாவட்டங்களிலும் உள்ள நபர்களிற்கு தேவைப்படுகின்ற பயிற்சிகள்**

| தொழில் வகை | எதிர்பார்க்கின்ற பயிற்சி விடயங்கள்/ திறன்கள் |
|---|---|
| உணவு மற்றும் பானம் | உணவு மற்றும் குடிபானங்கள் பதப்படுத்தல், பொதியிடல், பாதுகாத்தல், பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய முறைமைகள் |
| கைவினை | கலை மற்றும் சித்திர பயிற்சிகள், வடிவமைத்தல் மற்றும் |

| தொழில் வகை | எதிர்பார்க்கின்ற பயிற்சி விடயங்கள்/ திறன்கள் |
|---|---|
| | தொழில்நுட்பம், புதிய உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல், சந்தைப்படுத்தல் |
| இலத்திரனியல் | பராமரித்தல், பழுதுபார்த்தல் |
| இரசாயனங்கள் சார்ந்த | பதனிடல், உற்பத்தி பொருளின் அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் |
| சீமேந்து தொடர்பான | கலவை, அச்சிடல், வடிவமைத்தல், உற்பத்தி பொருளின் அபிவிருத்தி, வியாபார அபிவிருத்தி |
| மரம் சம்பந்தப்பட்ட | தொழில்முறை முகாமைத்துவ அபிவிருத்தி, மரங்கள் பதனிடல் மற்றும் வடவமைத்தல் தொழில்நுட்பம், தளபாட வடிவமைப்புகளை மேற்கொள்ளல் |
| தெங்கு சார்ந்த | - |
| கித்துல் மற்றும் பனை | கருப்பட்டி மற்றும் கருப்பனி தயாரிப்பு, பொதியிடல், பாதுகாத்தல், ஆரோக்கிய முறைமைகளை கருத்திற் கொள்ளல் |
| ஜவுளி | வடிவமைப்பு, தையல், உற்பத்தி அபிவிருத்தி |
| ஆடை தயாரிப்பு | இயந்திரத்தினை இயக்குதல், வடிவமைத்தல், அளவீடு மற்றும் வெட்டுதல், தரக்கட்டுப்பாடு |
| காலணி மற்றும் தோற் பொருட்கள் | உற்பத்திபொருள் வடிவமைப்பு |
| காகிதம் சார்ந்த | பொருட்களை தயாரித்தல் |
| சேவைகள் | ஒவ்வொரு வகையான சேவைகளிற்காகவும் வடிவமைக்கப்பட்ட பயிற்சிகள் |
| சிறு அளவிலான விவசாய உற்பத்திகள் | நீடித்து நிலைக்கக்கூடிய பண்ணை முறைமைகள்/ நடவடிக்கைகள், சேதனப் பசளை தயாரிப்பு, சிறியளவிலான விவசாயிகளிற்கான அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம்<br>கழிவு முகாமைத்துவம், நோய்கள்/ ஒட்டுண்ணிகள் தடை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் |
| உள்நாட்டு மீன்பிடி | மீன்பிடி தொழில்நுட்பம், மீன்களை களஞ்சியப்படுத்தல், மீன்களை சுத்தப்படுத்தல் மற்றும் பதனிடல், உபகரணங்கள் பராமரிப்பு |
| கால்நடை மற்றும் கோழி | பண்ணை முறைமைகள், உணவு மற்றும் உணவூட்டல் தந்திரோபாயங்கள், நோய்கள்/ ஒட்டுண்ணிகள் தடை |

| தொழில் வகை | எதிர்பார்க்கின்ற பயிற்சி விடயங்கள்/ திறன்கள் |
|---|---|
| | செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல், நாளாந்த மற்றும் விசேட தினசரி நடவடிக்கைகள் |
| தோட்டம் | பழப்பயிர்ச்செய்கைத் தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் நில முகாமைத்துவம், மர வளர்ப்பு தொழில்நுட்பம், பூமரச்செய்கை தொழில்நுட்பம்<br>நில வடிவமைப்பு, நாற்று மேடை பராமரிப்பு, பூங்காக்கள்/ தோட்டங்களை பராமரித்தல் |

ஆதராம்: விடய ஆய்வு

எம்மால் அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்ட விடய ஆய்வு நேர்கணல்களினூடான அவதானிக்கப்பட்டுள்ள விடயம் யாதெனில் குறிப்பிட்ட காரணங்களினால் வாழ்வாதார தொழிலாளர்களிற்கான பயிற்சிகளை திட்டமிடுதலில் குறித்த சவால்கள் மற்றும் நெருக்கடிகளை தீர்க்க வேண்டியுள்ளது. பல்வேறுபட்ட சமூக பொருளாதார பின்னணிகள் மற்றும் கல்வி மட்டங்களிலுள்ள நபர்கள் வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு பல்வகைப்பட்ட பயிற்சிகள் தேவைப்படுவதாக தோன்றுகின்றன. சில பொதுவான பயிற்சிகள் தேவைப்படுகின்ற போதிலும் பல்வேறு வாழ்வாதார தொழில்களுக்கு அவற்றுக்குரிய விசேட பயிற்சி வழங்கல்களும் தேவைப்படுகிறன. பயிற்சி வழங்கலின் போது பின்வரும் சிக்கல்களையும் சவால்களையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

a. பல்வேறுபட்ட அரச நிறுவகங்களினால் வாழ்வாதார தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களில் பெரும்பாலானவை அடிப்படையாக விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் அறிவு பரம்பல் போன்ற வகைகளை சார்ந்தவையாக காணப்படுவதுடன் அவை திறன்களை வழங்குகின்றனவாக காணப்படவில்லை என்பதுடன் விடய ஆய்வுகளின் போது நேர்காணப்பட்ட வாழ்வாதார தொழிலாளர்களின் கருத்துக்களின் படி அவர்களுக்கு வாழ்வாதார தொழில்களை மேற்கொள்ளல் மற்றும் மேம்படுத்துதல் என்பவற்றின் பொருட்டு விசேட தொழில்சார்/ உற்பத்தி/ சேவை என்பவ்றுடன் தொடர்புடைய தனித்துவமான நவீன திறன்கள் தேவையாக உள்ளன. இதன் மூலம் பயிற்சி திட்டங்களில் விரிவுரைகள் மற்றும் உரைகளிலும் பார்க்க கூடியளவிலான செய்முறை திறன்களை உள்ளடக்கப்படல் வேண்டும் எனபது சுட்டிக்காட்டப்படுகின்றது.

b. இதன் மூலம் வாழ்வாதார தொழிலாளர்களுக்கு சந்தைக்கான போக்குவரத்து, தயாரிப்பு ஊக்குவிப்பு, சாதகமான வரி வரையறைகள் மற்றும் வசதியான ஒழுங்கமைப்பு கட்டமைப்புகள் என்பவற்றினை பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்தின் உதவியானது தேவைப்படுகின்றது என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

c. பயிலுநர்களின் சமூக-பொருளாதார சூழலானது தெளிவாக விளங்கிக்கொள்ளப்பட்டு தேவைக்கேற்றவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதனால் பயிற்சி வழங்கலின் அளவினை அடையாளம் காண்பதற்கு ஓர் கண்டறியும் அல்லது பகுப்பாய்வு கருவியானது தேவைப்படுகிறது. இடங்களின் மத்தியில் உள்ள மக்கள்/ குடும்பங்கள் பாதைகளையும் மற்றும் தடைகளையும் அடையாளம் காணுகின்றனர். பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒருங்கிணைந்த துறை சார்ந்தவையாகவும் மற்றும் பரந்த அபிவிருத்தி முயற்சிகளுடன் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

d. தொழில்களின் பல்வகைத்தன்மையானது நிலைநாட்டப்படல் வேண்டும். பயிற்சிகாக ஓர் எளிய திறன்கள் "பற்றாக்குறை" அணுகுமுறையானது பயனுள்ளதாக அமையாது. ஒருவர் இம் மக்கள் அறிந்திருக்கும் திறன்களில் இருந்து ஆரம்பித்தல் வேண்டும், அத்தோடு மேலதிக திறன்களை அதனுடன் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். கிராமப்புற 'தொழில்கள்' பெரும்பாலும் பல வாழ்வாதார கூறுகளை கொண்டுள்ளன என்பதை பயிற்சி வேலைத்திட்டங்கள் அறிந்திருத்தல் வேண்டும். நிலையான கிராமப்புற வாழ்வாதாரங்கள் பெரும்பாலும் ஓர் உள்நாட்டு மற்றும் நவீன திறன்களின் கலவையாகும்.

e. பெரும்பாலான பயிலுநர்கள், மிக குறுகிய கால பயிற்சியினையே அதாவது பெரும்பாலும் ஒரு நாள் பயிற்சியினையே விரும்புகின்றனர். இது போதுமான திறன்களின் பரிமாற்றத்தினை ஏற்படுத்துவதும் நிமித்தம் வினைத்திறனாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் விளங்கக்கூடிய ஓர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை நடைமுறைப்படுத்துவதற்கு ஓர் கடுமையான தடங்கலாக காணப்படலாம். பயிற்சித் திட்டங்களின் திட்டமிடலின் போது இது கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

**சாரம்சம் மற்றும் பரிந்துரைகள்**

எமது கள அவதானிப்புகளின் அடிப்படையில், அவதானத்தின் பொருட்டு பின்வரும் விசேட பரிந்துரைகள் உருவாக்கப்பட்டுள்ளன:

a. பயிலுநர்களின் கருத்துக்களின் பிரகாரம் தற்போதுள்ள பயிற்சி திட்டங்கள் பெரும்பாலும் விழிப்புணர்வு மட்ட பயிற்சி திட்டங்களாகும். அத்துடன் அவற்றிற்கு திறன் அபிவிருத்தி பயிற்சி திட்டங்களே தேவைப்படுகின்றன.

b. பல்வேறு தொழிற்துறை வகைகளின் தேவைகளுக்கேற்ப பயிற்சித் திட்டங்கள் மாற்றியமைக்கப்படல் வேண்டும்

c. நடப்பு பயிற்சி திட்டங்கள் மிகவும் பொதுவான இயல்புடையதாக காணப்படுவதனால் அவற்றிற்கு நிபுணத்துவ வல்லுநர்களால் மேற்கொள்ளப்படுகின்ற முறையான பயிற்சி திட்டங்களே தேவைப்படுகின்றன. இதற்காக பல்துறைசார் வல்லுநர்கள் தேவைப்படுகின்றனர்.

d. வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு வாழ்நாள் முழுவதும் செய்முறை பிரயோகங்களுடன் கற்கக்கூடிய முறைமை ஒன்றினை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டும்

e. பெரும்பாலான பயிலுநர்கள் தங்களது வியாபார இடங்களிலேயே கள அடிப்படையிலான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை நடாத்துவதற்கு விரும்புகின்றனர்.

f. பயிற்சி திட்டங்களில் செய்முறை பயிற்சி அளித்தலில் கூடுதல் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

g. தொழில்முறை வகைப்படுத்தல் மற்றும் தரநிலைப்படுத்தல் முறைமையானது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்ததாக காணப்படல் வேண்டும்.

h. திறன்கள் சார்ந்த/ தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்

i. **அனேகமான பயிலுநர்கள்** தற்போதைய பயிற்சி மற்றும் தொடர்ச்சியான அடிப்படையில் நீண்ட காலத்தினை செலவழிக்க விரும்பாததால் பயிற்சி என்பவற்றினை விரும்பாமையினால் பரந்த காலப்குதிக்குரிய பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்படல் வேண்டும்.

## அத்தியாயம் 04

# கைத்தொழிற்துறையின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற மனிதவள தேவைகள்

### 4.1. கைத்தொழிற்துறையின் போக்கு தொடர்பான கண்ணோட்டம்

வடமத்திய மாகாண்தில் நெற்செய்கையானது கூடுதலாக ஆதிக்கம் செலுத்துவதுடன் அதற்கு அடுத்த படியாக வாழ்வாதார தொழில்கள் காணப்படுகின்றன. பண்ணை அல்லாத பொருளாதார செயற்பாடுகள் அரிதான நிலையிலிருந்து மாபெரும் அளவு வரையில் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், இப் பிரதேசமானது பாரம்பரிய விழுமியங்கள் அடிப்படையிலான சுற்றுலாவிற்கான புகழ்பெற்ற இடமாக விளங்குவதனால் குறிப்பிடத்தக்களவு தங்குமிட வசதிகள் காணப்படுகின்றமையினை அடையாளங்காணமுடியும். மேலும், சேவை துறையில் கட்டுமானம், சில்லறை மற்றும் மொத்த வியாபாரம், வங்கி மற்றும் நிதி, சுகாதாரம் மற்றும் வாகன பராமரிப்பு போன்றவை செல்வாக்கு செலுத்துகின்றன. உற்பத்தி துறையானது பெரும்பாலும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவகங்கள் வரையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மாகாணத்திலுள்ள பிரதான கைத்தொழிற்துறையினை அடையாளம் காண்பதற்காக நாம் பொருளாதார செயற்பாடுகளின் கூறுகள் மற்றும் தற்போதைய வளர்ச்சி போக்குகள் என்பவற்றினை அவதானித்தோம்.

மொத்த நில பரப்பளவினை கருத்திற்கொள்ளும் போது வடமத்திய மாகாணமானது இலங்கையிலுள்ள மிகப் பெரிய மாகாணமாகும். வடமத்திய மாகாண பொருளாதாரத்தின் துறைசார் கூறுகள் பற்றிய விளக்கங்கள் TVET நிறுவகங்களில் பயிற்சிகளை பெற்றுள்ள நபர்களுக்கு குறிப்பிடத்தக்களவு கேள்விகள் நிலவியுள்ள பிரதான துறைகளை விளங்கிக்கொள்வதற்கு உதவுகின்றது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாகாணங்களினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகளின் அடிப்படையில் வடமத்திய மாகாணமானது ஏனைய அனைத்து மாகாணங்களுடன் ஒப்பிடும் போது பலவீனமான பொருளாதாரத்தினை கொண்டுள்ள மாகாணங்களில் ஒன்றாக விளங்குகின்றது ஏனெனில் 2014 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியிற்கு மேல்மாகாணமானது 42% பங்களிப்பினையும் வடமத்திய மாகாணமானது 5.1% பங்களிப்பினையும் மேற்கொண்டுள்ளது. தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஊவா மற்றும் வட மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களின் பங்களிப்பானது வடமத்திய மாகாணத்திலும் பார்க்க கூடுதலாக காணப்படுகின்றது (அட்டவணை 4.1). வடமத்திய மாகாணத்தின் பலவீனமான பொருளாதாரமானது நாட்டிலுள்ள ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்த தொழிலாளர்களை உள்ளீர்க்கக்கூடிய ஆற்றலை

கொண்டுள்ளமையினை எடுத்துக்காட்டுகின்றது. வடமத்திய மாகாணத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால வேலைவாய்ப்பு நிலவரங்கள் மாகாணத்தின் ஒப்பீட்டளவிலான பொருளாதார நிலைத்திருப்பில் தங்கியுள்ளது.

வடமத்திய மாகாணத்தின் துறைசார் பொருளாதார கட்டமைப்பிற்கு இணங்க மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியிற்கு விவசாய துறையானது 13.8% இனை பங்களிப்பினை மேற்கொண்டுள்ளதுடன் கைத்தொழில் மற்றும் சேவை துறைகள் முறையே 21.3% மற்றும் 64.8% பங்களிப்புகளை மேற்கொண்டுள்ளன (அட்டவணை 4.2). மாகாணத்தின் தொழில்வாய்ப்பு சாத்தியக்கூறுகளை விளங்கிக்கொள்வதற்கான எந்தவொரு முயற்சியும் இவ் விடயங்களை கருத்திற்கொள்ளல் வேண்டும். இத் தரவுகள் சேவை துறையானது தொழிலாளர்களை உள்வாங்குவதற்கான அதிகூடிய சாத்தியக்கூறுகளை கொண்டிருப்பதையும் அதற்கு அடுத்த சாத்தியகூறுகளை கைத்தொழிற்றையானது கொண்டுள்ளதையும் எடுத்துக்காட்டுகின்றது. வடமத்திய மாகாணத்தின் துறைசார் தொழிலாளர் உள்வாங்கல் பலமானது முக்கியமான ஓர் விடயமாகும்.

**அட்டவணை 4.1. 2014 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாகாணங்களின் பங்கு**

| மாகாணம் | இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதம் (%) |
|---|---|
| மேல் | 42.0 |
| தென் | 10.8 |
| வடமேல் | 10.7 |
| மத்திய | 10.4 |
| சப்பிரகமுவ | 6.7 |
| கிழக்கு | 5.8 |
| வடமத்திய | 5.1 |
| ஊவா | 5.0 |
| Northern வடக்கு | 3.6 |

ஆதாரம்: www.cbsl.gov.lk, 2015

**அட்டவணை 4.2. 2014 ஆம் ஆண்டில் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைகளின் பங்கு**

| துறை | மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதம் (%) |
|---|---|
| விவசாயம் | 13.8 |
| கைத்தொழில் | 21.3 |

| | |
|---|---|
| சேவைகள் | 64.8 |

ஆதாரம்: www.cbsl.gov.lk, 2015

முதலாவதாக, வடமத்திய மாகாணத்தின் விவசாய துறையானது TVET நிறுவகங்களிலிருந்து பயிற்சி பெற்ற திறன்மிக்க தொழிலாளர்களை கவரக்கூடிய கட்டமைக்கப்படவில்லை அல்லது உருவாக்கப்படவில்லை ஏனெனில், வடமத்திய மாகாணத்தின் விவசாய துறையில் NVQ பயிற்சி பெற்ற நபர்களுக்கு கேள்வியானது காணப்படவில்லை. வடமத்திய மாகணத்திலுள்ள சனத்தொகையில் பெரும்பாலானவர்கள் தமது பிரதான வருமான மூலமாக விவசாயத்தினையே நம்பியுள்ளனர். நெல் பயிரானது விவசாயிகளிடையே மிகவும் பிரபல்யமாக காணப்படுவதுடன் ஏனைய பயிர்களான சோளம், குரக்கன், சோயா அவரை, கத்தரி, மிளகு, வாழை, பூசணி, ஏனையவை என்பன பயிரிடப்படுகின்றன. உற்பத்தி செயன்முறையின் பொருட்டு எளிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன (அட்டவணை 4.3). இச் செயற்பாடுகள் பொதுவாக வாழ்வாதார செயற்பாடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.3. 2011 - 2012 இல் வடமத்திய மாகாண விவசாய துறையில் கைத்தொழிற்துறை மூலமான மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி (மில்லியன்களில்)**

| உப துறை | 2011 | 2012 |
|---|---|---|
| தேயிலை | - | - |
| இறப்பர் | - | - |
| தெங்கு | 3435 | 4392 |
| சிறு ஏற்றுமதி பயிர்கள் | 4 | 5 |
| நெல் | 25167 | 27547 |
| கால்நடை | 5621 | 6067 |
| ஏனைய உணவு பயிர்கள் | 22258 | 24025 |
| பெருந்தோட்ட பயிர்கள் | 220 | 354 |
| விறகு மற்றும் வனவளம் | 5261 | 7086 |
| ஏனைய விவசாய பயிர்கள் | 2128 | 2120 |
| மீன்பிடி | 3775 | 4212 |
| மொத்த விவசாய துறை | 70248 | 73428 |

ஆதாரம்: www.cbsl.gov.lk, 2014

இரண்டாவதாக, வடமத்திய மாகாணத்திலுள்ள கைத்தொழிற்துறையில் கூடுதலாக மிகச் சிறிய மற்றும் சிறிய நிறுவகங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன. ஒட்டுமொத்த

வடமத்திய மாகாணத்தில் ஏறத்தாழ 45 நடுத்தர மற்றும் பெரிய நிறுவகங்கள் காணப்படுகின்றன. இது நாட்டிலுள்ள மொத்த கைத்தொழிற்துறை நிறுவகங்களில் 1.7% மட்டுமே ஆகும் (அட்டவணை 4.5). வடமத்திய மாகாணத்தில் அண்மைக் காலங்களில் உற்பத்தி மற்றும் கட்டுமான கைத்தொழிற்துறைகள் வலுவான முறையில் வளர்ச்சியடைந்து வருவதை தெளிவாக அவதானிக்க முடிகின்றது(அட்டவணை 4.5). இத் துறைகள் திறன்மிக்க தொழிலாளர்களை உள்ளீர்க்கக்கூடிய சாத்தியகூறுகள் மிக்கவையாக உள்ளன. வடமத்திய மாகாணத்தின் கைத்தொழிற்துறையானது மிகவும் பலவீனமாக காணப்படுவதானது இத் துறைகளில் திறன்மிக்க தொழிலாளர்களை உள்ளீர்க்கக்கூடிய ஆற்றல்கள் குறிப்பாக புதிய தொழில்வாய்ப்புகள் மிகக் குறைந்த அளவில் காணப்படும். மேலும், குடிசைக் கைத்தொழிலில் மின், எரிவாயு, நீர் மற்றும் கட்டுமானக் கைத்தொழில் என்பன பிரதானமான துறைகளாக காணப்படுகின்றன. அதேநேரம் கட்டுமான கைத்தொழிற்துறையானது NVQ பயிற்சி பெற்றவர்களை அதிகளவில் கவரக்கூடியதாக காணப்படுவதுடன், குடிசைக் கைத்தொழிலானது பெருமளவில் முறைசாரா தொழிலாளர்களிலேயே தங்கியுள்ளது (அட்டவணை 4.6). மின், எரிவாயு மற்றும் நீர் ஆகிய துறைகள் தேசிய ரீதியிலான உள்வாங்கல்களை கொண்டிருப்பதன் காரணமாக அத்துறைகளில் உள்ள நிறுவகங்களில் மாகாண ரீதியில் காணப்படும் பெரும்பாலான வேலையற்றவர்கள் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு எந்த ஒரு உத்தரவாதமும் காணப்படவில்லை.

**அட்டவணை 4.4. மாகாண ரீதியிலான கைத்தொழிற்துறை நிறுவக பரம்பல் (2012)**

| மாகாணம் | நடுத்தர மற்றும் பெரிய அளவிலான கைத்தொழிற்துறை நிறுவகங்களின் எண்ணிக்கை | மொத்த சதவீதம் (%) |
|---|---|---|
| மேல் மாகாணம் | 1405 | 54.2 |
| தென் மாகாணம் | 304 | 11.7 |
| மத்திய மாகாணம் | 269 | 10.4 |
| சப்பிரகமுவ மாகாணம் | 266 | 10.3 |
| வடமேற்கு மாகாணம் | 208 | 8.0 |
| ஊவா மாகாணம் | 68 | 2.6 |
| வடமத்திய மாகாணம் | 45 | 1.7 |
| வட மாகாணம் | 18 | 0.7 |
| கிழக்கு மாகாணம் | 11 | 0.4 |
| **மொத்தம்** | **2593** | **100** |

மூலம் : மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், 2013, கைத்தொழிற்துறைகளிற்கான வருடாந்த ஆய்வு

**அட்டவணை 4.5. 2011 - 2012 இல் வடமத்திய மாகாண கைத்தொழிற்துறையில் கைத்தொழிற்துறை மூலமான மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி (மில்லியன்களில்)**

| உப - துறைகள் | 2011 | 2012 |
|---|---|---|
| அகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | 15074 | 9370 |
| உற்பத்தி துறை | 32399 | 37841 |
| - செயன்முறை | 395 | 638 |
| - தொழிற்சாலை கைத்தொழில் | 2581 | 3548 |
| - குடிசைக் கைத்தொழில் | 6191 | 6655 |
| மின், எரிவாயு மற்றும் நீர் | 3754 | 6651 |
| கட்டுமானம் | 22786 | 34236 |
| **கைத்தொழிற்துறையின் மொத்தம்** | **74013** | **88058** |

ஆதாரம்: www.cbsl.gov.lk, 2014

மூன்றாவதாக, சேவைத்துறையில் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா துறை, போக்குவரத்து மற்றும் தொடர்பாடல், வங்கியியல், காப்புறுதி மற்றும் நில விற்பனை ஆகிய துறைகள் வடமத்திய மாகாணத்தில் குறிப்பிடத்தக்களவான வளர்ச்சியினை காட்டுகின்றன (அட்டவணை 4.6). வடமத்திய மாகாணத்திலுள்ள சேவைகள் துறைகளாவன: வியாபாரம், வாகன சேவிஸ், போக்குவரத்து சேவைகள், சுகாதார பராமரிப்பு சேவைகள், தனிப்பட்ட சுத்திகரிப்பு சேவைகள் என்பனவாகும். சில துறைகளில், தொழில்வாய்ப்புகளுக்கான ஆட்சேர்ப்புகள் மாகாணத்தினுள் மேற்கொள்ள அவசியமற்றதாக உள்ளன அதாவது வங்கியியல், காப்புறுதி மற்றும் நில விற்பனை போன்ற துறைகளிற்கு அனேகமான நிறுவகங்கள் தேசிய அளவில் நியமனங்களை மேற்கொள்கின்றன. ஆகவே, இங்குள்ள நிறுவகங்கள் இம் மாகாணத்தினை சேர்ந்த நபர்களுக்கு தொழில்வாய்ப்புகளை அளிக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை.

**அட்டவணை 4.6. 2011 - 2012 இல் வடமத்திய மாகாண சேவை துறையில் கைத்தொழிற்துறை மூலமான மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி (மில்லியன்களில்)**

| உப துறை | 2011 | 2012 |
|---|---|---|
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 53230 | 58638 |
| ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் | 1618 | 2056 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்கள் | 46683 | 54945 |
| வங்கியியல், காப்புறுதி மற்றும் காணி விற்பனை | 22510 | 32174 |
| வாழ்விடங்களின் உரித்து | 7774 | 8954 |
| அரச சேவைகள் | 22469 | 27109 |
| தனியார் சேவைகள் | 7432 | 8832 |
| **சேவை துறைசார் மொத்தம்** | **161,714** | **192,707** |

ஆதாரம்: www.cbsl.gov.lk, 2014

இலங்கையில் வடமத்திய மாகாணத்திலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் பொருட்டு கூடிய சதவீதமான நபர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருவது அறிக்கையிடப்பட்டுள்ளது. உதாரணமாக, 2013 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து 293,105 எண்ணிக்கையான நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்காக சென்றுள்ள அதேவேளை வடமத்திய மாகாணத்திலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்காக புறப்பட்டு சென்றுள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை 14,264 ஆகும் (அட்டவணை 4.7). இது இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாயப்புகளிற்காக சென்றுள்ள நபர்களின் எண்ணிக்கையில் 4.9% ஆகும். வடமத்திய மாகாணத்தில் இம் மொத்த எண்ணிக்கையான நபர்களில் ஏறத்தாழ அரைவாசி பேர் இவ்வாண்டிலேயே தொழிலாளர் சந்தைகளினுள் நுழைந்துள்ளனர் என்பதனை குறிப்பிடமுடியும். மாகாணத்தில் குறைந்தளவான வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் காணப்படுதல் மற்றும் காணப்படுகின்ற வேலைவாய்ப்புகளில் ஈடுபடுவதற்கு குறைவான விருப்பத்தினை கொண்டிருத்தல் ஆகிய நிலைமைகள் பெரும் எண்ணிக்கையான நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்காக செல்கின்றமையானது எடுத்துக்காட்டுகின்றது. தற்போதைய மற்றும் உருவாகிவரும் தொழில்வாய்ப்புகளின் வெளிப்படையான முறையற்ற தன்மை, நிச்சயமற்ற தன்மை மற்றும் தற்காலிக நிலைமை போன்றன அனேகமான தொழில் தேடுநர்களை நாட்டின் மேல்மாகாணத்திற்கு அல்லது வேறு நாடுகளிற்கு குடிபெயர்வதற்கு நிர்ப்பந்திக்கின்றது. இத் தரவுகள் வடமத்திய மாகாணத்திலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்காக தொழிலாளர் சந்தைகளினுள் புதிதாக தொழிலாளர்கள் நுழைவது மட்டுமன்றி தற்போது வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் கூட வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்கு செல்வதையும் எடுத்துக்காட்டுகின்றது.

**அட்டவணை 4.7: 2013 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்காக வெளியேறிய நபர்களின் எண்ணிக்கை**

| வகை | வடமத்திய மாகாணம் | இலங்கையில் மொத்தம் |
|---|---|---|
| ஆண் | 5,609 | 175,047 |
| பெண் | 8,655 | 118,058 |
| **மொத்தம்** | **14,264** | **293,105** |

ஆதாரம்: www.cbsl.gov.lk, 2014

மேற்கூறப்பட்டுள்ள கலந்துரையாடலிற்கு இணங்க, இவ் ஆய்வானது உற்பத்தி மற்றும் கட்டுமான துறை, விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா துறை மற்றும் ஏனைய சேவை துறைகள் (வர்த்தகம், வாகன சேவிஸ், சுகாதார பராமரிப்பு சேவைகள் மற்றும் தனிப்பட்ட சுத்திகரிப்பு சேவைகள்) என்பவற்றினை முன்னணி துறைகளாக அடையாளம் கண்டுள்ளதுடன் இவற்றில் தற்போது தொழில்புரியும் தொழிலாளர்களுக்கு மேலதிகமாக TVET நிறுவகங்களில் பயிற்சி பெற்ற நபர்களை புதிய தொழிலாளர்களாக உள்வாங்குவதற்கான சாத்தியமான நிலைமைகளும் காணப்படுகின்றன. ஒவ்வொரு தொழில் சார்ந்த தற்போதைய மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கான தேவையினை TVEC ஆனது வலியுறுத்துகின்றமையின் காரணமாகவும், இது TVET நிறுகங்கள் தங்களது பயிற்சி திட்டங்களை திட்டமிடுவதற்கு உதவிபுரிவதனாலும் துறைசார் எதிர்வுகூறலினை மேற்கொள்வதிலும் பார்க்க அவை வெவ்வேறு தொழில்களாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

**எண்ணிக்கை மற்றும் மாதிரிகள்**

வடமத்திய மாகணத்திலுள்ள இரு மாவட்டங்களையும் சேர்ந்த தனியார் மற்றும் முறைசாரா துறை வியாபார நிறுவகங்களின் மொத்த எண்ணிக்கையானது இக் கணக்கெடுப்பில் இலக்கிடப்பட்ட எண்ணிக்கையாகும். வடமத்திய மாகாணத்திலுள்ள மொத்த வியாபார ஸ்தாபனங்களின் எண்ணிக்கையினை கணக்கிடும் பொருட்டு வடமத்திய மாகாணத்தின் ஊழியர் நம்பிக்கை நிதியச்சபையின் பிராந்திய அலுவலகங்களின் தரவுதளங்கள் எம்மால் பயன்படுத்தப்பட்டன. ஊழியர்களை தொழில்களுக்கு அமர்த்தும் அனைத்து நிறுவகங்களும் அனேகமான ஊழியர்களுக்கான ஊழியர் நம்பிக்கை நிதியினை செலுத்துவதுடன் தனியார் துறையானது அனைத்து ஊழியர்களிற்கும் இதனை செலுத்துகின்றது. ஆகவே, நிரந்தரமாக, தற்காலிகமாக அல்லது அமைய அடிப்படையில் தொழில்களுக்கு அமர்த்தும் தனியார் துறை நிறுவகங்களின் மொத்த எண்ணிக்கை பற்றிய தகவல்கள் ஊழியர் நம்பிக்கை நிதியத்திடம் காணப்படுவதுடன், சட்டத்தின் பிரகாரம் தொழிலுக்கு அமர்த்தப்படும் ஊழியர் ஒருவருக்கு நிறுவகத்தினால் செலுத்தப்படவேண்டிய ETF இன் பங்கினை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு நிறுவகமானது செலுத்துதல்

வேண்டும். எந்தவொரு நிறுவகமும் தொழில்களுக்கு அமர்த்தியுள்ள தொழிலாளர்களிற்கு ETF இனை செலுத்த தவறுமாயின் அது சட்டவிரோதமாகும். ஆகவே, தொழிலாளர்களை தொழில்களுக்கு அமர்த்தியுள்ள ஏறத்தாழ அனைத்து நிறுவகங்களும் ETF அலுவலகத்தின் தரவு தளத்தில் காணப்படும் நிறுவகங்களின் பட்டியலில் உள்ளடங்குகின்றன. இத் தரவு தளத்தில் வியாபார ஸ்தாபனங்களின் எண்ணிக்கை, அவற்றின் அமைவிடம், வியாபாரம்/ செயற்பாட்டின் தன்மை மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை போன்ற தரவுகள் உள்ளடங்குகின்றன. இத் தரவுகள் மிகவும் பயனுள்ளவையாக காணப்படுவதுடன் மாவட்டத்தில் அல்லது மாகாணத்தில் காணப்படும் வியாபார ஸ்தாபனங்களின் மொத்த எண்ணிக்கையாக பயன்படுதக்கூடியதாகும். நாம் மொத்த எண்ணிக்கையான வியாபார ஸ்தாபனங்கள், ஒவ்வொரு வியாபார ஸ்தாபனங்களிலும் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கைகள், ஒவ்வாரு ஸ்தாபனங்களினதும் அலுவலக முகவரிகள் மற்றும் வியாபாரங்களின் வகைகள் ஆகியன தொடர்பான தகவல்களை பெற்றுக்கொண்டோம். இத் தகவலானது ஆய்வின் போது எண்ணிக்கையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இது போன்று விபரமாக தரவுகளை வழங்கக்கூடிய எந்தவொரு துணையான தரவு மூலங்களும் காணப்படவில்லை. இத் தரவுகளின் அடிப்படையில் ஒவ்வொரு தொழில்களிலும் ஈடுபட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையினை எம்மால் வகைப்படுத்த முடிந்துள்ளது.

வடமத்திய மாகாணத்தின் ஊழியர் நம்பிக்கை நிதிய சபையின் பிராந்திய அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாகாணத்தில் 2528 எண்ணிக்கையான வியாபார ஸ்தாபனங்கள் காணப்பட்டன. இரு மாவட்டங்களிலும் நிலவக்கூடிய எதிர்கால வேலைவாய்ப்புகளை எதிர்வுகூறுவதற்கு பயனுள்ள தரவுகளை வழங்காத மாதிரிகளின் நிமித்தம் மொத்த எண்ணிக்கையான வியாபார நிறுவகங்களிலிருந்து தரவுகளை சேகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதே எமது நோக்காக காணப்பட்டது. ஆகவே, நாம் மாகாணத்திலுள்ள பகுதி திறன்மிக்க மற்றும் திறன்மிக்க தொழிலாளர்களை பயன்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள அனைத்து வியாபார நிறுவகங்களையும் பயன்படுத்தினோம். மொத்த எண்ணிக்கையான வியாபார நிறுவகங்களிலிருந்து இத் துறைசார் முக்கியத்துவம் அல்லாத, TVEC நிறுவகங்களினால் பயிற்சி அளிக்கப்படும், திறன்மிக்க மற்றும் பகுதி திறன்மிக்க தொழிலாளர்களை பயன்படுத்தும் சில்லறை மற்றும் மொத்த வியாபார நிறுவகங்களில் அனேகமானவற்றினை நாம் நீக்கியுள்ளோம். வடமத்திய மாகாணத்திலுள்ள மொத்த வியாபார நிறுவகங்களின் எண்ணிக்கை 2369 ஆகும். இதில், TVEC நிறுவகங்களினால் பயிற்சி அளிக்கப்படும் திறன்மிக்க தொழிலாளர்களுக்கான கேள்விகளை கொண்டிராத தனிவேலையாட்கள், சில்லறை கடைகள் அல்லது மிகச்சிறிய வியாபார நிறுவகங்கள் மற்றும் சிறிய நிறுவகங்கள் போன்ற அனைத்து வியாபார (http://www.nhrep.gov.lk/) நிறுவகங்களிலும் 80% ஆனவை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபார (SMEs) பொருளாதாரத்தின் பெரும்

பகுதியை வகிக்கின்றன. இந் நிறுவகங்களில் அனேகமானவை திறன்கள் அற்ற அல்லது நாட்கூலிகளை பயன்படுத்த விரும்புகின்றன. இந் நிறுவகங்கள் திறன்கள் அற்ற தொழிலாளர்களை அல்லது முறைசாரா பயிற்சிகளை பெற்ற தொழிலாளர்களை பயன்படுத்துகின்றன. ஆகவே, 2369 வியாபார நிறுவகங்களிலிருந்து திறன்மிக்க தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தாத காரணத்தினால் 1896 சிறு மற்றும் நடுத்தர வியாபார நிறுவகங்கள் கருத்திற்கொள்ளப்படாமல் அகற்றப்பட்டுள்ளதுடன் உற்பத்தி, ஹோட்டல்கள் மற்றும் சேவைகள் ஆகிய துறைகளை சார்ந்த 473 வியாபார நிறுவகங்கள் மொத்த வியாபார நிறுவகங்களாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன. வடமத்திய மாகாணத்தில் இம் மூன்று துறைகளையும் சார்ந்த மொத்தமாக 400 வியாபார நிறுவகங்கள் மாதிரியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் வியாபார முகவரிகள் காணப்படாத காரணங்களினால் ஏனைய 73 வியாபார நிறுவகங்களும் கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படவில்லை. கணக்கெடுப்பிற்கு மேலதிகமாக, நாம் வர்த்தக மற்றும் கைத்தொழிற்துறை சம்மேளனத்தின் வடமத்திய மாகாண கட்டுமான சங்கத்திடமிருந்து தொழிலாளர் கேள்வி தரவுகளை பெற்றுக்கொண்டுள்ளோம்.

**அட்டவணை 4.8: மாதிரிகளின் விபரங்கள்**

| | **வகை** | **கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட நிறுவகங்களின் எண்ணிக்கை** | **மாகாணத்திலுள்ள மொத்த நிறுவகங்களின் எண்ணிக்கை தொடர்பான சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | உற்பத்தித் துறை | 74 | 10% |
| 2 | விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா துறை | 40 | 19% |
| 3 | ஏனைய சேவைகள் துறை | 287 | 71% |
| 4 | கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட நிறுவகங்களின் மொத்த எண்ணிக்கை | 400 | 100% |

ஆதாரம்: ஊழியர் நம்பிக்கை நிதிய பிரதேச அலுவலகத்தினால் அளிக்கப்பட்ட தரவுகள், 2013.

இம் மாதிரகள் எந்தவொரு புள்ளிவிபரவியல் நியமங்களினதும் "பெரிய மாதிரி" வகையினை சார்ந்தவையாகும். மாதிரிகளின் அளவானது போதுமானளவு பெரிதாக இருப்பதனால் அதன் விளைவான பகுப்பாய்வு, முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் என்பன கூடியளவில் சரியாகவும் மற்றும் நம்பகமானதாகவும் இருக்கும். ஆகவே,

நாம் ±10% பிழைகள் அல்லது புறக்கணிப்புகளுடன் மேற்கூறப்பட்டுள்ள 03 உப துறைகளையும் சேர்ந்த அனைத்து வியாபார நிறுவகங்கள் தொடர்பாகவும் கணக்கெடுப்புகளை மேற்கொண்டுள்ளோம்.

**கணக்கெடுப்பு முறை**

கைத்தொழிற்துறைகளில் தற்போது நிலவும் தொழிலாளர் தேவைகளை பெற்றுக்கொள்வதற்காக, கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மூலமான கணக்கெடுப்பானது நடாத்தப்பட்டது. நாம் மாகாணத்தின் தொழில்வழங்குநர்களிடமிருந்து பல அம்சங்களை பற்றிய தரவுகளை சேகரிப்பதற்காக விரிவான வினாத்தாளினை பயன்படுத்தினோம். தரவுகளை சேகரிக்க கணக்கெடுப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டனர். பதிலளிப்பவர்களில் ஓர் தெரிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையினரை பயன்படுத்தி வினாக்கொத்தின் முன்பரீட்சையானது மேற்கொள்ளப்பட்டது. வினாக்கொத்தினை பயன்படுத்தி கணக்கெடுப்பை நடாத்துவதற்கு கணக்கெடுப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வினாக்கொத்தில் உள்ளடங்கியுள்ள கூறுகள் பின்வருமாறு:

a. பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாக தொழில்வழங்குநர்களின் கருத்துக்கள்
b. பாடநெறிகள் மற்றும் பயிற்சிகள் தொடர்பாக தொழில்வழங்குநர்களின் கருத்துக்கள்
c. கைத்தொழிற்துறைகளின் தற்போதைய வேலைவாய்ப்பு நிலவரங்கள்
d. கைத்தொழிற்துறைகளில் அடுத்த ஐந்து ஆண்டுகளிற்கு எதிர்பார்க்கும் வேலைவாய்ப்புகள்

தரவு பரிகரிப்பு மற்றும் பகுப்பாய்வு என்பவற்றினை வசதியாக்கும் பொருட்டு குறியீடிடப்பட்ட வினாக்கொத்துகள் பயன்படுத்தப்பட்டன.

### 4.2. தற்போது நிறுவகங்களினால் வழங்கப்படுகின்ற பயிற்சிகள் தொடர்பாக தொழில்வழங்குநர்களின் கருத்துக்கள்

பயிற்சி நிறுவகங்கள் மற்றும் பாடநெறிகள் பற்றிய தொழில்வழங்குநர்களின் கருத்துக்களை பெறுவதற்காக, ஒரு லிக்கெர்ட் தரவரிசை அளவீட்டினை பயன்படுத்தி தரவுகளை சேகரித்துள்ளோம். தரவரிசை அளவீட்டில் 1 முதல் 5 வரையிலான வரையறைகள் உள்ளதுடன் இதில் 1 ஆனது நிறுவகங்கள் மற்றும் அவற்றின் பாடநெறிகள் பற்றி மிகவும் திருப்தியற்ற நிலைமையினை குறிப்பிடுவதுடன், மேலும் 5 ஆனது நிறுவகங்கள் மற்றும் அவற்றின் பாடநெறிகள் பற்றி மிகவும் திருப்தியான நிலைமையினை குறிப்பிடுகின்றது. TVET நிறுவகங்களினால் வழங்கப்படும்

பாடநெறிகளின் தரம் மற்றும் பொருத்தப்பாடு என்பன பற்றிய தகவல்களை சேகரிக்கும் நோக்கில் கணக்கெடுப்பில் இக் கேள்வியானது உள்ளடக்கப்பட்டுள்ளது.

a. கணக்கெடுப்பானது மேற்கொள்ளப்பட்ட நிறுவகங்களின் மத்தியில், தொழிற்பயிற்சி அதிகாரசபை,தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் ஆகியன தரவரிசையில் அதியுயர் நிலையில் காணப்படுகின்றமையானது தொழில்வழங்குநர்கள் இந் நிறுவகங்கள் பற்றி மிகவும் திருப்தியடைந்துள்ளனர் என்பதனை குறிப்பிடுகின்றது. இது TVEC நிறுவகங்கள் ஒர் உயர் தரமான சேவையினை வழங்கிவருவதுடன் இவற்றின் கல்வி செயற்பாடுகளின் பொருத்தப்படானது தொழில்வழங்குநர்களின் எதிர்பார்ப்புகளை ஈடுசெய்கின்றன என்பதனை சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகின்றது (அட்டவணை 4.9).
b. இருப்பினும், தனியார் மற்றும் அரசு சாரா நிறுவகங்கள் மற்றும் அவற்றின் சேவைகள் குறித்து தொழில்வழங்குநர்கள் குறைந்தளவான திருப்தியினை வெளியிட்டுள்ளனர் (அட்டவணை 4.9). ஏனைய அரச நிறுவகங்களினால் பெறப்பட்ட தரநிலை அளவீடானது 5 இற்கு 2.3 ஆக காணப்படுகின்ற அதே சமயம் அரச அல்லாத நிறுவகங்களால் பெறப்பட்ட அளவீடானது 3 ஆக காணப்படுகின்றது. பல்வேறு பயிற்சி பாடநெறிகளை மேற்கொள்கின்ற முடிவற்ற எண்ணிக்கையான தனியார் பயிற்சி வகுப்புகள் தொழில்வழங்குநர்களால் சிறந்த முறையில் அங்கீகரிக்கப்படவில்லை.
**c.** இத் தரவுகள் TVEC நிறுவகங்களால் வழங்கப்படுகின்ற NVQ பாநெறிகளை தொழில்வழங்குநர்கள் மிகவும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதனை தெளிவாக எடுத்துரைக்கின்றன. இது ஏனைய அரச பயிற்சி நிறுவகங்கள் மற்றும் அனைத்து அரச அல்லாத பயிற்சி நிறுவகங்கள் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் பயிற்சியளித்தலின் தரத்தினை பேணும்பொருட்டு அவற்றினை NVQ சட்டகத்தின் கீழ் கொண்டுவருதல் வேண்டும் என்பதனை தெளிவுபடுத்துகின்றது.

**அட்டவணை 4.9: கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொடர்பாக தொழில்வழங்குநர்களின் கருத்துக்கள்**

| | நிறுவகம் | சராசரி நிலை |
|---|---|---|
| 1 | தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA) | 4.1 |
| 2 | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை (NAITA) | 4.2 |
| 3 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC) | 4.1 |

| | | |
|---|---|---|
| 4 | தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் (DTET) | 4.1 |
| 5 | ஏனைய அரசதுறை நிறுவகங்கள் | 2.3 |
| 6 | அரச சார்பற்ற நிறுவனங்கள் | 3 |

குறிப்பு: 1 முதல் 5 வரையிலான தரவரிசை அளவீட்டினை அடிப்படையாக கொண்டு, 1 ஆனது மிகவும் திருப்தியற்றது என்பதனையும் மற்றும் ஆனது மிகவும் திருப்திகரமானது என்பதனையும் குறித்துநிற்கின்றன.
ஆதராம்: கணக்கெடுப்பு தரவுகள்

தொழில்வழங்குநர்களின் பின்னூட்டல் கருத்துக்களின் அடிப்படையில் பல்வேறு நிறுவகங்களால் மேற்கொள்ளப்படும் பாடநெறிகளின் தரங்கள் மற்றும் பொருத்தப்பாடுகள் என்பன தொடர்பான தகவல்களை நாங்கள் பெற்றுக்கொண்டுள்ளோம். அட்டவணை 4.10 ஆனது இதைப் பற்றிய சுருக்கமான புள்ளிவிபரங்களை அளிக்கின்றது.

a. VTA, NAITA, NYSC மற்றும் DTET ஆகியவற்றின் பாடநெறிகளிற்கு தொழில்வழங்குநர்களினால் ஒப்பீட்டளவில் உயர் தரவரிசையானது அளிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் மிகச் சிறந்த திருப்தியினை அடைவதற்கு தங்களது திட்டங்களில் இன்னும் மேம்பாடுகளை செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
b. பயிலுநர்கள் ஆரம்ப சமரசத்தின் போதும் மற்றும் சேவை காலத்தின் போதும் மிக உயர்ந்த சம்பளங்களை எதிர்பார்த்தல் மற்றும் கடினமான தொழில்களை கோராமை ஆகியவை தொழில்வழங்குநர்களால் முன்வைக்கப்படுகின்ற விரச்சினைகளில் ஒன்றாக காணப்படுகின்றது.
c. தொழில்வழங்குநர்களின் கருத்துக்களின் அடிப்படையில் பெரும்பாலான பயிலுநர்கள் துறைகளில் அதிகம் காணப்படாத அலுவலக வகை தொழில்களையே தேடுகின்றனர். பயிலுநர்கள் கைத்தொழிற்துறையில் எந்தவொரு வேலை சூழலிற்கும் பொருந்தக்கூடிய வகையில் பயிற்சி நிறுவகங்கள் அவர்களின் மனோநிலையினை மாற்றுவதற்கு ஏதுவான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென அவர்கள் முன்மொழிந்துள்ளனர்.
d. மறுபுறத்தில், தொழில்வழங்குநர்கள் TVEC இன் கீழ் அல்லாத பல்வேறு அரச நிறுவகங்களினாலும் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்களினாலும் வழங்கப்படுகின்ற பாடநெறிகள் தொடர்பாக திருப்தியடையவில்லை.
e. ஏனைய அரச நிறுவகங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்கள் என்பவற்றினை சேர்ந்த பெரும்பாலான பயிலுநர்களிற்கு கோட்பாட்டு ரீதியான பயிற்சிகளை அளிப்பதனால் அவர்கள் பிரயோகங்கள் மற்றும் உண்மையான

வேலை நிலைமைகளின் போது அவற்றிற்கு மிகவும் பழக்கமற்றவர்களாக உள்ளார்கள் என தொழில்வழங்குநர்கள் கருதுகின்றனர்.

f. போதியளவு செய்முறை பயிற்சியின்மையின் காரணமாக பயிலுநர்கள் தங்களுடைய இயந்திரங்களை உடைக்கிறார்கள்/ பழுதடையச்செய்கின்றார்கள் என சில தொழில்வழங்குநர்கள் புகார் கூறுகின்றனர்.

**அட்டவணை 4.10: கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொடர்பாக தொழில்வழங்குநர்களின் கருத்துக்கள்**

| | **நிறுவகம்** | **சராசரி நிலை** |
|---|---|---|
| 1 | தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA) | 4.0 |
| 2 | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை (NAITA) | 3.9 |
| 3 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC) | 3.8 |
| 4 | தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் (DTET) | 3.9 |
| 5 | ஏனைய அரசதுறை நிறுவகங்கள் | 3.0 |
| 6 | அரச சார்பற்ற நிறுவனங்கள் | 3.0 |

ஆதாரம்: மாகாண பொது கணக்கெடுப்பு

### 4.3. கைத்தொழிற்துறைசார் தொழில்வாய்ப்புகள் தொடர்பான தகவல்கள்

முதற்படியாக, அடுத்த ஐந்து வருட காலத்தில் மாகாணத்திலும் மற்றும் இரண்டு மாவட்டங்களிலும் ஒவ்வொரு தொழில்கள் தொடர்பாகவும் நிலவும் கேள்விகளாக தொழில்வழங்குநர்களால் வழங்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தியுள்ளோம். இவ் உப பிரிவில் நாம் மாகாணத்திலும் மற்றும் இரு மாவட்டங்களிலும் சுருக்கமாக கைத்தொழிற்துறைகளில் காணப்படும் வேலைவாய்ப்பு விவரங்கள் தொடர்பாக விவாதிக்கிறோம். வடமத்திய மாகாண்தில் உள்ள பல்வேறு திறன்மிக்க தொழிலாளர் வகைகளிற்கான தற்போதைய மற்றும் எதிர்கால கோரிக்கைகளை அடையாளம் காண்பதில், நாங்கள் இரண்டு அணுகுமுறைகளை பயன்படுத்தியுள்ளோம். முதலாவது அணுகுமுறையாவது தொழில்வழங்குநர்களின் பதில்களை அடிப்படையாக கொண்டு எதிர்காலத்தில் ஒவ்வொரு வியாபார நிறுவகத்தினாலும் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ள புதிய தொழிலாளர்களின் எண்ணிக்கையை பதிவு செய்தலாகும். மற்றைய அணுகுமுறையாவது மாகாணத்தில் பல்வேறு தொழில்களின் ஐந்து ஆண்டுகளுக்கான கோரிக்கைகளை எதிர்வுகூறலாகும். அட்டவணைகள் 4.11, 4.12 மற்றும் 4.13 இரு மாவட்டங்கள் (அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை) மற்றும் வடமத்திய மாகாணம் ஆகியவற்றின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் வேலைவாய்ப்பு விவரங்கள் குறித்த தரவுகளை வழங்குகின்றன.

**அட்டவணை 4.11: அனுராதபுர மாவட்டத்தில் உற்பத்தி துறை தொடர்பாக தற்போது நிலவுகின்ற மற்றும் விரும்பப்படுகின்ற தொழில்வாய்ப்பு விபரங்கள்**

| தொழில் | தற்போதுள்ள மொத்த எண்ணிக்கையான தொழிலாளர்கள் | எதிர்வுகூறப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
| மோட்டார் திருத்துநர் | 71 | 14 | 10 | - | - | 09 |
| குஷன் வேலையாளர்கள் | 21 | 19 | 12 | 6 | 9 | - |
| வில்லுத்தகடு தயாரிப்பாளர்கள் | 12 | 6 | 4 | - | - | 7 |
| கொங்கிறீட் தொழிலாளர்கள் | 53 | 11 | 9 | - | 3 | 1 |
| லேத் இயந்திர தொழிலாளர்கள் | 13 | - | 10 | 5 | - | 3 |
| தொப்பி உற்பத்தி | 6 | - | - | - | - | - |
| கைத்தறி | 8 | 2 | 2 | 5 | 1 | - |
| பிரம்பு உற்பத்தி | 30 | 3 | 1 | 3 | 6 | 7 |
| காய்ச்சி இணைப்பவர்கள் | 97 | 8 | 4 | 12 | 9 | 19 |
| வெதுப்பக தொழிலாளர்கள் | *51* | *10* | *14* | *12* | *20* | *13* |
| பேஸ்ட்ரி தயாரிப்பாளர்கள் | 18 | 23 | 15 | 13 | 8 | 7 |
| பொற்கொல்லர் | 27 | 3 | 2 | 5 | 1 | - |
| தங்க நகை வடிவமைப்பாளர்கள் | 11 | - | - | - | - | - |
| இரும்பு வேலையாளர்கள் | 19 | 7 | 12 | - | - | 10 |
| அலுமினிய வேலையாளர்கள் | 12 | 10 | 13 | 7 | 9 | 2 |
| கண்ணாடி இழை வேலையாளர்கள் | 3 | - | - | - | - | - |
| இன்ஜெக்ரர் பம்பி | 5 | - | - | - | - | - |

| தொழில் | தற்போதுள்ள மொத்த எண்ணிக்கையான தொழிலாளர்கள் | எதிர்வுகூறப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|
| திருத்துநர் | | | | | | |
| மின்னியலாளர் | 51 | 10 | 2 | 1 | - | 7 |
| கணனி தொழில்நுட்பவியலாளர் | 12 | 5 | 3 | 10 | 6 | - |
| மர கைவினை வடிவமைப்பாளர்கள் | 8 | - | - | - | - | - |
| குழாம் உதவியாளர் | 0 | 12 | -12 |
| நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் | 0 | 0 | 0 |
| வேலைத்திட்ட மேற்பார்வையாளர் | 0 | 22 | -22 |
| கணிய அளவையியலாளர் | 0 | 23 | -23 |
| வரவேற்பாளர் | 0 | 41 | -41 |
| உணவு விடுதி மேற்பார்வையாளர் | 0 | 55 | -55 |
| அரிசி ஆலை தொழிலாளி | 0 | 678 | -678 |
| அறை உதவியாளர் | 100 | 93 | 7 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | 0 | 70 | -70 |
| ஸ்ரிக்கர் மற்றும் டிஜிட்டல் பிரிண்டர் | 150 | 63 | 87 |

| தொழில் | மொத்த பயிற்சி வழங்கல் | மொத்த புதிய கேள்விகள் | பற்றாக் குறை (-) / மேலதிகம் (+) |
|---|---|---|---|
| தையற்காரர் | 1245 | 193 | 1052 |
| டைல்ஸ் பதிப்பவர் | | 125 | |
| வாகன பராமரிப்பு தொழில்நுட்பவியலாளர் | 0 | 85 | -85 |
| பரிமாறுபவர் | 150 | 139 | 11 |
| கணனி வரைபடக் கலைஞர் | 240 | 0 | 240 |
| காய்ச்சி இணைப்பவர் | 1065 | 250 | 815 |
| மர கைவேலை வடிவமைப்பாளர் | 0 | 24 | -24 |

## அத்தியாயம் 06

## பரிந்துரைகள் மற்றும் ஓர் செயற்திட்டம்

இவ் அறிக்கையின் வெவ்வேறு அத்தியாயங்களில் தரவுகளின் பகுப்பாய்வுகளின் அடிப்டையில், நாம் பொதுவான மற்றும் விசேடமான பரிந்துரைகளை உருவாக்கியுள்ளோம். வடமத்திய மாகாணத்தில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான விரிவான தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு TVEC மற்றும் ஏனைய அரச நிறுவகங்களின் அர்ப்பணிப்புகள் தேவைப்படுகின்றன.

### 6.1. தொழிலாளர் தரவுகள் தொடர்பான பரிந்துரைகள்

தொழிலாளர் சந்தை போக்குகளை பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றமையானது, TVEC ஆனது ஒவ்வொரு மாவட்டங்கள் சார்பாகவும் தொழிலாளர்கள் பற்றிய விரிவான தரவுத்தளத்தினை பேணிவருவதுடன் இட்டுச்செல்கின்றது. இத் தரவு தளத்தினை பயிற்சி நிறுவகங்களின் பயன்பாட்டின் பொருட்டு ஆன்லைன் மூலமான ஒன்றாக மாற்றியமைக்க முடியும். தொழிலாளர்கள் பற்றிய விரிவான தரவுகள் காணப்படாமையினால் ஒவ்வொரு பாடநெறிகளிற்கும் எதிர்பார்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையினை தீர்மானித்தல் பயிற்சி நிறுவகங்களிற்கு ஓர் கடினமான விடயமாக காணப்படுகின்றது. தரவு தளமானது பின்வரும் தகவல்களை உள்ளடக்கவேண்டும்.

- பொதுக் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவற்றுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்பு பொறிமுறையினை ஸ்தாபிப்பதற்கு ஒழுற்கமைப்பு மற்றும் கொள்கை சட்டகத்தினை உருவாக்கவேண்டியுள்ளது.
- அரச பல்கலைக்கழகங்களில் பெரும் எண்ணிக்கையிலான வெளிவாரி கலைமானி பட்டப்படிப்பு மாணவர்கள் பதிவுகளை மேற்கொண்டிருப்பதன் காரணமாக TVET பாடநெறிகளிற்கான கேள்விகள் பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதுடன் தொழிலாளர் சந்தைகளில் பாரிய சமனற்ற நிலைமையினை தோற்றுவிக்கின்றது. இதனால் வெளிவாரி பட்டப்படிப்பு பட்டதாரிகளின் எண்ணிக்கையினை மட்டுப்படுத்தும் நிமித்தம் சட்ட நடவடிக்கையானது மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- தொழில்வழங்குநர்களினால் திறனற்ற மற்றும் பகுதி திறன்மிக்க தொழிலாளர்களின் பயன்படுத்தலை குறைக்கும் பொருட்டு அனைத்து நிறுவகங்களிலும் அவைகளின் தொழிலாளர்களுக்கான தேவைகளை ஈடுசெய்வதற்காக NVQ தகுதி பெற்ற நபர்களில் குறிப்பிடத்தக்க

எண்ணிக்கையானவர்களை அனைத்து தொழில்வழங்குநர்களும் பேணுவதனை கட்டாயப்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

- தரப்படுத்தலை மேற்கொள்ளும் ஓர் வழிமுறையாக தொழிலாளர்களின் தரங்களினை சேவை பெறுநர்கள் அடையாளங்காணும் பொருட்டு அனுமதிப்பத்திர முறைமையின் ஊடாக ஆகக் குறைந்த தகுதிகளையுடைய தொழிலாளர்களிலிருந்து அதிகூடிய தகுதிகளையுடைய தொழிலாளர்களை ஒவ்வொரு தொழில்கள் தொடர்பாகவும் வேறுபடுத்துவதற்கான தரப்படுத்தல் முறைமையினை அறிமுகம் செய்தல்.
- தொழில்வழங்குநர்கள் வரிகள்/ EPF/ ETF என்பவற்றினை செலுத்துவதனை தவிர்த்தல் மற்றும் தமது நிறுவகங்களை குறைந்தபட்ச செலவில் நடாத்திச் செல்லல் என்பவற்றுக்காக பயிலுநர்களை தொழில்களுக்காக அமர்த்தியுள்ளனர். இதனால் நிரந்தர தொழிலாளர்களுக்கு மாற்றாக பயிலுநர்களை பயன்படுத்த தடை விதிக்கும் சட்டங்களை அறிமுகம் செய்தல்.
- அனேகமான இளைஞர்கள் NVQ தகைமைகளை பெற்றுக்கொள்வதற்கு மாறாக முச்சக்கர வண்டி சாரதியாக உருவாகி வருகின்றனர். இதனால், குறைந்தபட்ச வயது வரம்புகளை முச்சக்கர வாகன ஓட்டிகளுக்கு அறிமுகப்படுத்த ஓர் சட்ட கட்டமைப்பை உருவாக்குதல் வேண்டும்.
- UGC, NEC மற்றும் TVEC ஆகியவற்றுக்கு இடையில் ஓர் சட்டபூர்வமான பொறிமுறை மூலம் நிரந்தர ஒத்துழைப்பினை ஏற்படுத்தல் வேண்டும்.
- TVET பாடநெறிகளுக்கான கோரிக்கைகளில் அதிகரிப்பினை ஏற்படுத்தவும் மற்றும் தொழிலாளர் சந்தை ஏற்றத்தாழ்வுகள் பற்றிய பிரச்சினையை சரிசெய்வதற்காக அலுவலக பணிகள் தொடர்பாக நிலவும் அதிகரித்த கோரிக்கைகளை குறைப்பதற்காகவும், தொழிற்கல்விக்கு மாறாக, அலுவலகத்தில் பணிபுரியும் தொழில்களை தேடுபவர்களுக்கான பாடநெறிகளை மேற்கொள்ளும் தனியார் உயர் கல்வி நிறுவகங்களை மட்டுப்படுத்துதல்.
- மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து குறைந்தபட்சம் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குரிய தொழிலாளர்களுக்கான தேவைகளின் போக்குகள் மற்றும் நிலவரங்கள் என்பவற்றினை அடையாளம் காண்பதற்காக ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலுமுள்ள தொழிலாளர்கள் பற்றிய தரவுகளை சேகரித்தல்
- க.பொ.த. (சா/ த) அல்லது க.பொ.த. (உ/ த) இன் பின்னர் அரச பல்கலைக்கழகங்களினுள் நுழைவதற்கான தகைமைகளை பெற்றுக்கொள்ள தவறிய பின்னர் ஏனைய உயர்கல்வி நிறுவகங்களில் கல்வியினை தொடரும் நபர்கள் பற்றிய தரவுகள்.

- க.பொ.த. (உ/ த) இன் பின்னர் அரச பல்கலைக்கழகங்களினுள் நுழைவதற்கான தகைமைகளை பெற்றுக்கொள்ள தவறிய பின்னர் வெளிவாரி பட்டப்படிப்புகளை தொடருகின்ற நபர்கள் தொடர்பான தரவுகள்
- இரண்டாம் மற்றும் மூன்றாம் தடவைகளில் க.பொ.த. (சா/ த) அல்லது க.பொ.த. (உ/ த) பரீட்சைகளை எழுதும் நபர்களின் எண்ணிக்கை பற்றிய தரவுகள்
- க.பொ.த. (சா/ த) அல்லது க.பொ.த. (உ/ த) இன் பின்னர் நாட்டின் ஏனைய மாகாணங்களிற்கு குடிபெயர்கின்ற நபர்களின் எண்ணிக்கை
- க.பொ.த. (சா/ த) அல்லது க.பொ.த. (உ/ த) இன் பின்னர் ஏனைய நாடுகளிற்கு குடிபெயர்கின்ற நபர்களின் எண்ணிக்கை
- க.பொ.த. (சா/ த) அல்லது க.பொ.த. (உ/ த) இன் பின்னர் தொழிற்கல்வி அல்லது ஏனையவை தொடர்பான மேலதிக கல்வியினை தொடராமல் நேரடியாக தொழில்களில் இணையும் நபர்களின் எண்ணிக்கை
- கைத்தொழிற்துறைகளில் முறைசாரா தொழிலின் போதான தொழிற் பயிற்சியினை பெற்றுவரும் நபர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகள்.

## 6.7. வாழ்வாதார தொழிலாளர்களுக்கான திறன்கள்சார் பயிற்சிகள் தொடர்பான பரிந்துரைகள்

அத்தியாயம் 3 இல் மேற்கொள்ளப்பட்டுள்ள பகுப்பாய்வுகள் திறன்களை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்த வேண்டிய பல பரிந்துரைகளிற்கு வழிவகுக்கின்றது. எதிர்கால நடவடிக்கைகள், வாழ்வாதார தொழில்கள் மிகவும் பல்வகைத்தன்மை கொண்டவையாக காணப்படுகின்றமையினால், பொதுவான திறன்கள் அபிவிருத்தி பாடநெறிகள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் எப்போதும் சாத்தியமற்றவையாக இருப்பது தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் கருத்தில் எடுக்கவேண்டும். ஒவ்வொரு வகையான தொழில்கள்/ செயல்பாடுகளின் பொருட்டு அவை ஒவ்வொன்றிற்கும் உரியதாக திறன் பயிற்சி திட்டங்கள் தேவைப்படுகின்றன. பயிற்சிகள் அல்லது நிதி உதவியானது வழங்கப்பட்டால், பல்வேறு வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைவரும் பயிற்சிகள் மூலமாக உயர்ந்த அல்லது இலாபகரமான வியாபார முயற்சிகளுக்கு முன்னேறுவதற்கான சாத்தியக்கூறு உள்ளது என்பதை முடிவு செய்வது ஓர் தவறான விடயமாகும். பெரும்பாலான வாழ்வாதார தொழிலாளர்கள் அவர்கள் உயிர்வாழ்வதற்கான தந்திரோபாயங்களாகவே இத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் போல தோன்றுகின்றது.

- விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பயிற்சித் திட்டங்களை குறைத்து குறிப்பிட்ட வியாபார/ செயற்பாடு / தொழில் சார்ந்த திறன் பயிற்சிகளை வழங்குதல்

- அட்டவணை 3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாழ்வாதார தொழிலாளர்களுக்கான திறன்கள் அபிவிருத்தி பாடநெறிகளை திட்மிடுதல் மற்றும் மேற்கொள்ளுதல்
- தொழில்முனைவோர் அபிவிருத்தி தொடர்பாக அறிவினை வழங்குவதற்காக வெறுமனே அரச அதிகாரிகளைப் பயன்படுத்துவதிலும் பார்க்க விடய அறிவுசார் நிபுணர்களை பயிற்சி திட்டங்களிற்கு பயன்படுத்துதல் வேண்டும்.
- அனேகமான வாழ்வாதார தொழிலாளர்கள் உயிர் பிழைக்க வேண்டியதன் காரணமாக ஒரு நாளையோ அல்லது சில நாட்களையோ பயிற்சிகளிற்காக செலவுசெய்ய முடியாத நிலையில் உள்ளமையினால், அதற்கான மாற்றுவழி மூலோபாயமாக கள அடிப்படையிலான பயிற்சி, வியாபார நிலையங்களிற்கு அல்லது வீடுகளிற்கு விஜயம் செயதல், நடமாடும் பயிற்றுநர்கள் என்பவற்றினை நடைமுறைப்படுத்தல்.
- TVEC ஆனது ஏனைய அரச நிறுவகங்களுடனான ஒத்துழைப்புடன் பிராந்திய மட்டத்தில் வியாபார ஆரம்ப மையங்களை ஸ்தாபிப்பதற்கான வாய்ப்புகளை ஆராய வேண்டும்.
- க.பொ.த. (உ/ த) தொழில்நுட்ப ரீதியான மாணவர்களை இலக்காக கொண்ட பல்கலைக்கழக வளாகங்களை தோற்றுவித்தல் இன்றியமையாததாகும்.
- திறன்கள் அபிவிருத்தி பாடநெறிகளின் திட்டமிடல் செயல்முறைகளில் வாழ்வாதார தொழிலாளர்களின் பங்கேற்பானது ஆய்வு செய்யப்பட்டு மற்றும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
- வாழ்வாதார திறன்கள் மேம்பாட்டு கற்கை தொடர்பான பாடநெறிகளை வடிவமைப்பதில் பாரம்பரிய/ சுதேச அறிவு/ திறன்களை கருத்தில் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.
- பெரும்பாலான அரச பயிற்சி வேலைத்திட்டங்கள் தோல்வி கண்டுள்ளன ஏனெனில் அவை பல்வேறு தொழில்கள்/ வியாபாரங்கள்/ தொழில்முனைவோர் பற்றிய பொதுவான அறிவை மட்டுமே அளிக்கின்றன. அத்தகைய பயிற்சி திட்டங்கள் நிறுத்தப்படல் வேண்டும்.
- TVEC ஆனது தமது வியாபாரங்களை மேம்படுத்தி அவற்றினை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற மனப்பாங்கினை கொண்டுள்ள சாத்தியமான வாழ்வாதார தொழிலாளர்களை அடையாளங்காண்பதற்கான பொறிமுறையினை கொண்டிருத்தல் வேணடும் ஏனெனில் அனேகமான வாழ்வாதார தொழிலாளர்கள் ஓர் நிலையான வருமான மூலத்தினை கண்டறியும் வரையில் வெறுமனே தாம் உயிர் வாழ்வதற்காகவே வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

**பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் மற்றும் பொருத்தப்பாடுகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்**

இது 4.1 தொடக்கம் 4.10 வரையிலான அட்டவணைகளை அடிப்படையாக கொண்டுள்ளன.

- தொழில்கல்வி மற்றும் பயிற்சியினை வழங்குகின்ற அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்களை ஒழுங்கமைக்கும் பொறிமுறையினை உருவாக்குதல்.
- அனைத்து அரச சார்பற்ற நிறுவகங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சிகளின் தரத்தினை கட்டாய அடிப்படையில் சான்றுப்படுத்தி பேணுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் ஏனெனில், இப் பாடநெறிகளின் தரமானது மிக்க் குறைவானது என தொழில்வழங்குநர்கள் எண்ணுகின்றனர்.
- அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்ற சகல தொழிற்கல்வி மற்றும் பயிற்சி பாடநெறிகளை NVQ ஆக கட்டாய அடிப்படையில் மாற்றிக்கொள்ளுதல் வேண்டும் ஏனெனில் தற்போதைய தன்னிச்சையான செற்பாடுகள் போதுமானதாக இல்லை.
- தர நிர்ணயத்தினை ஏற்படுத்தும் பொருட்டு தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளை மேற்கொள்கின்ற அனைத்து நிறுவகங்களுக்கும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் முறைமையினை அறிமுகம் செய்தல் வேண்டும்.
- கைத்தொழிற்துறைகளில் அலுவலக மட்ட வேலைகளை மாணவர்கள் தேடுகின்ற மனோநிலையினை மாற்றுவதற்கு ஏற்றவாறான அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களிற்குமுரிய பாடநெறிகளை அல்லது பாடநெறி உள்ளடக்கங்களை சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.
- அனைத்து NVQ அல்லாத பாடநெறிகளை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் ஏனெனில் அவற்றின் தரங்கள் மிகவும் குறைவானதாகும்.
- பிரயோக பயிற்சிகள் மேம்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்
- அனைத்து பாடநெறிகளுக்கும் திட்டமிடப்பட்ட முறையான உள்ளக பயிற்சிகளை அமுல்படுத்தல் வேண்டும்.
- கைத்தொழிற்துறை சார்ந்த பயிற்சிகள் மேம்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.
- அனேகமான வியாபார நிறுவகங்கள் தமது வியாபாரங்கள் மற்றும் செயற்பாடுகள் நடாத்தி செல்வதற்கு பயிலுநர்களிலேயே தங்கியுள்ளனர். கைத்தொழிற்துறைகள் NVQ தகுதி பெற்ற தொழிலாளர்களை பயன்படுத்துவதற்குரிய பொறிமுறைகளை உருவாக்குதல் வேண்டும்.

## 6.2. பயிற்சி நிறுவகங்களிற்கான மாணவர்களின் உள்ளீர்ப்பினை அதிகரித்தல் மற்றும் மாகாணத்தில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியினை அபிவிருத்தி செய்தல் என்பன தொடர்பான பரிந்துரைகள்

இப் பரிந்துரைகள் இவ் அறிக்கையின் 4 ஆம் மற்றும் 05 ஆம் அத்தியாயங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பகுப்பாய்வுகளிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளன.

- அட்டவணை 4.19 இல் தரப்பட்டுள்ளதற்கு இணங்க, அனைத்து நிறுவகங்களும் தங்களது பயிற்சி வழங்கல் தரவுகளை எதிர்கால கோரிக்கை தரவுகளுடன் ஒப்பிடல் வேண்டும்.
- பதவியா, கெப்பெத்திகொல்லாவ, மஹாவிலச்சி, மதவச்சி, ராஜங்கனை, மற்றும் தலாவை போன்ற சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் TVET நிறுவகங்களின் பற்றாக்குறையானது உள்ளது (அட்டவணை 5.1 மற்றும் 5.2). இப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கோரிக்கைக்கு ஏற்ப புதிய பயிற்சி நிலையங்களை அமைத்தல் வேண்டும்.
- சில பயிற்சி நிலையங்களில் மாணவர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லை என்பதால், தற்போதுள்ள நிறுவகங்கள்/ நிலையங்களை இணைப்பது மற்றும் ஒருமித்ததாக இயங்கவைக்க வேண்டிய தேவையானது நிலவி வருகின்றது.
- NVQ மட்டம் 5 மற்றும் 6 இற்கான பாடநெறிகளை மேற்கொள்ளும் நிலையங்கள் / நிறுவகங்கள் பொலன்னறுவை மாவட்டத்தில் போதுமான அளவில் நிறுவப்பட வேண்டும்.
- மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் நோக்கில் புலமைப் பரிசில்கள்/ நிதியுதவி திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
- அரிசி ஆலை இயந்திர இயக்குநர்கள், அரிசி ஆலை இயந்திர உற்பத்தியாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள், வேளாண்மைக்கும் மற்றும் அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்பத்திற்கும் தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்வதல், அறுவடைக்கு பிந்திய வியாபார செயற்பாடுகளிற்கு தேவையான திறன்கள் மற்றும் அறிவு, உணவு பதனிடல் தொழில்நுட்பம், புதிய விவசாயம் சார்ந்த தயாரிப்புகளை உருவாக்குதல் மற்றும் உற்பத்தி செய்தல் போன்ற உள்ளூர் தேவைகளை ஈடுசெயவதற்கு தேவையான புதிய பாடநெறிகள்/ நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்தல்.
- போதுமான செய்முறை பயிற்சிகளை அளிப்பதற்காக அனைத்து நிறுவகங்களினதும் வளங்கள் மற்றும் வசதிகளை அதிகப்படுத்துதல்.
- அனைத்து நிறுவகங்களிலும்/ நிலையங்களிலும் உள்ளக தர உத்தரவாத பிரிவுகள் நிறுவப்படல் வேண்டும்.

- தற்போதுள்ள வளங்கள் போதுமான அளவுகளில் காணப்படாமையினால் வேலையின் போதான பயிற்சிகள் மற்றும் உள்ளக பயிற்சிகள் என்பவற்றின் பொருட்டு வளங்கள் மற்றும் கைத்தொழிற்துறை ஒருங்கிணைப்புகள் உள்ளடங்கலாக நிறுவக ஏற்பாடுகள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.
- பயிற்சியின் நிமித்தம் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக கூடுதலான மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல்.
- கைத்தொழிற்துறை மற்றும் தொழில்நுட்பம் ஆகியன மாற்றமடைந்துவரும் தன்மையினை எதிர்கொள்வதற்கு ஏதுவாக அனைத்து பாடநெறிகளுக்குமான பாடத்திட்டங்கள் அடிக்கடி மற்றும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.
- கற்றல் செயற்பாடுகளில் அக்கறை செலுத்துதல் மற்றும் பயிற்சியின் பின்னர் வேலைவாய்ப்புகளை தேர்வு செய்தல் என்பவற்றின் பொருட்டு மாணவர்களின் மனோநிலையினை மாற்றியமைப்பதற்கான பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டண முறைமையினை தொடர்ச்சியாக மாற்றியமைப்பதற்கான ஓர் பொறிமுறை மற்றும் வழிமுறையினை வடிவமைத்தல் வேண்டும். அத்துடன் பெரும்பாலான மாணவர்களுக்கு அரச நிதி வழங்கல் தேவைப்படுகின்றது.
- விவசாய பதனிடுதல், வீடியோ படப்பிடிப்பு போன்ற வளர்ந்துவரும் தொழில்கள் தொடர்பாக புதிய பயிற்சி திட்டங்கள் தேவைப்படுகின்றன.
- நிறுவகங்கள் பழைய மாணவர் சங்கங்களை நிறுவ வேண்டும் அத்துடன் அவை மாணவர்கள் மற்றும் கைத்தொழிற்துறையின் மனநிறைவு என்பவற்றிற்காக வேலைவாய்ப்புகளை கண்டறிவதற்கான விரிவான ஆய்வுகள் நடத்துதல் வேண்டும்.
- அனைத்து நிறுவகங்களும் தொழில்வழங்குநர்களின் திருப்தி ஆய்வுகளை நடாத்த வேண்டும் மற்றும் கற்பித்தல் கற்றல் செயல்முறையை மேம்படுத்துவதற்காக ஆய்வுகளின் விளைவுகளை பயன்படுத்த வேண்டும்.
- பயிற்சி நிறுவகங்கள் விளம்பரங்களை மேற்கொள்வதற்காக போஸ்டர்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற நவீன முறைகளைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படல் வேண்டும்.
- கல்வி அமைச்சின் ஓர் முறையான ஒத்துழைப்புடன் க.பொ.த (சா/ த) அல்லது க.பொ.த. (உ/ த) இனை பூர்த்திசெய்துள்ளவர்களுக்காக பாடசாலைகளில் செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை தொடர்ச்சியாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- பெரும்பாலான நபர்கள் அரசியல்வாதிகளிடமிருந்து வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றமையினால் பாடநெறிகள் அல்லது

நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக வருங்கால பயிலுநர்களுக்கு கற்பிப்பதற்காக அரசியல்வாதிகளின்/ கொள்கை வகுப்பாளர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு TVEC ஆனது ஓர் பொறிமுறையினை வைத்திருத்தல் வேண்டும்.

- பாடநெறிகளை ஊக்குவிப்பதற்காக கிராமிய அல்லது சமூக அளவிலான விழிப்புணர்வு திட்டங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும்
- பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அவசியமாக உள்ளன ஏனெனில் அவர்களின் முடிவுகள் மாணவர்களின் தேர்வுகளை தீவிரமாக பாதிக்கின்றன.
- TVEC பாடநெறிகள் பற்றிய விழிப்புணர்வு திட்டங்கள் இலங்கையில் உள்ள பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். TVEC ஆனது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு பாடசாலைகளின் ஆதரவினை பெற்றுக்கொள்வதற்காக TVEC இற்கு கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படுவதற்கான ஒரு முறையான பொறிமுறையானது தேவைப்படுகின்றது.
- பிரதேச செயலகங்களில் பணிபுரியும் திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்களை ஊக்குவிப்பு திட்டங்களில் சிறப்பாக பயன்படுத்த முடியும். இவ்வாறான உதவிகளை பெறுவதற்காக TVEC ஆனது மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும். தற்போதுள்ள கட்டுப்பாடுகள், தொழில்சார் வரையறைகள் என்பன வெவ்வேறுபட்ட அரச அதிகாரிகளை இவற்றிற்காக பயன்படுத்துவதற்கு ஓர் தடையாக விளங்குகின்றன.
- பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் திறகள் அபிவிருத்தி உதவியாளர்களுக்கும் மற்றும் மனித வள அபிவிருத்தி உதவியாளர்களுக்கும் இடையில் நிலவும் தொழில் முரண்பாடுகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.
- சமூக மற்றும் கலாச்சார காரணிகள் வருங்கால மாணவர்களின் தெரிவுகளை தீர்மானிப்பதனால் பல்வேறு TVET பாடநெறிகளை நோக்கியதாக பொதுமக்களின் அணுகுமுறைகளை மாற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
- அனுராதபுர மாவட்டத்தில், வெதுப்பக தொழிலாளர்கள், முடி திருத்துநர்கள், தச்சர்கள், காசாளர்கள், மின்னியலாளர்கள், கொல்லர், சுகாதார பராமரிப்பு தொழிலாளர்கள், மேசன்கள், புகைப்பட வடிவமைப்பாளர்கள், புகைப்படம் எடுத்தல், மருந்து கலவையாளர்கள், ஹோட்டல் தொழிலாளர்கள், செயலாளர்கள், வரவேற்பாளர்கள் மற்றும் அரிசி ஆலை இயந்திர இயக்குநர்கள் போன்ற தொழில்கள் தொடர்பான பயிற்சி வழங்கல்கள் அதிகரிக்கப்படல் வேண்டும்.

- அனுராதபுர மாவட்டத்தில் குறிப்பாக தொலைக்காட்சி/ வானொலி திருத்துநர்கள், விளம்பரதாரர்கள், அலுமினிய சட்டகம் புனைபவர்கள், வெதுப்புநர்கள், அழகு கலைஞர்கள், கணனி பிரயோக உதவியாளர்கள், சமையற்காரர்கள், கணனி இயக்குநர்கள், கணனி தொழில்நுட்பவியலாளர்கள், வரைபட வடிவமைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், தோட்ட வேலை செய்பவர்கள், வரைபட கலைஞர்கள், சிகை அலங்கார கைவினைஞர்கள், வீட்டு உதவியாளர்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்கள், லேத் இயந்திர இயக்குநர்கள், மோட்டார் திருத்துநர்கள், எம். எஸ் ஆபீஸ், டிஜிட்டல் பிரிண்டர்கள், தையற்காரர்கள், காய்ச்சி இணைப்பவர்கள், இணைய வடிவமைப்பாளர்கள் போன்ற துறைகள் தொடர்பாக மிகையான பயிற்சி வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் வகையான பயிற்சி வழங்கல்கள் குறைக்கப்படல் வேண்டும் அல்லது இக் கூடுதல் பயிற்சியாளர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்க வேண்டும்.
- அனுராதபுர மாவட்டத்தில், பின்வரும் தொழில்கள் தொடர்பாக புதிய பாடநெறிகள் தேவைப்படுகின்றன; மர செதுக்கல் கைவினைஞர், அரிசி ஆலை இயந்திர இயக்குநர்கள், விவசாய உபகரணங்கள்/ இயந்திர தயாரிப்பாளர்கள், அரிசி ஆலை இயந்திர/ உபகரண தயாரிப்பாளர்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பவியலாளர்கள்.
- பொலன்னறுவை மாவட்டத்தில், தொலைக்காட்சி/ வானொலி திருத்துநர்கள், அலுமினிய சட்டகம் புனைபவர்கள், ஹோட்டல் வேலையாளர்கள், அழகுகலை நிபுணர்கள், கணனி பிரயோக உதவியாளர்கள், பிரம்பு உற்பத்தியாளர்கள், தச்சர்கள், காசாளர்கள், சபையற்காரர்கள், கணனி இயக்குநர்கள், கணனி தொழில்நுட்பவியலாளர்கள், இலத்திரனியல், தோட்ட வேலையாளர்கள், கொல்லர், சுகாதார பராமரிப்பு தொழிலாளர்கள், பேஸ்ட்ரி தயாரிப்பவர்கள், அரிசி ஆலை இயந்திர இயக்குநர்கள் மற்றும் ரைல் பதிப்பவர்கள் போன்ற தொழில்கள் தொடர்பான பயிற்சி வழங்கல்கள் அதிகரிக்கப்படல் வேண்டும்.
- பொலன்னறுவை மாவட்டத்தில் விளம்பரப்படுத்துநர்கள், வெதுப்புநர்கள், டிஜிட்டல் பிரிண்டர்கள், இலத்திரனியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்கள், பொறிவலர்கள், மோட்டார் திருத்துநர்கள், எம். எஸ் ஆபீஸ், குழாய் பொருத்துநர்கள், போன்ற துறைகள் தொடர்பான பயிற்சி வழங்கல்கள் குறைக்கப்படல் வேண்டும். அத்துடன் பயிற்சியாளர்களுக்கு வேறு மாகாண அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்க வேண்டும்.
- மர செதுக்கல் கைவினைஞர்கள், அரிசி ஆலை இயந்திர இயக்குநர்கள், விவசாய உபகரணங்கள்/ இயந்திர தயாரிப்பாளர்கள், அரிசி ஆலை இயந்திர/

உபகரண தயாரிப்பாளர்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பவியலாளர்கள் போன்ற புதிய பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

**வடமத்திய மாகாணத்திற்கான 2015 - 2020 ஆம் ஆண்டு வரையான செயற்திட்டம்**

அடையாளம் காணப்பட்டுள்ள நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக பல்வேறு நிறுவகங்களினை அடையாளம் காணுதல்/ வளங்களை ஒதுக்கீடு செயதல்/ நிதி தேவைப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைத்தல் என்பவற்றின் பொரட்டு TVEC இற்காக முன்மொழியப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கிய விரிவான செயற்திட்டம் பின்வருமாறு. இந் நடவடிக்கைகளின் நோக்கங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.1: செயற்திட்டம்**

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| 6.1 | பாரிய கொள்கை மற்றும் ஒழுங்கமைப்பு சூழலினை உருவாக்குதல் | 6.1.1. education தொழிற் கல்வி, பொதுக் கல்வி மற்றும் உயர் கல்வி ஆகியவற்றிற்கிடையே ஒத்துழைப்பு மற்றும் கூட்டு முடிவெடுக்கும் ஓர் ஒழுங்கமைப்பு பொறிமுறையினை உருவாக்குதல் | | TVEC |
| | | 6.1.2. வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கையினை குறைத்தல் | | TVEC |
| | | 6.1.3. திறனற்ற மற்றும் பகுதி திறன் மிக்க தொழிலாளர்களை மட்டுப்படுத்துவதன் மூலம் சகல நடவடிக்கைகளிலும் NVQ தகுதி பெற்ற நபர்களை ஓர் கட்டாய அடிப்படையில் பயன்படுத்தும் நிலைமையினை நிறுவகங்கள் | | TVEC |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | மற்றும் தொழில்வழங்குநர்களிடையில் ஏற்படுத்தல். | | |
| | | 6.1.4. ஒரு உரிமம் வழங்கும் முறைமை மூலம் சேவை பெறுநர்களுக்கு உதவும் பொருட்டு குறைந்தபட்ச பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் தொடக்கம் கூடியளவில் பயிற்சியளிக்கப்பட்ட (சிறந்த) தொழிலாளர்கள் வரையில் வரிசைப்படுத்தும் ஓர் தொழில்முறை தரமுறை அமைப்பினை உருவாக்குதல். | | TVEC |
| | | 6.1.5. நிரந்தர ஊழியர்களுக்கு பதிலாக, நிறுகங்களின் வழக்கமான பணியாளர்களாக பயிலுநர்களை பயன்படுத்துவதை மட்டுப்படுத்தும் சட்டங்களை அறிமுகப்படுத்துதல் | | TVEC |
| | | 6.1.6. **முச்சக்கர வண்டிகளின் பயன்பாடானது இளைஞர்களிடையில் தொழிற்கல்விக்கான கேள்விகளில் தடைகளை ஏற்படுத்துகின்றமையினால்** முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கான வயது வரம்பினை ஏற்படுத்தும் சட்டங்களை அறிமுகப்படுத்தல். | | TVEC |
| | | 6.1.7. தேசிய கல்வி ஆணைக்குழு, | | TVEC |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் TVEC ஆகியவற்றின் ஆணையாளர்களிற்கிடையில் (தலைவர்) இணைப்பு கூட்டங்களினை நடாத்துவதன் மூலம் இந் நிறுவகங்களிற்கிடையில் நிரந்தர ஒத்துழைப்பினை ஸ்தாபித்தல். | | |
| | | 6.1.8. தனியார் உயர் கல்வி நிறுவகங்களை ஒழுங்கமைக்கும் பொறிமுறையினை உருவாக்குதல் ஏனெனில் இந் நிறுவகங்கள் எதிர்காலத்தில் அனேகமான மாணவர்களுக்கு அலுவலகம் சார்ந்த வேலைவாய்ப்புகளை ஊக்குவித்து வருவதனால் TVEC பாடநெறிகளுக்கான கேள்விகள் பாதிக்கப்படுகின்றன. | | TVEC |
| 6.2 | பயிற்சி நிறுவகங்களிற்காக புதுப்பிக்கப்பட்ட பூரணமான தகவல் தொகுப்பினை உருவாக்குத | 6.2.1 ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்குமான தொழிலாளர் தரவு தளத்தினை பேணுதல். | | TVEC/PC |
| | | 6.2.2 க.பொ.த (சா/ த) மற்றும் க.பொ.த (உ/ த) ஆகியவற்றின் பின்னர் பல்வேறுபட்ட கல்வி நடவடிக்கைகளை தொடரும் நபர்கள் தொடர்பான தரவுகள் காணப்படல் வேண்டும். | | TVEC/PC |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | ல் | 6.2.3 பல்கலைக்கழகங்களிற்கான நுழைவு தகைமைகள் கிடைக்கப்பெறாமையினால் வெளிவாரி பட்டப்படிப்புகளை தொடருகின்ற நபர்கள் தொடர்பான தரவுகள் பேணப்படல் வேண்டும். | | TVEC/PC |
| | | 6.2.4 இம் மாகாணத்திலிருந்து ஏனைய மாகாணங்களிற்கு அல்லது வேறு நாடுகளிற்கு குடிபெயர்கின்ற நபர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகள் பேணப்படல் வேண்டும். | | TVEC/PC |
| 6.3 | வாழ்வாதார தொழிலாளர்களுடைய தொழில்சார் திறன்களை மேம்படுத்தல் | 6.3.1 விழிப்புணர்வினை அதிகரிக்கும் வகையிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையினை குறைத்தல் | | PC/ TIs |
| | | 6.3.2 திறன்கள் தொடர்பான பொதுவான பயிற்சியாளர்களை விடுத்து விடயம் சார்ந்த விசேட பயிற்சியாளர்களை பயன்படுத்தல் | | PC/ Tis |
| | | 6.3.3 நடமாடும் மற்றும் கள அடிப்படையிலான திறன்கள் பயிற்சி திட்டங்களை அறிமுகம் செய்தல் வேண்டும். | | PC/ Tis |
| | | 6.3.4 பிரதேச செயலக பிரிவு மட்டங்களில் பிராந்திய கைத்தொழிற்துறை/ வியாபார ஆரம்ப நிலையங்களை ஸ்தாபித்தல் | | TVEC/PC |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப்பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| 6.4 | தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் பொருட்டு ஏற்றத்தாழ்வுகளை குறைத்து கூடிய அணுகல்களை ஏற்படுத்தல் | 6.4.1 மாணவர்களுக்கு புலமை பரிசில்கள் மற்றும் நிதியுதவிகளை வழங்குதல். | | TVEC |
| | | 6.4.2 வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் காணப்படும் பாடநெறிகளுக்கான மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல் | | TVEC/TIs |
| | | 6.4.3 TVEC ஆனது ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் NVQ மட்டம் 4 - 6 வரையான பாடநெறிகளை மேற்கொள்ளும் ஆகக் குறைந்தது ஒரு நிறுவகத்தினையேனும் ஸ்தாபித்தல் வேண்டும். | | TVEC/TIs |
| | | 6.4.4 குறிப்பாக நடுத்தர திறன்மிக்க தொழிலாளர்களுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை இலக்காக கொண்டு புதிய பாடநெறிகளை அபிவிருத்தி செய்தல். | | TIs |
| | | 6.4.5 அனைத்து பயிற்சி நிறுவகங்களும் அவற்றின் பயிற்சிகளை குறிப்பிட்ட கேள்விகளுக்கு பொருந்தக்கூடியவாறு மேற்கொள்வதனை கட்டாயமாக்குதல் வேண்டும். | | TVEC/TIs |
| | | 6.4.6 அனுராதபுர மாவட்டத்தில் பதவியா, மதவாச்சி, | | TIs |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப்பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | இராஜாங்கனை மற்றும் தலாவை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் புதிய பயிற்சி நிறுவகங்கள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். | | |
| | | 6.4.7 மிகக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களை கொண்ட பயிற்சி நிலையங்களை ஒன்றிணைத்தல் அல்லது ஒருமித்து இயங்கச்செய்தல். | | TVEC/TIs |
| | | 6.4.8 பொலன்னறுவை மாவட்டத்தில் NVQ மட்டம் 5 மற்றும் 6 இற்குரிய பாடநெறிகளை மேற்கொள்ளும் பயிற்சி நிலையங்களை ஸ்தாபித்தல். | | TVEC/TIs |
| | | 6.4.9 அரிசி ஆலை இயந்திர இயக்குநர்கள், அரிசி ஆலை இயந்திரம் உதிரி பாகங்களை தயாரிப்பவர்கள், அறுவடைக்குப் பிந்திய உபகரணங்களை தயாரித்தல், உணவு பதனிடல் தொழில்நுட்பம், உயிர்-தொழில்நுட்பம், விவசாயம் சார்ந்த கைத்தொழிற்துறை தொழில்நுட்பம், மர வடிவமைப்பு கைவினை தொழில்நுட்பம், புராதன உற்பத்தி தொழில்நுட்பம் ஆகியன தொடர்பான புதிய பாடநெறிகள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் | | TIs |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். | | |
| | | 6.4.10 அனுராதபுர மாவட்டத்தில் வெதுப்பகம், முடி திருத்துநர்கள், தச்சர்கள், காசாளர்கள், மின்னியலாளர்கள், கொல்லர்கள், சுகாதார பராமரிப்பு தொழிலாளர்கள், மேசன்கள், புகைப்பட வடிவமைப்பாளர்கள், புகைப்படம் எடுத்தல், மருந்தாளர்கள், ஹோட்டல் தொழிலாளர்கள், செயலாளர்கள், வரவேற்பாளர்கள் போன்ற துறைசார் பயிற்சி வழங்கல்கள் அதிகரிக்கப்படல் வேண்டும். | | TIs |
| | | 6.4.11 அனுராதபுர மாவட்டத்தில், குறிப்பாக தொலைக்காட்சி/ வானொலி திருத்துநர்கள், விளம்பரதாரர்கள், அலுமினிய சட்டகம் புனைபவர்கள், வெதுப்புநர்கள், அழகு கலைஞர்கள், கணனி பிரயோக உதவியாளர்கள், சமையற்காரர்கள், கணனி இயக்குநர்கள், கணனி தொழில்நுட்பவியலாளர்கள், வரைபட வடிவமைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், தோட்ட வேலை செய்பவர்கள், வரைபட கலைஞர்கள், சிகை அலங்கார கைவினைஞர்கள், வீட்டு | | TIs |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | உதவியாளர்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்கள், லேத் இயந்திர இயக்குநர்கள், மோட்டார் திருத்துநர்கள், எம். எஸ் ஆபீஸ், டிஜிட்டல் பிரிண்டர்கள், தையற்காரர்கள், காய்ச்சி இணைப்பவர்கள், இணைய வடிவமைப்பாளர்கள் போன்ற துறைகள் தொடர்பாக மிகையான பயிற்சி வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் வகையான பயிற்சி வழங்கல்கள் குறைக்கப்படல் வேண்டும் அல்லது இக் கூடுதல் பயிற்சியாளர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்க வேண்டும். | | |
| | | 6.4.12 அனுராதபுர மாவட்டத்தில், பின்வரும் தொழில்கள் தொடர்பாக புதிய பாடநெறிகள் தேவைப்படுகின்றன; மர செதுக்கல் கைவினைஞர், அரிசி ஆலை இயந்திர இயக்குநர்கள், விவசாய உபகரணங்கள்/ இயந்திர தயாரிப்பாளர்கள், அரிசி ஆலை இயந்திர/ உபகரண தயாரிப்பாளர்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பவியலாளர்கள். | | TIs |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | 6.4.13 பொலன்னறுவை மாவட்டத்தில், தொலைக்காட்சி/ வானொலி திருத்துநர்கள், அலுமினிய சட்டகம் புனைபவர்கள், ஹோட்டல் வேலையாளர்கள், அழகுகலை நிபுணர்கள், கணனி பிரயோக உதவியாளர்கள், பிரம்பு உற்பத்தியாளர்கள், தச்சர்கள், காசாளர்கள், சபையற்காரர்கள், கணனி இயக்குநர்கள், கணனி தொழில்நுட்பவியலாளர்கள், இலத்திரனியல், தோட்ட வேலையாளர்கள், கொல்லர், சுகாதார பராமரிப்பு தொழிலாளர்கள், பேஸ்ட்ரி தயாரிப்பவர்கள், அரிசி ஆலை இயந்திர இயக்குநர்கள் மற்றும் ரைல் பதிப்பவர்கள் போன்ற தொழில்கள் தொடர்பான பயிற்சி வழங்கல்கள் அதிகரிக்கப்படல் வேண்டும். | | TIs |
| | | 6.4.14 பொலன்னறுவை மாவட்டத்தில் விளம்பரப்படுத்துநர்கள், வெதுப்புநர்கள், டிஜிட்டல் பிரிண்டர்கள், இலத்திரனியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்கள், பொறிவலர்கள், மோட்டார் | | TIs |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | திருத்துநர்கள், எம். எஸ் ஆபீஸ், குழாய் பொருத்துநர்கள், போன்ற துறைகள் தொடர்பான பயிற்சி வழங்கல்கள் குறைக்கப்படல் வேண்டும். அத்துடன் பயிற்சியாளர்களுக்கு வேறு மாகாண அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்க வேண்டும். | | |
| | | 6.4.15 மர செதுக்கல் கைவினைஞர்கள், அரிசி ஆலை இயந்திர இயக்குநர்கள், விவசாய உபகரணங்கள்/ இயந்திர தயாரிப்பாளர்கள், அரிசி ஆலை இயந்திர/ உபகரண தயாரிப்பாளர்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பவியலாளர்கள் போன்ற புதிய பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். | | TIs |
| | | 6.4.16 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் கணனி பிரயோக உதவியாளர் மற்றும் ஏனையவை தொடர்பாக மாணவர்களின் எண்ணிக்கையினை குறைத்தல் வேண்டும். | | TIs |
| | | 6.3.17 தொழிற்கல்வி மற்றும் பயிற்சியினை வழங்குகின்ற அனைத்து அரச | | TVEC |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | நிறுவகங்களுடனும் ஒருங்கிணைப்பு மற்றும் உறவுகளை விருத்தி செய்தல். | | |
| 6.5 | பாடநெறிகளின் தரம் மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றினை மேம்படுத்துதல் | 6.5.1 அனைத்து பாடநெறிகளிற்கும் NVQ முறைமையினை கட்டாய அடிப்படையில் நடைமுறைப்படுத்துதல். | | TVEC |
| | | 6.5.2 NVQ அல்லாத அனைத்து பாடநெறிகளையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் | | TVEC |
| | | 6.5.3 அனைத்து பாடநெறிகளுக்கும் திட்டமிடப்பட்ட முறையான உள்ளக பயிற்சிகளை அமுல்படுத்தல் வேண்டும். | | TIs |
| | | 6.5.4 அனைத்து நிறுவகங்களிலும் உள்ளக தர நிர்ணய அலகுகளை ஸ்தாபித்தல் | | TVEC/TIs |
| | | 6.5.5 தரம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ள கைத்தொழிற்துறை ஒருங்கிணைப்புகளை ஏற்படுத்தல் வேண்டும். | | TVEC/TIs |
| | | 6.5.6 அனைத்து பாடநெறிகளுக்குமான பாடத்திட்டங்கள் அடிக்கடி மற்றும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். | | TVEC/TIs |
| | | 6.5.7 மாணவர்களின் மனோநிலையினை மாற்றியமைப்பதற்கான பாடநெறிகள் | | TVEC/TIs |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். | | |
| | | 6.5.8 கட்டண முறைமையினை தொடர்ச்சியாக மாற்றியமைப்பதற்கான ஓர் பொறிமுறையினை அறிமுகம் செய்தல் வேண்டும். | | TVEC/TIs |
| | | 6.5.9 அனைத்து நிறுவகங்களும் கைத்தொழிற்துறையின் உதவியினை பெற்றுக்கொள்வதற்காக பழைய மாணவர் சங்கங்களை நிறுவ வேண்டும். | | TIs |
| | | 6.5.10 அனைத்து நிறுவகங்களும் தொழில்வழங்குநர்களின் திருப்தி ஆய்வுகளை நடாத்த வேண்டும் மற்றும் அவர்களின் நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தினை விளங்கிக்கொள்ளும் பொருட்டு விரிவான கற்கையினை மேற்கொள்ளல் வேண்டும். | | TIs |
| | | 6.5.11 பயிற்சி நிறுவகங்கள் விளம்பரங்களை மேற்கொள்வதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த முறையினை பயன்படுத்த வேண்டும். | | TIs |
| | | 6.5.12 பாடநெறிகளை ஊக்குவிக்கும் நோக்கோடு செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை | | TIs |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | தொடர்ச்சியாக நடாத்துதல் வேண்டும். | | |
| | | 6.5.13 அரசியல்வாதிகள் பல்வேறுபட்ட TVEC நிறுவகங்கள் தொடர்பாக அறிந்திருத்தல் வேண்டும் எனவே அவர்களால் தொழில்களை தேடுகின்ற வருங்கால மாணவர்களுக்கு அறிவுறுத்த முடியும். | | TVEC/PC/ TIs |
| | | 6.5.14 பெற்றோர்களுக்கான கிராமிய அல்லது சமூக அளவிலான விழிப்புணர்வு திட்டங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும். | | TIs/PC |
| | | 6.5.15 நிகழ்ச்சித்திட்ட ஊக்குவிப்பு செயற்பாடுகளிற்காக திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ளல். | | TVEC/PC |
| | | 6.4.16 மனிதவள அபிவிருத்தி உதவியாளர் மற்றும் திறகள் அபிவிருத்தி உதவியாளர்கள் ஆகியோருக்கிடையிலான முரண்பாடுகளை தீர்த்து வைத்தல். | | TVEC/PC |
| | | 6.5.16 அனைத்து மாணவர்களுக்கும் பிரதானமான வெளிநாட்டு மொழிகள் தொடர்பான பயிற்சிகளை அளித்தல் | | TVEC/TIs |
| 6.6 | பயிற்றுநர்கள் மற்றும் | 6.6.1 அனைத்து அலுவலர்களுக்கும் வாழ்நாள் முழுவதுமான கட்டாய | | TVEC |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | கணிப்பீட்டாளரகள் ஆகியோரின் தரங்களை மேம்படுத்தல் | கற்றல் சந்தர்ப்பங்களை அளித்தல் | | |
| | | 6.6.2 அனைத்து அலுவலர்களுக்கும் பட்டப்படிப்பு/ பட்டப்பின் படிப்பு மட்ட பயிற்சிகளை அளித்தல். | | TVEC |
| | | 6.6.3 அனைத்து கணிப்பீட்டாளர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு சர்வதேச அறிமுகங்களை அளித்தல் | | TVEC |
| 6.7 | பொருத்தமான நிறுவக சூழலினை உருவாக்குதல் | 6.7.1 பொதுவான ஒழுங்கமைப்பு சட்டகத்தினை உருவாக்குதல் | | TVEC/PC |
| | | 6.7.2 கட்டாய அடிப்படையில் அனைத்து தொழிற்கல்வி மற்றும் பயிற்சி பாடநெறிகளை சான்றுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | TVEC |
| | | 6.7.3 அரச சார்பற்ற நிறுவகங்களினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தரத்தினை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | TVEC |
| | | 6.7.4 அனைத்து பாடநெறிகள்/ தொழில்கள் தொடர்பாக திறன் உரிமம் வழங்கும் முறைமையினை அறிமுகம் செய்தல். | | TVEC/PC |
| | | 6.7.5 அமுல்படுத்தப்படக்கூடிய சட்டவாக்கத்தினூடாக தகவல்கள் மற்றும் வளங்கள் வழங்கல்கள் மற்றும் பரிமாற்றங்களை | | TVEC/TIs |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | நிறுவகங்களிற்கிடையிலும் மற்றும் அமைச்சுகளிற்கிடையிலும் உருவாக்குதல் | | |
| 6.8 | அனைத்து திறன்மிக்க தொழிலாளர் வகைகள் மற்றும் பயிற்சி நிறுவகங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் தரப்படுத்தல் | 6.8.1 பல்வேறு மட்ட பயிற்சிகளை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் சேவைகளின் தரங்களினை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு தொழில்களும் அனுமதிப்பத்திர முறைமை மூலம் தரப்படுத்தப்படல் வேண்டும். | | TVEC/PC |
| | | 6.8.2 பொது மற்றும் உயர் கல்வி போன்று புதிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி சட்டத்தின் மூலம் அனைத்து தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவகங்களை ஒழுங்குபடுத்துதல் | | TVEC/PC |
| | | 6.8.3 அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற பயிற்சி நிறுவகங்களுக்கும் NVQ முறைமையினை கட்டாயமாக்குதல் | | TVEC |
| | | 6.8.4 அனைத்து அரச நிறுவகங்களாலும் வழங்கப்படும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கான TVEC இன் கடப்பாட்டினை அதிகரித்தல் | | TVEC |
| | | 6.8.5 அனைத்து அரச | | TVEC |

| | நோக்கங்கள் | செயற்பாடுகள் | வளங்கள் அல்லது நிதி தேவைப் பாடுகள் | நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | திட்டங்களிலும் சகல அரசாங்க ஒப்பந்தகாரர்களும் NVQ தகைமை பெற்ற திறன்மிக்க தொழிலாளர்கள் பயன்படுத்துவதை கட்டாயப்படுத்தல் வேண்டும். | | |

**6.3. வரையறைகள்**

இப் பகுப்பாய்வுகள் மற்றும் பரிந்துரைகள் என்பன பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டவையாகும். இவ் வரையறைகள் எந்தவொரு விஞ்ஞான முன்கணிப்பு மற்றும் கொள்கை சட்டகம் ஆகியன தொடர்பான குறைபாடுகளாக எடுக்கமுடியாது ஏனெனில் உண்மையான தகவல்கள் கிடைக்கப்பெறாமை, எதிர்காலத்தை பற்றிய அபாயங்கள், எதிர்கால விளைவுகளின் நிச்சயமற்ற தன்மை, மாற்றமடைந்துவரும் தொழிற்துறை மற்றும் சமூக இயக்கவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் என்பன எதிர்காலத்திற்காக முன்மொழியப்பட்ட கணிப்புகள், கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை மாற்ற முனைகின்றன.

இதன் பெறுபேறுகளும் பரிந்துரைகளும் பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்ட ரீதியில் செல்லுபடியானவையாகும்:

a. பொருளாதார முன்கணிப்புகள் பல்வேறு அபாயங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளால் பாதிக்கப்படுகின்றன. எதிர்வுகூறல்கள் பொதுவாக தற்போதய மற்றும் மிக சமீபத்திய கால சம்பவங்களை அடிப்டையாக கொண்டவை ஏனெனில் ஜோதிடம் தவிர்ந்த ஏனைய சாத்தியமான வழிகள் எதுவும் இல்லாத காரணத்தினாலாகும். அறிவியல் பொருளாதார முன்கணிப்புகள் பொதுவாக முன்னணி பொருளாதார குறிகாட்டிகள் மற்றும் ஏனைய சிக்கலான பொருளாதார/ சமூக தரவுகள் என்பவற்றின் விளைவுகளை கொண்டுள்ளது. இந்த ஒட்டுமொத்த கணிப்புகள் வரலாறு மீண்டும் மீண்டும் இடம்பெறுவதால் வரலாறானது எதிர்காலத்தை முன்கூட்டியே கணிக்கின்றது என்ற அடிப்படையில் பிரதான எடுகோள்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பொருளாதார, சமூக, தொழில்நுட்ப மற்றும் அரசியல் அமைப்பு சூழ்நிலைகளில் எதிர்பாராத

விதமாக ஏற்படும் மாற்றங்களினால், இக் கணிப்புகளின் துல்லிய தன்மையானது மிகவும் குறைந்து விடுகின்றது. இது எதிர்வுகூறலின் பங்கினை குறைத்து மதிப்பிடுவதற்காக அல்ல. நாம் எதிர்வுகூறியுள்ள தகவல்களை எச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டியுள்ளமையினால், எம்மால் குறைந்தபட்ச எதிர்கால எதிர்பார்ப்புகளை உருவாக்க முடியும்.

b. மாகாணத்திலுள்ள தொழிலாளர்களின் போக்குகள் பற்றிய எதிர்வுகூறல்கள் மாவட்ட அடிப்படையிலான தொழிலாளர்களின் வளர்ச்சி வீதம் தொடர்பான துல்லியமான தகவல்கள் காணப்படாமை, அதன் வளர்ச்சியின் இயல்புகள், க.பொ.த (சா/ த) மற்றும் க.பொ.த (உ/ த) என்பவற்றில் சித்திபெற தவறும் அனைவரும் தொழிலாளர் சந்தைகளினுள் நுழைகின்றனரா என்பதனை கண்டறிவதற்கு அந்த வகையில் அவர்கள் TVEC நிறுவக வலையமைப்பின் ஊடாக கிடைக்கப்பெறுகின்ற பல்வேறுபட்ட பாடநெறிகளை தொடர்வதற்கு விரும்புவர் எனவே அவர்கள் எவ்வாறான தேர்வுகளை மேற்கொள்கின்றனர் என்பவற்றினால் பாதிக்கப்படுகின்றது. ஆகவே, எதிர்வுகூறலில் பிழைகள் அல்லது புறக்கணிப்புகள் ± 10% ஆக பயன்படுத்தப்படுவதுடன், அந்த வகையில் கணிப்புகள் 90% செல்லுபடியானவையாக காணப்படும்.

c. ஒட்டுமொத்த மாகாணத்திலும் வாழ்வாதார தொழிலாளர்களுக்கான பயிற்சி தேவைகள் வரையறைகளுக்கு உட்பட்டவையாக காணப்படவில்லை. மாகாணத்தில் ஏராளமான நபர்கள் முறைசாரா துறைகளில் ஈடுபட்டுள்ளமையினால் அனைத்து தொழில்களிலும் விசேட திறன்சார் பயிற்சிகள் தேவைப்படும் நபர்களின் மொத்த எண்ணிக்கையினை அடையாளம் காண முடியாதுள்ளது. இந்த ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்புகள் ஏற்கெனவே இரண்டு மாவட்டங்களிலும் நடாத்தப்பட்ட விடய ஆய்வுகளின் அவதானிப்புகளுடன் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையினை இணைத்தலினை அடிப்படையாக கொண்டுள்ளது. மாகாணத்திலுள்ள மொத்த வாழ்வாதார தொழிலாளர்களுக்கான ஓர் விரிவான திட்டத்திற்கு மாகாணத்தின் மக்கள்தொகை அடிப்படையிலான ஆய்வானது தேவைப்படுகின்றது. இருப்பினும், இவ் ஆய்வின் முடிவுகள், அடையாளம் காணப்பட்ட எண்ணிக்கைகள் மற்றும் அவர்களுக்கு தேவைப்படும் திறன்சார் பயிற்சிகளின் வகைகள் ஆகியவற்றுக்கு பொருத்தமாகின்றது.

d. அடுத்த ஐந்து ஆண்டுகளிற்கான தொழிலாளர் தேவைகளிற்கான எதிர்வுகூறல்களை அடிப்படையாக கொண்ட தொழில்வழங்குநர்களின் கருத்துகள் பல வரையறைகளுக்கு உட்படுகின்றது. தொழில்வழங்குநர்கள் தாம் வரிசெலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என பயப்படுவதன் காரணமாக

எதிர்கால மற்றும் தற்போது நிலவுகின்ற தொழிலாளர்களுக்கான கோரிக்கைகளை வெளிப்படுத்தவில்லை. தொழில்வழங்குநர்கள் தாம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றினை செலுத்தவேண்டி ஏற்படும் என்ற காரணத்தினால் எதிர்காலத்திற்கான பணியாளர்களின் எண்ணிக்கையினை குறைத்து மதிப்பிடுகின்றனர். EPF, ETF மற்றும் வருமான வரி என்பவற்றுக்கு பணம் செலுத்துவதை தவிர்க்கும் பொருட்டு பெரும்பாலான தொழில்வழங்குநர்கள் குறுகிய கால மற்றும் தற்காலிக மற்றும் அன்றாட தொழிலாளர் என்ற அடிப்படையில் தொழில்களை வழங்குகின்றனர். இதன் விளைவாக அனேகமான வியாபார நிறுவகங்களில் நிரந்தரமான தொழிலாளர்கள் காணப்படாத நிலைமைகள் உள்ளன. தொழில்வழங்குநர்கள் சந்தையில் வழங்கப்படும் சம்பளத்திற்கு சமமான அளவுடைய சம்பளத்தினை வழங்குவதற்கு அவசியமான பயிற்சிபெற்ற தொழிலாளர்களை விட பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் பயிலுநர்களையே பயன்படுத்துவதற்கு விரும்புகின்றனர். சில தொழில்வழங்குநர்களின் பதில்கள் அவர்களுடைய சொந்த அரசியல் கருத்துகளுக்கு உட்பட்டதாக அமைந்திருந்தது. அவர்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக இருக்கும்போது, வியாபாரமானது ஓர் சிறந்த விடயமல்ல என்ற கருத்தை வெளிப்படுத்தியதுடன், தாம் வியாபாரத்தினை விட்டு வெளியேற வேண்டும் எனவே எதிர்காலத்தில் புதிய தொழிலாளர்களை பணிக்கு அமர்த்திக்கொள்ளவேண்டிய அவசியமில்லை என தெரிவித்தனர். பெரும்பாலான வியாபாரங்கள் குறுகிய கால நோக்குடையவை என்பதனால், அவை எதிர்கால வியாபார திட்டத்தினை கொண்டிருக்கவில்லை, எனவே எதிர்காலத்திற்கான எந்தவொரு வேலைவாய்ப்பு பற்றிய தரவுகளையும் அவைகளால் வழங்க முடியாது. பெரும்பாலான நிறுவகங்கள் தற்போதைய வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்துவதுடன் எதிர்கால நடவடிக்கைகளை பற்றி மிகவும் நிச்சயமற்ற எதிர்பார்ப்புகளே அவர்களிடம் உள்ளன, எனவே விரிவாக்குவதற்கான திட்டமானது அவர்களிடம் காணப்படாமையினால் எதிர்காலத்தில் தொழிலாளர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. எனவே, கைத்தொழிற்துறைகள் தொடர்பான தொழிலாளர் கோரிக்கைகளின் முன்கணிப்புகள் ± 10% பிழைகள் மற்றும் புறக்கணிப்புகளுடன் செல்லுபடியாகும், அதாவது முன்கணிப்புகள் 90% சரியானவையாகும்.

e. பொருளாதாரம் அல்லது கைத்தொழிற்துறை மாற்றங்களின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள் மீறப்படுமாயின் அல்லது நிறுத்திவைக்கப்படாவிடின் கைத்தொழில்துறையின் வளர்ச்சியினை அடிப்படையாக கொண்ட முன்கணிப்பானது வரையறைகளுக்கு உட்படும்.

எனவே, முன்கணிப்புகள் ± 10% பிழைகள் மற்றும் புறக்கணிப்புகளுடன் செல்லுபடியாகும், அதாவது முன்கணிப்புகள் 90% சரியானவையாகும்.

f. கொள்கைகள் மற்றும் பொருளாதார கட்டமைப்பில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் உருவாக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஆற்றலினை பாதிக்கின்றன, எனவே முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அவை அரசியல் அதிகாரங்களினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

g. அமைச்சுகள் இடையிலும் மற்றும் நிறுவகங்களிடையிலும் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பன காணப்படாமையானது துல்லியம் மற்றும் செயற்திறன் என்பவற்றினை பாதிக்கின்றது. எனவே அவை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

h. நிறுவக மட்ட தகவல் பற்றாக்குறையானது எந்தவாரு அர்த்தமுள்ள திட்டமிடல் செயற்பாட்டினையும் தடுக்கின்றது.

i. வடமத்திய மாகாணத்திலுள்ள நிலவும் மிகக் குறைந்த ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பன ஒவ்வொரு நிறுவகங்களினதும் பயிற்சி வழங்கல்களை பாதிக்கின்றமையானது மிகையான கேள்வி மற்றும் மிகையான வழங்கல் என்பவற்றுக்கு வழிவகுக்கின்றன.